திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பால் மாடுகள் வழங்குகிறபோது பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலமாக வழங்குகிறார்கள். மதுரை மாவட்டத்தில் முதல் பால் மாட்டிற்கு கடன் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபோது

இயங்கிக் கொண்டிருக்கிற பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குத் தான் கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. புதியதாக பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு முதல் பால் மாடு பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. ஆகவே கொடுக்கப்படுகிற முதல் பால்மாடு மானியத்தை முழுக்க முழுக்க புதியதாக துவங்கப்படுகிற பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பால் மாடுகள் வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட கடன் சென்ற ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக அவர்களால் திருப்பி கொடுக்க முடியாமல் இருக்கிறது. மீண்டும் அபிவிருத்தி செய்ய புதிய லோனும் வாங்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டிலே பால் மாடுகள் வாங்குவதற்காக வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்துவிட்டு, புதியதாக அவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் எப்போதுமே ரத்து செய்வதைப்பற்றித் தான் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் மத்திய அரசினுடைய திட்டம்; ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம். இதிலே விவசாயிகளாக இருக்கிறவர்களுக்கு, விவசாயக் கூலிகளாக இருக்கிறவர்களுக்கு, தினக்கூலிகளாக வேலை செய்கின்றவர்களுக்கு, மானிய அடிப்படையில்தான் இந்தக் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதில் மூன்றில் ஒருபாகம் மானியம். அதுவும் ஆதி திராவிடர்களாக இருந்தால் 50 சதவீதம் மானியம். அப்படித்தான் கொடுக்கப்படுகிறது. சுலபத் தவணைகளில் இந்தக் கடன்கள் கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, ரத்து செய்ய வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்காது. வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை உபாதைகள் ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டு தான் இருக்கின்றன. அதற்காகத்தான் இந்தத் திட்டங்களை எல்லாம் நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இந்தக் கடன்களை ரத்து செய்ய முடியாது. அப்படியே ரத்து செய்வதென்றாலும் மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டும். மாநில அரசாங்கம் இதில் ஒன்றும் செய்ய இயலாது.

1984 மார்ச் 28]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்மாடு வாங்குவதற்கான மானியத் தொகைகளை ஊராட்சி ஒன்றியங்கள் உடனடியாகக் கொடுத்து விடுகின்றன. ஆனால் அந்தக் கடன் தொகையை வழங்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கால தாமதம் செய்கின்றன. ஆகவே, முழுத் தொகையையும் ஊராட்சி ஒன்றியமே பெற்று விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையில் இப்போது செய்ய முடியாது. காரணம் மத்திய அரசாங்கம் சில விதிமுறைகளை வைத்து இருக்கிறது. அவற்றின் அடிப்படையில்தான் சப்சிடி அல்லது மானியம் கொடுத்து வருகிறோம். அதுமட்டுமல்ல. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருப்பவர்கள் கடன் பெறுபவர்கள் விவசாயக் கூலியாக இருப்பார்களானால் செக்யூரிட்டி பர்னிஷ் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கு சில விதிமுறைகளை வைத்து இருக்கிறார்கள். ஆகவேதான், இப்படிப்பட்ட ஏழைமக்களுக்கு செக்யூரிட்டி இல்லாமல் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்லி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால்தான் ஏழை எளிய மக்கள் வளம் பெறமுடியும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். ஆகவே, அப்படிப்பட்ட நிலையை இந்த அரசு சண்டிப்பாக எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய மானியத் தொகையை சிலர் தவறாகச், செலவழிக்கிறார்கள், பயன்படுத்திக்கொள்கிறார்கள். குறிப்பாக ஏழை அரிசனங்களிடத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அதிகமான அளவிற்கு மாடுகள் வாங்க கொடுக்கக் கூடிய கடன்தொகையை சிலர் பெற்றுக்சொள்வதாகத் தெரிகிறது. அப்படி ஏதேனும் புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ? ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படி எங்கேயாவது நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டு புகார் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் போன்றவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவிக்கப்பட்டால், அப்படிப்பட்ட முறையில் கையெழுத்து வாங்கி ஏழை எளிய மக்களுக்கு அந்தக் கடன் போய் சேராத அளவிற்குச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல பிரயோசனமான திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் குறைந்த வருமானம் உள்ள விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் ரூ. 1,000 மானியம், கடன் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். ஆனால், இதிலே ஒரு சங்கடம் என்ன இருக்கிறது என்று சொன்னால், கிராம நல ஊழியர்கள், வங்கியின் அதிகாரிகள், வெட்னரி டாக்டர்கள் போன்றவர்களிடத்தில் அவர்கள் சான்றிதழ் பெற்று வந்தால்தான் கடன் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இதனால், அந்தந்த அதிகாரிகளைச் சென்று பார்த்து வருவதற்கே ஏகப்பட்ட செலவு ஆகிவிடுவதால் இந்த வழிமுறையை மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதிகபட்ச மானியமாக ரூ. 3,000 கொடுக்கலாம். மானியத் தொகை ரூ. 3,000 என்று கொடுக்கிறபோது, கடன் தொகை ரூ. 9,000 வரையில் கூட கொடுக்கலாம். அப்படிப்பட்ட நிலை இப்போது நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி சொன்னதுபோல், இதுபோன்ற விதிமுறைகள் இல்லாவிட்டால் ஊழலுக்கு வழி வகுத்ததாக அமைந்து விடுமோ என்பதால்தான் சில விதிமுறைகளை வைத்துத்தான் அரசாங்கம் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். ஆகவே, அந்த விதிமுறைகளை மாற்றுவதற்கான யோசனை இந்த அரசுக்கு இல்லை.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், முதல் கறவை மாடுகள் வழங்க இருந்த தடையைத் தளர்த்தி, 1983-84ஆம் ஆண்டுக்கான கூடுதல் திட்டத்தில் முதல் கறவை மாடுகள் வழங்க அறிக்கை தயாரித்து அனுப்பும்படி மதுரை மாவட்ட வளர்ச்சி அலுவலரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முதல் பிளானிலும் கொடுக்கவில்லை. இப்போது அடிஷனல் பிளானில் சேர்த்து அனுப்பும்படி கேட்கப்படவில்லை என்று பிராஜக்ட் ஆபீசர் சொல்கிறார். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் இத்திட்டம் பொருந்தும்படி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மதுரை மாவட்டத்தைப் பொறுத்தது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினரின் கேள்வியும் கவனத்தில் கொள்ளப்பட்டு உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த கறவை மாட்டிற்கு மானியம் வழங்கிறபோது, ஊராட்சி ஒன்றியத்தில் கேட்டால் வங்கியில் இருந்து கடன் பெற்று வாருங்கள், தருகிறேன் என்று டி. ஆர். அவர்கள் சொல்வதாகவும், வங்கிகளிடத்தில் கேட்டால், மானியம் பெற்று வாருங்கள் தருகிறோம் என்று சொல்வதாகவும், அதன் காரணமாக விவசாயிகளுக்கு இந்த மானியம், கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இதை ஒரு வரைமுறைப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமைகள் ஒரு சில இடங்களில் இருந்து வருகின்றன, இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே, ஒன்றிய அலுவலர்கள் நேரடியாக கண்காணித்து அந்தக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். ஆகவே, எல்லாக் கடன்களும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தையும், எச்சரிக்கையும் நாம் எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தக் கடனைப் பெறுகின்றவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பினருக்கு 1/3 பகுதி மானியம் என்றும் அரிசனங்களுக்கு பாதி, அதாவது 50 சதவீதம் மானியம் என்றும் தெரிவித்தார்கள். அந்த மானியத் தொகையை வங்கியினர் அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அந்த மானியத் தொகையைப் பயன்படுத்தும் அளவுக்கு வங்கிகள் சரியாகக் கடன் கொடுப்பதில்லை. அப்படி கொடுக்கவில்லை என்று தெரிந்தால் அல்லது புகார் வந்தால் அந்த வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, கொடுக்காததற்கான காரணங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தக் கடன்களை எல்லாம் கொடுப்பது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்தான். ஆகவே, அந்த வங்கிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும் கூட மாநில அரசு நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. மத்திய அரசின் உதவியோடுதான் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே

தான் இந்த நிலைமைகளை எல்லாம் ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக மானியத் தொகை எல்லாம் ஒழுங்காக ஏழை எளிய மக்களுக்கு, அரிசன மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 600 குடும்பங்களுக்கு ஓராண்டில் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை வைத்திருக்கிறோம். 600 குடும்பங்கள் என்ற அந்த இலக்கினை நாம் கண்டிப்பாக எட்டியாக வேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த குறிப்பிட்ட இலக்கினை நாம் ஏற்கெனவே எட்டியுள்ளோம். இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி, முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர எழுத்தர்களாக நியமிக்கும் திட்டம்.

489 —(*வினா எண். 21479) திரு. செ. செம்மலை, திரு. ஜி. கிருஷ்ணராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சிப் பகுதிநேர எழுத்தர்களை, முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களது பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிப்பது பற்றி அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளைக் கேட்கவில்லை. ஆனால், இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஊராட்சி பகுதிநேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசின் பரிசீலனையில் இருக்கிற கருத்துருவை விரைவாகச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இது அரசின் தீவிர பரிசீலைனயில் இருக்கிறது. சீக்கிரம் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஜி. கிருஷ்ணராஜ் : தலைவரவர்களே, இதுபோன்று வேலை செய்பவர்களுடைய சங்கத்தின் மூலமாகக் கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? அதை விரைவிலே பரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலைனயில் இருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, இந்தப் பகுதிநேர ஊழியர்கள் குறைந்த சம்பளம் வாங்குகிறார்கள். அதனால்தான் அவர்கள் பஞ்சாயத்துப் போர்டு பணத்தை சாப்பிடுகின்ற நிலை வந்துவிடுகிறது. இந்தக் குறையைப் போக்க அவர்களுக்கு முழுநேர வேலை கொடுத்து, முழுநேர ஊழியர்களாக்கி, அதிகச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தமிழ்நாட்டைப்பொறுத்த வரையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் போதிய பணவசதி இல்லை. சில ஒன்றியங்களில் பகுதி நேர ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூட பணம் இல்லாத நிலைமை இருக்கிறது. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், சீக்கிரமாக ஒரு முடிவினை, நிரந்தரமான ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்ற முறையிலே நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பகுதிநேர ஊராட்சி ஒன்றிய எழுத்தர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ? அவர்கள் அரசுக்கு என்னென்ன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பல கோரிக்கைகள் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரமான பதிலை அளிக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த பகுதிநேர ஊழியர்களை வரன்முறை செய்கிறபோது கல்வித் தகுதி ஏதாவது அடிப்படையாக வைக்கப்பட்டிருக்கிறதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1984 மார்ச் 28

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்வித் தகுதி ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் பகுதிநேர எழுத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேர எழுத்தர்கள் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இவ்வளவு பேர்கள்தான் பகுதி நேர எழுத்தர்களாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத் தேசித்துள்ளதா? அதற்கு ஏதாவது வரையறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுவும் அந்தக் கோரிக்கைகளில் ஒன்று. ஆகவே அதையும் பரிசீலனை செய்யும்.

ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள்.

490—(*வினா எண் 21661) திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் வாடகைக்கு விட கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வருடக்கணக்காக அவைகளிலிருந்து வருமானம் இல்லாமலிருக்கக் காரணமென்ன?

(இ) பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்க அறைகள் கட்ட திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) போதிய வாடகை கொடுக்க யாரும் முன் வராததால் காலியாக உள்ளது.

(இ) ஆம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த ஈரோடு நகராட்சி பேருந்து நிலையம் அண்மையில் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பேருந்து நிலையம். அதில் அறைகள் கட்டப்பட்டு வாடகைக்கு ஆள் வரவில்லை என்று சொன்னால் அது ஒரு ஆச்சரியமான விஷயம். என்னவென்றே புரியவில்லை. அவற்றை

1984 மார்ச் 28]

வாடகைக்கு கொடுக்க குறிப்பிட்ட நபர்கள் வரவேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் பார்த்து வாடகைக்கு அல்லது குத்தகை மாதிரி நிர்ணயித்து கொடுக்க வேண்டும் என்ற முறை கையாளப் படுகிறதா? அல்லது அரசாங்கமே பகிரங்கமாக அறிவித்து ஏலத்தில் ஏன் அந்தக் கடைகளை விடக் கூடாது? அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள கேள்வி, முதல் தளத்தில் கட்டப் பட்டுள்ள கட்டடங்கள் பற்றியது. அவற்றை ஏன் வாடகைக்குக் கொடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். அவை காலியாக இருக் கின்றனவா அல்லது வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். அது ஆபீஸ் காம்ப்ளெக்ஸ், அவை கடை கள் அல்ல. ஆபீஸ் காம்ப்ளக்ஸ் என்பதில் 'ஏ' பிளாக் 6,207 சதுர அடி. ஆபீஸுக்கு என்று கொடுப்பதற்காக இது கட்டப்பட் டது. அதேபோல் 'பி' பிளாக் 7,403 சதுர அடி. ஆகவே ஒரேயடியாக எடுக்க வேண்டுமென்று சொன்னால்—சில விதி முறைகள் வைத்தோம். ஒரு சதுர அடிக்கு ரூ. 4 என்றளவில் மாத வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்று வைத்து 24-11-1982 அன்று இந்தக் கட்டிடம் முடிக்கப்பட்டது. பின்னால் பல்வேறு நேரங்களில் பிணைப்புத் தொகை எல்லாம் வைத்து உடனடியாக டெண்டர் கோரினோம். ஆனால் டெண்டர் கோரிய போது யாரும் முன்னுக்கு வரவில்லை. கடைசியாக 22-2-1984 அன்று டெண்டர் கோரப்பட்டது. அப்போதும் யாரும் வர வில்லை. இப்போது ரூ. 4 என்பதை ரூ. 2.50 என்று குறைத் திருக்கிறோம். அப்படிக் குறைத்த பின்னர் 22-2-1984 அன்று பல்வேறு விளம்பரங்கள் கொடுத்தும் யாரும் வரவில்லை. யாரா வது குறிப்பிட்ட நபருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. அங்கே இருக்கக்கூடிய நகராட்சிக்கும் அல்லது அங்குள்ள அதிகாரிகளுக்கும் கிடையாது. நீங்கள் கூட இப்போது விருப்பப்பட்டால் அந்த இடத்தை எடுத் துக் கொள்ளலாம். இப்போது ரூ. 2.50 என்று வைத்திருக் கிறோம். குறைந்த வாடகை வைத்திருந்தும்—உங்களைப் போன் றவர்கள் முன்னுக்கு வந்தால் கண்டிப்பாக நகராட்சிக்கு போது மான வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரமணி ஒரு வியா பாரமும் செய்வதில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எந்தக் கடையையும் ஏலத்தில் எடுக்க நான் தயாராயில்லை. அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். ஈரோட்டி லுள்ள இப்படிப்பட்ட ஒரு பெரிய மையத்தில் இப்படி வாடகைக்கு எடுக்க ஆள் வரவில்லை என்பது ஆச்சரியத்தோடு பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். இதற்குக் காரணம் என்ன என்பதை

ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பது என் கருத்து. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் கேட்ட கேள்வி, பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்ட உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறேன். பயணிகள் தங்க வசதியில்லை. இவ்வளவு இடம் கட்டியும் வாடகைக்கு ஆள் வரவில்லை, ஏன்? அந்தப் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு, தண்ணீர் வசதி, சுகாதார வசதி போன்றவற்றிற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா? அது எந்தக் காலத்திற்குள் செய்யப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே' இந்த அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஒன்றரை ஆண்டுகளாக இதிலிருந்து வாடகை வரவில்லை. இதில் அங்கிருக்கக் கூடிய அதிகாரிகள் யாராவது மெத்தனம் காட்டியிருக்கிறார்களா என்பதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று, அப்படி கவனித்துப் பார்த்ததில் இருக்கக்கூடிய அதிகாரிகள் யாரும் மெத்தனம் காட்டவில்லை. அதற்குப்பின்னால் பல்வேறு நிலைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பின்பு 30–12–1982, 24–1–1983, 28–2–1983, 25–5–1983, 9–9–1983,24–10–1983, 23–11–1983, 26–12–1983, 22–1–1984, 22–2–1984 ஆகிய தேதிகளில் நாம் விளம்பரப்படுத்தி இருக்கிறோம். யாரிடமிருந்தும் அதற்கான பிணைப்புத் தொகை வரவில்லை. இவ்வளவு நிலைகளிலும் வரவில்லை. ஆகவே, இருக்கக்கூடிய நிலையை அனுசரித்து, அவைகளுக்கு ஒரு பார்டிஷன் வால் அதாவது தடுப்புச் சுவர் போட்டு, பல்வேறு கட்டிடங்களாக மாற்றி, இந்த அமைப்பை உடனடியாக வாடகைக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமாதிரி கூட உடனடியாக விளம்பரம் செய்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பயணிகள் தங்குவதற்கு ஏற்ப, அங்கே அந்த வசதியுள்ள அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்ற முறையிலே இந்த நகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மதுராந்தகம் நகரத்திலிருந்து விடப்பட்டுள்ள நகரப் பேருந்துகள்.

*491 (*வினா 19561)* **திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரத்திலிருந்து எத்தனை நகரப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

1984 மார்ச் 28]

(ஆ) மேலும் எத்தனை நகரப் பேருந்துகள் விட மனுக்கள் பரிசீலனையில் உள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மதுராந்தக நகரத்திலிருந்து ஐந்து நகரப் பேருந்துகள் பத்து வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன.

(ஆ) மேலும் இரண்டு நகரப் பேருந்துகள் விடுவதற்கான மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், மதுராந்தகம் நகரத்தில் 5 பேருந்துகள், நகரப் பேருந்துகள் விடப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலேயே மதுராந்தகம் தான் பெரிய தாலுகா, அங்கே சுமார் 430 கிராமங்களுக்கு மேல் அதிகமாக இருக்கின்றன. எல்லாக் கிராமங்களையும் இணைப்பு செய்வதற்கு, நகரப் பேருந்துகள் அதிகமாக விடவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதற்கு பஸ் டிப்போ இல்லாத ஒரு குறைபாடு இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே மானிய கோரிக்கையின் மீது பேசுகின்றபோது, மதுராந்தகத்தில் விரைவில் பஸ் டிப்போ ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அது ஏற்பட்டால் தான், அங்கே பேருந்துகள் அதிகமாக விடப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆதலால், அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அங்கே வேண்டுமானால் டிப்போவைப் பொறுத்தவரையில், இடத்தைத் தேர்ந்தெடுத்து, உடனடியாக இந்த நடவடிக்கையை எடுக்கலாம். அதற்காக பேருந்து வசதி செய்து கொடுப்பதில் கால தாமதம் காட்டாமல், பேருந்துகளை விடுவதற்கு போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், மேலும் இரண்டு பேருந்துகள் விடுவதற்கு மனுக்கள் வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அந்த மனுக்கள் எந்தெந்த கிராமங்களிலே இருந்து நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்று வந்திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

சட்டமன்ற LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1984 மார்ச் 28

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், இரண்டு வழித் தடங்களில் விட வேண்டுமென்று மனுக்கள் வந்து, அதைப் போக்குவரத்துக் கழகம் இப்போது ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது.

—492

தொட்டாம்பட்டி, மேலூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விடும் திட்டம்.

*வினா எண் 21451—திரு. க. வெ. விராளம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விட அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வழித்தடங்களில் எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) பத்து வழித்தடங்களில் மினி பஸ்கள் விட திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை, ஆய்வு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. க. வெ. வீரானம்பலம்: பேரவைத்தலைவர் அவர்களே, மேலூர், கொட்டாம்பட்டி வழியாக வெள்ளிமலை முருகன் கோவிலுக்கு பேருந்து விட அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதற்கான 10 வழித்தடங்களை நாங்கள் ஆய்வு செய்துகொண்டு வருகிறோம். அதிலே இதையும் சேர்த்து ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன். இந்த ஆய்வு முடிந்த பின்னர், இதைப் பற்றிச் சொல்ல முடியும்.

திரு. எல். இளைய பெருமாள்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற மனுக்கள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், மேலூர் தொகுதியிலே அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, நான் அவர்களிடம் சொல்லி, மினி பஸ்கள் விடுகிறார்கள். நீங்கள் மனுக்கள் போடுங்கள், கிடைக்கும்

என்று சொன்னேன். ஆகவே, இந்த மினி பஸ்கள் விடுகின்ற இடத்திலே, இவர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்கள் தனியாக பேருந்துகள் விடப்படுவது பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பேருந்துகள் விடுவது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், தனியார்களுக்கு கொடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலே பல சட்டதிட்டங்களைக் கடைப் பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. யார் மனு போட்டிருந்தாலும், அதை பரிசீலனை செய்து 57 (2)-லே நோட்டிபை செய்து, அதற்குப் பின்னர் அதை 57 (3)-லே நோட்டிபை செய்து, முறைப்படி ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, யார் நேரடியாக மனுக்கள் போட்டிருந்தாலும், அவைகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே இதை இணைத்துப் பேசுவது என்பது முடியாத காரியம்.

493—

மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 17233 —**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆதி திராவிடர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தமிழ் நாடு குழாய்க் கிணற்றுக்கழகம் தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். டெல்டா ஏரியா அல்லாத பகுதிகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா ? சமுதாயக் கிணறுகள், பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட் மூலமாக அமைக்க உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், காவிரி டெல்டா பகுதிகளான திருவையாறு, கும்பகோணம், திருவிடமருதூர், ஆகிய இடங்களில் முழு அளவிலும், பாபநாசம், வலங்கைமான் ஆகிய இடங்களில் பகுதி அளவிலும், இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற டெல்டா பகுதியல்லாத ஏரியாக்களான ஒரத்தநாடு, திருவோணம் போன்ற பகுதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் இந்தத் திட்டம் மேற்கண்ட 5 பகுதிகளில்தான் தற்போது அமுல்படுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை எங்கே அமுல்படுத்துவது என்பது பற்றிய ஒரு விவரமான அறிக்கையை நிலநீர் தலைமைப் பொறியாளர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கு தஞ்சையில் மேற்படி பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடு.

494—

*வினா எண் 20616 —திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடிட்டுக் கிடப்பதால் தண்ணீர் வீணாவதுடன் பக்கத்திலுள்ள விளைநிலங்களும் பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் கிடந்த மணல்மேடு நீக்கப்பட்டு இப்போது தண்ணீர் இலகுவாகச் செல்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வரும் வழியில், காட்டாற்று தண்ணீர், பெருகிய நேரத்தில், வரக்கூடிய தண்ணீரால் மருதுவாயல், சேத்திடல் போன்ற பகுதிகளில் அழிவு ஏற்படுகிறது. அதிகமான தண்ணீர் வரக்கூடிய நேரத்தில், விளை நிலங்கள் அத்தனையுமே அழிக்கப்படுகிறது. அந்த முகப்பிலே மணல் சன்னம் சன்னமாகச் சேர்ந்து, தண்ணீர் பரவலாகப் போகின்ற காரணத்தால், அழிவு ஏற்படுகிறது. அந்த அழிவை தடுக்கின்ற முறையில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ஏற்கனவே அந்த வட பகுதி ஆற்றுத் திட்டத்திற்கு ரூ. 12,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வட பகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல் மேடிட்டு அது நீக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி மணல் வருமேயானால், வண்டல் அதிகமாகச் சேரக் கூடிய கால்வாய் பகுதி அங்கு இருக்கும் என்று நம்புகிறேன். அப்படி வந்தால் அதை அகற்றக் கூடிய அளவில், ஆய்வுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, வண்டல் சேர்ந்துவிட்டால், அதை அகற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் உறுதி சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அங்கு அடிக்கடி அழிவு ஏற்படுகிறது. தண்ணீர் பெருகுகிற நேரத்தில் எல்லாம், இந்த இரண்டு கிராமங்களும் அழியக்கூடிய நிலையில் இருக்கின்றன. எனவே இதற்கு தடுப்புச் சுவர்கள் கட்ட ஏற்பாடு செய்வதோடு, வாய்க்கால்கள் அதிகமாக வரண்டிருப்பதன் காரணமாகவும் இந்த மாதிரி மணல் மேடிட்டிருப்புதன் காரணமாகவும் தான் ஆற்றிலே போகக் கூடிய வெள்ளம் முழுவதும் பக்கத்திலே வகிர்ந்து போகக் கூடிய காரணத்தாலும் அழிவு ஏற்படுகிறது. எனவே அந்த ஆற்றை ஆழப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே' இரண்டு கிராமங்கள் அழிவதைப் பற்றிய எந்தவிதமான விவரமும் தற்போது என்னிடம் இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் சொல்கிறேன்.

செண்பகத் தோப்பு அணைக் கட்டும் திட்டம்.

495—

* வினா எண். 21646 —திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு அணை திட்டப் பணிகள் எந்த அளவில் உள்ளன?

(ஆ) இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம் செண்பகத்தோப்பு கிராமத்தினருகே ரூபாய் 470 இலட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆக்கபூர்வமான ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். அதற்கு அரசு எப்போது அங்கீகாரம் வழங்கும்? ஏனென்றால், அது நீண்ட நாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதற்கான விரைவான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே செண்பகத் தோப்புத் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும், அது நீண்ட காலமாக ஆய்வில் இருக்கின்ற திட்டம் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அந்தப் பணியை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசைதான் அரசுக்கும் இருக்கிறது, அதன் காரணமாக இதைக் கொள்கை அளவிலே, 1975 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டாலும், இப்போது அரசு அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை .எடுத்து வருகிறது. எனவே, விரைவான ஆய்வு செய்யக்கூடிய கட்டாய சூழ்நிலைகள் இந்தத் திட்டத்தின் வாயிலாக உருவாகியிருக்கிறது. காரணம் பாலாற்றுப் படுகையில் அமைந்திருக்கிறது இந்தத் திட்டம்.. பாலாற்றுப் படுகையில் தேவையான தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதை ஆய்வு செய்துதான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார்கள். 3 ஆண்டுக் காலம் ஆய்வு நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு உரிய தண்ணீர் இருப்பதாக ஆய்வின் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருந்தாலும், ஏறக்குறைய 307.54 ஏக்கர் நிலங்கள் வனத்துறையிடமிருந்து கையகப்படுத்தவேண்டிய

சூழ்நிலை இருக்கிறது. இதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கி கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

496 —

அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள மனைகள்.

*வினா எண் 19011—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழில் துவங்கும் இடங்களின் விலையை அரசு அதிக அளவில் உயர்த்தி விட்டதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப் பட்ட மனைகளின் விலையை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சமாக அரசு உயர்த்தியது. இதனை ரூ. 30,000 என்று குறைக்கும்படி அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கமும், ரூ. 50,000 என்று குறைக்கும்படி தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கமும் அரசை கேட்டுக் கொண்டன.

(இ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 19.274 ஏக்கர் நிலம் மட்டுமே ஏக்கருக்கு ரூ. 3.00 இலட்சம் என்ற விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டையில் தற்போது சுமார் 10.05 ஏக்கர் நிலம் மட்டுமே காலியாக உள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையைக் காட்டிலும் சென்னை நகருக்கு அருகில் உள்ள வில்லிவாக்கம் அரும்பாக்கம் தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களின் விலையை அனுசரித்தே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிலத்தின் விலை நிர்ணயிக்கப் பட்டது. இந்த விலை நியாயமானதே என்று அரசு கருதியதால் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கை மீது அரசு மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிர்ணயித்து இருக்கின்ற விலை நியாயமானதே என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருக்கால் இன்றைய மார்க்கெட்டுக்கு அது நியாயமாகக் கூட இருக்கலாம். ஆனால் புதிதாக நிறைய பேர்கள் தொழில் செய்ய முன்வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அப்படித் தொழில் செய்ய வருபவர்களுக்கு, அதிலும் புதிதாக வருபவர்களுக்கு அல்லது பின் அடைந்த நிலையில் உள்ள வகுப்பினர்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு என்று இப்படி யாராவது முன் வந்தால், அவர்களுக்குச் சலுகைகள் காட்டுகின்ற வகையில், அவர்களுக்கு மட்டும் விலை நிர்ணயம் செய்வதிலே ஒரு தனித் திட்டத்தை அரசாங்கம் கடைப்பிடிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை காட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை, ஆனால் அதனுடைய விலை நிர்ணயிக்கின்றபோது, அடுத்த தொழிற்பேட்டையில் உள்ள நிலத்தினுடைய விலையைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் இந்த இடத்தின் விலையும் நிர்ணயிக்கப்படுகின்றது,

தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

497 —

*வினா எண். 22031 — திரு, இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம். விவசாயிகள் அதிகமாகவுள்ள பகுதி. அந்தப் பகுதியில் பெரிய தொழில்கள் செய்யக்கூடிய தொழில் பேட்டைகள் அமைக்க திட்டம் எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வாறு தொழிற்பேட்டை என்று இல்லாவிட்டாலும், சிறு தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 10 தொழில் முனைவர்கள் நல்ல தொழில் திட்டங்களின் கீழ் தொழில் தொடங்க முன் வந்தால், சிட்கோ மூலமாக அவர்களுக்காக சின்னஞ்சிறு தொழிற் கூடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சி செய்யும்.

(முற்பகல் 9-50)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாளில் 110 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. 5 ஏக்கர் நிலத்தில் மட்டும் சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மீதி ஏறத்தாழ 105 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. அந்த 105 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு தொழில்கள் துவங்க அல்லது ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, துறைமுகத் தொழிலாளர்களின் ஸ்டிரைக் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. இது நம்முடைய அரசினுடைய நிர்வாகத்தில் இல்லாவிட்டாலும், அதில் தீர்வு ஏற்படாமல் இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் ஏராளமான தொழில்களுக்கு வரவேண்டிய ரா-மெட்டீரியல்ஸ் வரவில்லை. தொழில் துறையே ஸ்தம்பித்துப் போகும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டினுடைய பல தொழில்களின் பொருளாதாரமும் பெரும் அபாயத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 28

அது மட்டும் அல்லாமல் லா அண்ட் ஆர்டர் பிராப்ளம் வரும்போது நம்முடைய அரசுதான் பொறுப்பு ஏற்க வேண்டும். அப்படி இந்த ஸ்டேட்டே பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிற போது, நம்முடைய அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? பல மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்படும் போது, மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறைமுக நிர்வாகம், bsolutely it is under the control of the Government of India. We have on jurisdiction.

திரு. ரா. உமாநாத்: நான் சொல்வது இன்னொரு கோணத்தில், அதனால், நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியே பாதிக்கப்படுகிறது. பொருளாதாரமே குன்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு அந்தப் பிரச்சினையில் தீர்வு காணா விட்டால், லா அண்ட் ஆர்டர் பிராப்ளம் வரும். அப்போது நமக்குப் பொறுப்பு வருகிறது.

I am saying that our TamilNadu Government should not be silent.

இதற்கு சீக்கிரம் தீர்வு காண வேண்டும். அப்படி நம்முடைய அரசு இந்தப் பிரச்சினையில் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும் என்று கேட்கிறேன்.

Mr, Speaker: Any reply from the Government side.

திரு. ரா. உமாநாத்: ரிப்ளை இல்லை என்று சொல்லிவிட முடியாது. கவர்ன்மென்ட் சைடிலே இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவையில் தற்போது இல்லை. அவை முன்னவர் வந்ததும் வேண்டுமானால் அவரிடம் கேட்டு பிறகு சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், இந்தத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி இங்கே சொன்னார்கள். எங்களுக்கும் அவரைப்போலவே, தொழிலாளர்கள் மீது அக்கறை, அன்பு, பாசம் எல்லாம் உண்டு.

1984 மார்ச் 28] (திரு. சு. முத்துசாமி)

எனவே, அந்த வகையில் உடனடியாக எவ்வளவு விரைவிலே முடியுமோ அந்த அளவுக்குப் பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உணர்வை அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்குப் பேசுவது கூட மத்திய அரசினுடைய காதுக்கு நிச்சயமாக எட்ட இருக்கின்றது. வேண்டுமானால் அரசின் சார்பாக நிலைமைகளை, விளக்கி ஒரு கடிதத்தை எழுத நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன் த. வேணுகோபால், செ. இராமலிங்கம், கு. ரமணி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், ஏ. டி. கருப்பையா, மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, என்.எஸ்.வி. சித்தன், இல. பலராமன், எல். இளையபெருமாள், டி. மணி, என். பழனிவேல் ஆகியோர், ''மதுரை, கோவை மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழக விவசாயக் கல்லூரி மாணவர்கள் கடந்த சில நாட்களாக தொடர் உண்ணாவிரதம் இருப்பதால் ஏராளமான மாணவர்கள் மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால், மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : அவைத் தலைவர் அவர்களே, கோவை மதுரை, அண்ணாமலை ஆகிய இடங்களிலே உள்ள விவசாயக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் — 6 மாதம் டிப்ளமோ படித்து பாஸ் செய்தவர்கள் வேளாண்மைத் துறையிலே துணை அதிகாரிகளாக நியமிக்கப்படலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது—அந்த உத்திரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாமையால் அங்கே 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த இரண்டு நாட்களாக மதுரையிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள்

மயக்க முற்று ஏறத்தாழ 50 மாணவர்களுக்குமேல் மதுரையிலே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசு அவர்களைப், பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தோடு மதுரை மருத்துவமனையிலே அவர்களுக்குப் படுக்கைக்கூட கொடுக்காமல் தரையில் போட்டு சிகிச்சை அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தினால், இது முக்கியமானது என்று கருதி இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசும் அமைச்சர் அவர்களும் இந்தத் தீர்மானத்தை உடனடியாக விவாதிக்கவேண்டுமென்று முன்வந்துள்ளது வரவேற்கத்தக்க விஷயம். இன்று, காலையில் தான் எனக்கு ஒரு தந்தி வந்தது.

2,000 students Huger strike situation Tens:—100 h sp t ls d. என்று வந்திருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டுஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அவர்களுடைய கோரிக்கைகள் மிகவும் நியாயமான கோரிக்கைகள் என்று பல விவரங்கள் இருக்கின்றன. அந்த விவரங்களை அடிப்படையாக வைத்து அதன்பேரில் ஒரு நியாயமான முடிவுக்கு வர வேண்டும் என்ற அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை ஏற்று விவாதிக்க வேண்டும் என்பதற்காக நான் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட விவசாயப் பாடங்கள் கற்று தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் அவர்கள் அந்த குறிப்பிட்ட மேல்வேலைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ச்சியாக அந்த மாணவர்கள் கேட்டுக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, கோவையிலே இருக்கிற விவசாயக் கல்லூரி மாணவர்களிடையே இதே பிரச்சினை வந்து அவர்கள் உண்ணாவிரதம் இருந்து ஒருவிதமாக பேசி சமரசம் முடிக்கப்பட்டது. மறுபடியும் அந்தப பிரச்சினை ஏற்பட்டு அதற்கு நியாயமான ஒரு அடிப்படையில் தீர்வு ஏற்படாததன் விளைவாக படித்துப் பட்டம் பெற்றவர்களை—அந்த வேலையிலே நன்கு அனுபவம் உள்ளவர்கள் இருப்பதால் அவர்களைக் கொண்டுதான் அந்த வேலைகளைத் திறமையாகச் செய்ய முடியும் என்ற கண்ணோட்டம் அரசாங்கத்திற்கு இருக்கலாம்—விவசாயக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்களை அதற்கான குவாலிபிகேஷன் உள்பட உள்ளவர்களை அந்தப் பதவியில் நியமிக்காமல் அவர்களுடைய அனுபவம் ஒன்றே போதுமென்ற நிலையில் எடுத்துக் கொண்டால் அடிப்படையில் ஒரு முரண்பாடு ஏற்படுகிறது, ஆகவே, அனுபவமும் தேவை, அதே சமயத்திலே படிப்பும் தேவை அந்த அடிப்படையிலே இரண்டையும் சேர்த்து ஒரு அணுகு முறையைக் கடைப்பிடிக்காத வரையில் இப்படிப்பட்ட முரண்பாடு நீடிக்கத்தான் செய்யும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தகுதியில்லாதவர்களை நியமிப்பதன் மூலமாக ஏற்பட்டுள்ள தூண்டுதல் ''புரவொக்கேஷன்'' அந்த மாணவர்களை ஆத்திரத்திற்கு இரையாக்கியிருக்கிறது என்று

1984 மார்ச் 28] [திரு. கு. ரமணி]

சொன்னால் அது மிகையாகாது. அதை எதிர்த்து மதுரை சரி, அண்ணாமலையிலும் சரி, கோவையிலும் சரி, விவசாயக் கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் இந்தத் தந்தியிலே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் 2,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அடிப்படையான விஷயத்தை உடனடியாக அரசு பரிசீலனை செய்து இணக்கமான முறையில் தீர்வு காணவேண்டும். ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் வம்புக் கட்டாயமாக — ஏனென்றால் மயக்கமுற்ற மாணவர்களை ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் சேர்த்தால் முதலிலே அவர்கள் குளுக்கோஸ் இன்ஜக்ஷன்தான் போடுவார்கள், அதன் மூலமாக உண்ணாவிரதத்தை முறியடிக்கத்தான் அது பயன்படும், இதிலே நாங்கள் அனுபவம் உள்ளவர்கள் — ஆகவே, அந்த நிலைமையெல்லாம் மேலும் மேலும் '' எஸ்ட்ரேஞ்ச்மெண்ட் '' தான் ஏற்படுத்தும். மாணவர்கள் மத்தியில் நல்ல நிலையை ஏற்படுத்தாது. அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு நியாயமான முடிவு காண்பதற்காக அந்தக் கோரிக்கைகளை சரியாகப் பரிசீலனை செய்யவும் ஒரு முடிவு காணவும் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்றும் ஒரு இணக்கமான தீர்வு காண்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

(முற்பகல் 10-00).

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை, அண்ணாமலை, போன்ற இடங்களில் உள்ள விவசாய பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த 10 தினங்களாக காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை அவர்கள் பெற்று இருக்கின்ற பட்டத்திற்கு தகுந்தவாறு அவர்களுக்கு வேலை வாய்ப்பு உத்திரவாதம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையான கோரிக்கையை முன் வைத்து இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த உண்ணாவிரதத்தில் அங்கு இருக்கக்கூடிய பெண்கள் கூட நூற்றுக்கணக்கான பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம், மதுரையில், தொடர் உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் மயக்கமுற்ற நிலையில் இராஜாஜி அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் எப்படி தொழிலாளர்கள் கொள்கையில், அதாவது, போராடுகின்ற தொழிலாளர்களை போராட விட்டு விட்டு காலம் கடந்தி அந்தப் பிரச்சினையை அணுகுவதைப் போல் இந்த மாணவர்கள் பிரச்சினையில் அந்தமாதிரியான அணுகுமுறையைக் கையாள வேண்டாம் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை

கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இன்றைக்கு போராடுகின்ற மாணவர்களினால் நம்முடைய நாட்டில் விவசாயம் பெருகு வதற்கு, விவசாயத் துறையில், முன்னேற்றம் பெருகுவதற்குமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே இப்படிபட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களை சந்தித்து உடனடியாக அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட உறுதிமொழியை இந்த மன்றத்தில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினை மீண்டும் தொடரக்கூடாது. ஆகவே இந்த மாணவர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்கின்ற முறையில் விரிவாக இந்த மன்றத்தில் விவா திக்க வேண்டியிருக்கிற காரணத்தால் இந்த மன்றத்தினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் இன்றைக்கு ஒரு பதட்ட மான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நான் இன்றைக்கு காலை யில் தான் மதுரையிலிருந்து வந்தேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் மதுரை யில் இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரியைச் சார்ந்த மாணவர் கள் காலவரையற்ற உண்ணாவிரதம் என்ற முறையில் உண்ணா விரதத்தை தொடர்ந்து இருக்கிறார்கள். இன்றைக்கு ஏடு தூக்கி கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் நாளை நாடு காக்க கூடிய பொறுப்பில் இருக்கக்கூடிய அவர்கள் உண்ணவிரதம் என்று சொல்லக்கூடிய மிக கடுமையான இந்த போராட்டத்தில் ஈடு பட்டு இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குள்ள உணர்வு களின் பாதிப்புகள் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மதுரை வேளாண்மைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் 425 பேர் படிப்பதாகவும் அதில் 50க்கும் அதிகமானவர்கள் பெண்களாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். நேற்றையதினம் மதுரையில் நடந்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 26க்கும் அதிகமான பேர்கள் மயக்கமுற்ற நிலையில் இன்றைக்கு மதுரையில் இருக்கின்ற அர சினர் இராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாக செய்திகள் நமக்கு கிடைத்து இருக்கின்றன. எங்களுக்கு கிடைத்த தகவல்படி இந்த வேளாண்மைத் துறையில் பதவி உயர்வு அல்லது பதவி அளிப்பதற்கு ஏற்கெனவே இருக்கின்ற பட்டதாரிகளுக்கு 90 சதவீதம் வேலைவாய்ப்பும் அந்த இலாக்கா வில் பணிபுரிகின்றவர்களுக்கு எஸ்.டி.ஓ. என்று சொல்கிறார்கள் அவர்களுக்கு வேலை உயர்வு என்ற முறையில் 10 சதவீதம் கொடுப்பதும் இன்றைக்கு அமுலில் இருப்பதாகவும்,

விடுத்து படித்த வேளாண்மை பட்டதாரிகளுக்கு அத்தனையையும் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதம் இருப்பதாக எங்களுக்கு செய்திகள் கிடைத்து இருக்கிறது. பொதுவாக அந்தத் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு ஒரு உற்சாகம் அளிக்கும் வகையில் வேலை உயர்வு ஒரு கணிசமான பகுதி ஒதுக்கித் தர வேண்டும் என்பது ஒரு நியாயமான கோரிக்கையாக இருந்தாலும்கூட மாணவர்கள் வேறு என்ன கோரிக்கை முன்னால் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரைக்கு மிகவும் நெருக்கமானவர்கள். நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மதுரைக்குப் புறப்பட்டுச் சென்று மாணவ கண்மணிகளை அழைத்துப் பேசி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு செய்து அவர்கள் மனம் ஏற்கின்ற வகையில் ஒரு சுமூகமான சூழ்நிலைக்கு முயற்சிகளை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மதுரையில் இருக்கிற பதட்டமான சூழ்நிலை வேறு பல ஊர்களில் உள்ள வேளாண்மைக் கல்லூரிக்கும் இந்த நிலை பரவுவதற்கான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருந்தத்தக்க வகையில் ஒரு கற்பனையான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் இந்த உண்ணாவிரத முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறக்கூடிய மாணவர்களுக்கு 90 விழுக்காடு அலுவலர் பதவியில் சேருவதற்கும் அதிலே பணியாற்றுகின்ற பட்டயப் படிப்புப்பெற்றவர்கள் 10 விழுக்காடு அந்த பதவியில் பதவி உயர்வு பெற்று சேருவதற்கும் விதிமுறைகள் 1970லே வகுக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன.

நான் இங்கே ஒரு உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப்பட்டம் பெறும் பட்டதாரிகளே கூட ஏறத்தாழ 30 விழுக்காடுதான் இந்தத் துறையில் அலுவலகத்திற்கு வந்து சேருகிறார்கள். மற்றவர்கள் தனியார் துறையிலும், வங்கிகளிலும் போய்ப் பணியாற்றுவதற்குச் சேர்ந்து விடுகிறார்கள்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1984 மார்ச் 28

நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இந்தத் துறைக்குச் தேவைப்படுகிறது. ஆகவே நாம் புதிய வேளண்மைக் கல்லூரிகளைத் திறக்க வேண்டிய அவசியம் கூட இருக்கிறது. வேறு எந்தச் துறையிலேயும் இல்லாத அளவிற்கு, வேளாண்மைக் கல்லூரிகளிலே படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருப்பதை இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இன்னொரு மாற்றத்தையும் கூட நாங்கள் செய்ய விரும்புகிறோம். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யும் நிலைமையில்லாமல், நேரடியாகவே வேலை வாய்ப்பு பெறுகின்ற அளவிற்கு நிலைமைகளை அரசு உருவாக்கியிருக்கிறது. ஆகவே, பணி வாய்ப்பு என்பது அவர்களுக்கு எந்த வகையிலும் குறைந்துவிடவில்லை, எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பத்து விழுக்காடு பதவி உயர்வு பெறுபவர்கள் இந்தத் துறையிலே நீண்ட காலமாகப் பணியாற்றுகின்ற பட்டயப்படிப்பு படித்தவர்கள். இங்கேயுள்ள மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏழாயிரம், எட்டாயிரம்; பேர் இந்த துறையிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் அதே தேக்க நிலையிலேயே காலம் காலமாக இருந்து ஓய்வு பெற வேண்டுமென்றால் அவர்கள் எப்படி உற்சாகமாகப் பணி புரிய முடியும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, அவர்களது தேக்க நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காகவும், படித்து விட்டு இருக்கின்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், இதற்கான இணக்கமான சூழ்நிலையில் பத்து விழுக்காடு என்று ஒதுக்கியிருக்கிறோம்.

இடையிலே ஒரு சிக்கல் இருந்தது. அரசு சில புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் பொழுது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தைக் கொண்டு வருகின்றபொழுது அதில் பணியாற்றுவதற்கு வேளாண்மை அலுவலர்கள் கிடைக்கவில்லை; ஆகவே, இருக்கின்ற பட்டயப் படிப்பு படித்த அலுவலர்களை 25 விழுக்காடு அந்தப் பதவிகளில் நியமிக்கலாம் என்று அரசு ஒரு நேரத்தில் முடிவு செய்து, ஆனால் மாணவர்கள் அதை விரும்பவில்லை. அதற்குக் கண்டனம் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அது மறுபடியும் பத்துவிழுக்காடு என்று குறைக்கப்பட்டது.

மாணவர்களை ஏற்கெனவே சந்தித்துப் பேசியிருக்கிறேன். நம்முடைய துறையின் செயலாளர் சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர்களுக்கு இந்த விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன, உங்களில் படித்து விட்டு, வேலைவாய்ப்பு கிடைக்க முடியாமல்; யாராவது இருக்கிறீர்களா, அப்படியிருந்தால் அந்தப் பட்டியலைக் கொடுங்கள், உடனடியாகக் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அல்லது படித்து விட்டு ஆறு மாத காலம் அல்லது ஒரு வருட காலம் என்று வேலை கிடைக்காமல் தேங்கியிருக்கின்ற நிலைமை இருக்கிறதா என்று கேட்டேன். அப்படிப்பட்ட நிலைமைகள் வந்து, அப்படி உங்களுடைய எண்ணிக்கை அதிகமாக வரும் நிலைமைகள் வந்தால், இதைப்பற்றி பேசலாம்; பத்து விழுக்காடு என்பதைக் கூட பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

ஆனால் உடனடியாக, வேலை கிடைக்கும் என்ற நிலைமையிருந்தும், அதிலே உள்ளவர்களுக்கு பத்து விழுக்காடு கூட கொடுக்கக் கூடாது என்று போராடுவது எப்படி நியாயத்தின் பாற்பட்டது. எப்படி மனிதாபிமானத்தின் பாற்பட்டது. எப்படி சட்டத்தின்பாற் பட்டது என்பதை இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களின் அச்சத்தைப் போக்குவதற்குப் புள்ளி விவரங்களைத் தந்து அளிக்க நாங்கள் தயார்; துறை தயாராக இருக்கிறது. நான் கூட, நீங்கள் விரும்பும் நாளில் வாருங்கள், அத்தகைய விளக்கங்களைச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அப்படியிருந்தும் அவர்கள் இந்த வகையிலே உண்ணா நோன்பினை மேற்கொண்டிருக்கிறார்கள்.

உண்ணா நோன்பு மேற்கொண்டிருப்பவர்களை பாதுகாப்பது எப்படி; அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பது எப்படி என்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்டும். திரு. ரமணி அவர்களுக்கு உண்ணா நோன்பு இருந்த அனுபவம் இருக்கிறது; அதைப் போல எனக்கும் உண்ணா நோன்பு இருந்த அனுபவம் உண்டு. ஆகவே, எந்த வகையிலே மாணவர்களைப் பாதுகாப்பது என்ற முயற்சியிலே அரசு தளர்ச்சியாக இருக்காது. எந்த நேரத்தில் வந்தாலும் பேசத் தயாராக இருக்கிறோம்.

அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சம் நியாயமற்றது; கற்பனையானது என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களை அழைத்துப் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் எங்களுடைய

வேண்டுகோளை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால், நாங்கள் எடுத்துச் சொல்லும் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, இதில் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-10.)

4. கவன ஈர்ப்புகள்.

(அ) காட்பாடி தொகுதியில் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், சோ. அழகர்சாமி, கே. ஆர். சுந்தரம், மு. அப்பாதுரை, ஜி. மூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, ''காட்பாடி தொகுதி, தண்டலம் கிருஷ்ணாவரம் கிராமத்தில் பெண்களிடத்தில் தகாத முறையில் நடந்து கொண்ட வாலிபர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1984 மார்ச் 28] [டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

அறிக்கை.

8-3-1984-ஆம் தேதி காலை சுமார் 11-00 மணிக்கு விருதம் பட்டு காலனி, அம்பேத்கார் தெருவைச் சேர்ந்த காளி என்பவர் மகன்கள் சந்திரன், சுப்பிரமணி இருவரும் பாலாற்றங்கரையில் சூளை போட்டுக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவ்வமயம் சேண்பாக்கம் காலனியைச் சேர்ந்த மோகன், லால் இருவரும் பாலார் இரயில்வே பாலத்தில் பெயிண்ட் அடிக்கும் வேலை செய்து கொண்டிருந்த பொழுது அருகில் தன் வீட்டின் பின்னால் குளித்துக் கொண்டு இருந்த நந்தகோபால் மனைவி பாப்பம் மாள் (35) (ஒட்டர் ஜாதி) என்ற பெண்ணைக் கிண்டல் செய்துள்ளனர். சந்திரன், தன் தம்பி சுப்பிரமணியுடன் மேற்படி மோகன், லால் இருவரையும் ஏன் குளிக்கும் பெண்ணை கேலி செய்கின்றீர்கள் என்று கண்டித்துள்ளார். உங்களை பார்த்து கொள்கிறோம் என்று கூறிவிட்டு மோகன், லால் இருவரும் சுமார் 1/2 கி.மீ. உள்ள தன் காலனிக்குச் சென்று சுமார் 8 நபர்களுடன் வந்து, சந்திரன், சுப்பிரமணி ஆகிய இருவரையும் தடி, இரும்பு கம்பி ஆகியவற்றால் தாக்கி உள்ளனர். அருகில் தன் நிலத்தில் இருந்த கருணாகரன், காட்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். ஏ. பூங்காவனம் அவர்களின் மகன் அங்கே ஓடிப் போய் இரு தரப்பினரையும் சமாதானப் படுத்த முயன்றபோது மோகன், லால் இருவரும் கருணா கரனையும் இரும்புக் கம்பியால் தலை மீதும், இடது கால் மீதும் தாக்கிவிட்டு ஓடி விட்டனர். காயம் அடைந்த மூவரும் வேலூர் அரசு தலைமை மருத்துவ மனைக்குச் சென்று சிகிச் சைப் பெற்று உள் நோயாளிகளாக இருந்து வருகின்றனர்.

2. சந்திரன் கொடுத்த புகாரின் பேரில் 8—3—1984ந் தேதி காட்பாடி குற்ற எண் 123/84 பிரிவு 147, 148, 326, இ.த.ச. படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சி மேற்கொண்டதில் பயனற்று போயிற்று. சம்பவத்திற்கு பின் அனைத்து எதிரிகளும் தலை மறைவாகி விட்டனர்.

3. சட்டமன்ற உறுப்பினர் மகன் கருணாகரன் என்பவர் திட்டமிட்டோ அல்லது உள் நோக்குடனோ தாக்கப்பட்டிருக்க வில்லை என விசாரணையில் தெரிய வருகிறது. விருதம்பட்டு சேம்பாக்கம் ஆகிய இரு காலனிகளிடையே முன் விரோதம் இதுவரை ஏதும் இல்லை. எதிரிகள் அனைவரும் தொழிலாளர் கள், போக்கிரிகள் அல்ல.

4. மேற்கொண்டு எந்தவித அசம்பாவிதமும் நடவாமல் இருக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிரிகளை கைது செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதி அன்று தண்டலம் கிருஷ்ணாவரம் என்ற என்னுடைய தொகுதியிலுள்ள பகுதியில் காலை 11 மணி அளவுக்கு குளித்துக் கொண்டிருந்த பெண்ணிடம் லால், மோகன் என்ற இரு வாலிபர்கள் தகாத முறையில் நடந்ததைக் கண்டித்த சந்திரன், சுப்பிரமணியம் என்பவர்களை இவர்களும் மற்றவர்களும் தாக்கியதாக விவர அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால் நடந்த உண்மை என்னவென்றால், அதாவது உண்மையான நிலைமைக்கும் இந்த விவர அறிக்கைக்கும் சம்பந்தமே இல்லை. தாக்கப்பட்ட வாலிபர்கள் நல்லவர்கள், அவர்கள் தொழிலாளர்கள், அப்படிப்பட்டவர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் இல்லை என்ற மாதிரி அறிக்கை தந்திருக்கிறார்கள். லால் என்று சொல்லப்படுகின்ற நபர் ஒரு சமூக விரோதி, பிக்பாக்கெட் அடிப்பவர். அவருடைய உடல் முழுவதும் கத்திக்குத்துக் காயம் இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நபர் ஊரிலேயே இருந்து இருக்கிறார். ஆனால் காவல் துறை அதிகாரிகள் அங்கே உள்ள யாரையும் கைது செய்யவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அங்கே காண்ட்ராக்டரிடம் வேலை செய்து கொண்டிருந்த உப காண்ட்ராக்டர் துரை என்பவரைக் கைது செய்து சிறைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். அவரை ஜாமினில் விடக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் விவர அறிக்கையில் அது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சுருக்கமாக இருக்கவேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, இரண்டு நபர்களும் ஊரிலேயே இருந்து முன் ஜாமீன் கோரி கோர்ட்டிலே அப்பீல் செய்திருக்கிறார்கள். அதுகுறித்து இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒத்திவைக்கப்பட்டு இப்போது விசாரணையில் இருக்கின்றது. அந்தக் காவல் நிலையத்திலே இருக்கக்கூடிய அண்ணாமலை இந்த இருவரும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக அனுசரணையாக ஒத்துப் போவார்கள் என்ற காரணத்தில்தான் அந்த கருத்தில்தான் இப்படிப்பட்ட நிலைமையை மேற்கொண்டிருக்கிறார். என்னுடைய மகன் கூட தாக்கப்பட்டிருக்கிறான். அதைப்பற்றிப் பெரிதாக நான் சொல்லவில்லை. ஆனால் குறிப்பாக யாருக்குமே அந்தப் பகுதியில் பாதுகாப்பு இல்லை என்ற அவல நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே அங்கே காவல் நிலையத்திலே உள்ளவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1984 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டுகோள்தான் வைத்திருக்கிறார். எனவே பதில் தேவையில்லை.

*திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டருப்பதன்படி சந்திரன், சுப்பிரமணியன், கருணாகரன் ஆகியோர் 8—3—1984 அன்று தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக இந்தச் சம்பவம் நடந்து இன்றையதினம் வரையில் 20 தினங்கள் ஆகின்றன. இவ்வளவு நாட்கள் ஆகியும் அந்த நபர்களைக் கைது செய்யாததன் காரணம் என்ன? அவர்களைக் கைது செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறபடி இந்தத் தகாத செயல்களில் ஈடுபட்ட மோகன், லால் ஆகிய இருவரும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களும் உள்ளபடியே கைது செய்யப்பட்ட வேண்டியவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இந்த அறிக்கையிலே சொல்லப்படுவது அவர்கள் தலைமறைவாகியிருக்கிறார்கள், அவர்களைக் கைது செய்ய முடியவில்லையென்பது. மாண்புமிகு பூங்காவனம் அவர்கள் கூறும்போது அவர்கள் அங்கேயேதான் இருக்கிறார்கள். ஆனால் கைது செய்யப்படவில்லையென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலே கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்கள் — தலைமறைவாகி இருக்கிறார்கள் என்ற அளவுக்குத்தான் எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது —அங்கேயே இருப்பார்களானால் தீவிரமாக—இப்படிப்பட்ட விஷயங்களிலே அலட்சியமாக இருந்துவிடமுடியாது: அவர்கள் கைது செய்யப்படத்தான் வேண்டும் — தக்கபடி அவர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளில் நல்லவேளையாக இரண்டு சேரிகளுக்கிடையே ஒரு பெரும் கலவரம் வந்து விடாத அளவுக்கு ஒரு சூழ்நிலை இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆகவே, மேலும் தவறான சூழ்நிலை ஏற்படாத அளவுக்கு உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே மேற்கொண்டு தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 28

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைத்திருக்கின்ற அறிக்கையிலே ஒரு சாதாரண ஏழைப் பெண் குளித்துக் கொண்டிருக்கும்போது தகாத முறையிலே நடந்த இருவரை அங்கே இருந்தவர்களும் அந்தப் பெண்ணுக்குச் சொந்தக்காரர்களோ, அல்லது வேறு யாரோ—அதே நேரத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்களுடைய மகனும் அங்கே இருந்திருக்கிறார்—அவர்கள் அந்த இருவரை ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அந்த இருவரும் சுமார் 1/2 கி.மீ. தூரத்திற்குச் சென்று, 8 பேர்களை அழைத்து வந்து அவர்களைக் கொண்டு, இவர்களை தடி, கம்பிகளால் அடித்துக் காயப்படுத்தியுள்ளார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மகனும் காயம் அடைந்திருக்கிறார். இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருப்பது, '' குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சி மேற் கொண்டதில் பயனற்றுப் போயிற்று'', என்பது. முழு முயற்சி மேற் கொண்டும் பயனற்றுப் போயிற்று என்றால், ஒன்றும் செய்ய முடியவில்லையென்று இவர்களே சொல்கிறார்கள். அந்த இருவரும் அடியாட்களை அழைத்துக் கொண்டு வந்து, கம்பிகளைக் கொண்டு வந்து, கடப்பாறையைக் கொண்டு வந்து, 1/2 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து 8 பேர்களைக் கொண்டு வந்து, அடித்தார்கள். அந்தப் பகுதியில் உள்ள காவலர்கள் முழு முயற்சி பண்ணியும் பயனற்றுப் போயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் என்ன செய்ய முடியும்? இவ்வளவு இலட்சணத்திலே, அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கம்பிகளாலே அடித்திருக்கிறார்கள்; உதவிக்கு வந்த சொந்தக்காரர்களை அடித்திருக்கிறார்கள். அடிபட்டவர்கள் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். போலீஸ் என்ன சொல்கிறது என்றால், நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் முழு முயற்சி பண்ணி பயனற்றுப் போயிற்று என்று சொல்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? அதை இங்கே வந்து படிப்பதில் என்ன அர்த்தம்? அப்படியென்றால் ஏழை, எளியவர்களுக்கு என்னதான் பாதுகாப்பு? அமைச்சர் அவர்கள் சரியான பதிலை அளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் இந்த திரு. சந்திரன், சுப்பிரமணியம் ஆகிய இருவரும், கேலி செய்து தகாத முறையில் நடந்து கொண்ட மோகன், லால் ஆகிய இருவரையும் கண்டித்தது உள்ளபடியே பாராட்டுக்குரியதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்களுடைய மகனும் ஒரு நல்ல காரியம் செய்யத்தான் போய், சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவரையும் சேர்த்து அடித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பெண்ணிடத்திலே தகாத முறையிலே ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல், தங்களுடைய சேரிக்குப் போய் ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து, வன்முறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்

னார்கள். விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி, குற்ற எண் 123/84, பிரிவு 147, 148, 326 இ.த.ச. வின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர் சாமி அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று குற்றம் சாட்டப் பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சியும் மேற்கொண்டது பயனற்றுப் போய்விட்டது என்பது உள்ளபடியே அந்தப் பகுதி யிலே உள்ள போலீசாருடைய திறமைக் குறைவைத்தான் காட்டு கிறது. உள்ளபடியே அது மாற்றப்பட வேண்டும். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். உள்ளபடியே வேறு பெரிய, பெரிய வழக்குகளிலே எல்லாம் கண்டு பிடிக்கிற தமிழக காவல் துறை யினர் முழு முயற்சி செய்து இதிலே கண்டு பிடிக்க முடியாமல் திணறுகிறார்கள் என்பதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே தீவிரமான நடவடிக்கையை எடுத்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்து, தக்க தண்டனை கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த இரண்டு நபர்களும் சமூக விரோதிகள் அல்ல என்று இருக்கிறது. ஆனால் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அருமை தோழர் திரு. பூங்காவனம் அவர்கள் மிகப் பெரிய கேடிகள், ரௌடிகள் என்று கூடச் சொன்னார்கள். அப்படிப் பட்ட நிலையில் அவர் கள் கோர்ட்டிலே முன் ஜாமீன் கேட்கக் கூட வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களை உடனடியாகப் பிடிப்பதோடு மட்டும் அல்லாமல், இந்த வழக்குகளைப் பொறுத்தமட்டில்—சாதாரணத் தொழிலாளர்கள் ஊர்வலம் வந்தால் கூட 307 செக்ஷன் போடு கிறார்கள்—இவர்கள் மேல் கடுமையான வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிடப்பட்டவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் என்றாலும் அவர்களைக் கண்டுபிடித்து உள்ள படியே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார் கள். வழக்குகள் நடக்கிறபோது அவர்கள் எப்படிப் பட்டவர்கள்? உள்ளபடியே பரம்பரையாக குற்றம் செய்தவர்களா, கேடிகளா என்ற விவரம் எல்லாம் தெரியும். நான் முதலில் கூறியதைப் போல இந்த வழக்கினை முறைப்படி கவனித்து குற்றவாளிகள் கைது செய்யப்படவும், தண்டிக்கப்படவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு, அதில் அரசு ஈடுபடும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) திருமல்ல நாயக்கர், சொக்கப்ப நாயக்கர் சிலைகள் உள்ள திருவில்லிப்புத்தூர் சிவன் வசந்த மண்டபம் மூடப்பட்டிருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் அதை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் சிவன் கோவிலில் உள்ள திருமலை நாயக்கரின் சிலையும், சொக்கப்ப நாயக்கரின் சிலையும் உள்ள வசந்த மண்டபம் மூடப்பட்டுள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்துள்ள மிடவார்விளாகத்தில், உள்ள சிவன் கோயிலை ஒட்டியுள்ள மண்டபத்தில் திருமலை நாயக்கர் சிலையும், சொக்கப்ப நாயக்கர் சிலையும் உள்ளன. மேற்படி மண்டபத்தினை சிவில் சப்ளை இலாகாவிற்கு 1975 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மாத வாடகை ரூ. 1,500 ஆகும். வாடகை காலம் 16-9-1976 இல் ஆரம்பித்து 4-8-1984 இல் முடிவடைகிறது. மேற்படி மண்டபத்தினை நெல்சேகரம் செய்யும் கிடங்காக சிவில் சப்ளை இலாகாவினர் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி இரு சிலைகளும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு இரும்புக் கம்பி வலையால் மூடப்பட்டுள்ளன.

மேற்படி திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 92,000. மேற்படி மண்டபம் மூலம் ஆண்டுக்கு வாடகை ரூ. 18,000 வருமானம் கிடைக்கிறது. மேலும் மேற்படி திருக்கோயிலின் தேர்த் திருவிழா 5-ஆம் நாளன்று சிலைக்கு பரிவட்டம் மரியாதை செய்யப்படுகிறது. இதற்கு சிவில் சப்ளை இலாகாவினர் வசதி செய்து தருகிறார்கள். எனவே திருக்கோயிலுக்கு வருமானத்தைப் பெருக்கும் பொருட்டே மண்டபம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. சிலைகள் கம்பி வலைகளால் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளன.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து இவ் விஷயத்தில் அரசால் கோவிலின் நலன் பேணப்படுகிறதென்றும், தேர்த் திருவிழாவின் போது வழிபாட்டிற்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

1984 மார்ச் 28]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள சிவன் கோவிலில் உள்ள திருமலை நாயக்கருடைய சிலையைப் போலவும், சொக்கப்ப நாயக்கருடைய சிலையைப் போலவும் மதுரையிலும் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கிற சிலைகள் மிகவும் பிரம்மாண்டமாகவும், அழகாகவும் இருக்கின்றன. அந்தச் சிலைகளைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் அதிகமாக வருகிறார்கள். தாலுக்கா நாயுடு சங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் நாயுடு சங்கம், தமிழ்நாடு மாநில நாயுடு சங்கம் ஆகியவைகளிலிருந்து இந்த வசந்த மண்டபத்தைத் திறந்துவிட வேண்டும் ; அந்தச் சிலைகளை நாங்கள் தெய்வமாக கும்பிட்டுக் கொண்டிருக்கிறோம். திருவிழாக் காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் நாங்கள் அவைகளை வழிபாடு செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த மண்டபத்தை தெய்வ வழிபாட்டிற்காக திறந்து விட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே மத உணர்வு உள்ளவர்களின் மனம் புண்படாத அளவிற்கு செய்வதற்கு சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடத்திலே உள்ள கிட்டங்கியை காலி செய்ய வேண்டும். அப்படிச் செய்து நாயுடு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் இந்தச் சிலைகளை வழிபாடு செய்வதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே இருப்பவை வழிபாட்டிற்குரிய ஆண்டவர்களின் சிலைகள் அல்ல. பாண்டி மண்டலத்தில் மதுரையில் ஆண்ட திருமலை நாயக்கர், சொக்கப்ப நாயக்கர் ஆகியவர்களின் சிலைகளாகும். ஆனால் எந்த சிலைகளானாலும், வீரர்களின் சிலைகள் ஆனாலும், அறிஞர்களின் சிலைகளானாலும், அவைகள் போற்றப்படுகிற, வணக்கத்திற்குரிய, மரியாதைக்குரிய சிலைகள்தான். ஆனால் ஒரு காலத்தில் ஆலயங்களுக்கு வருமானம் இல்லையென்ற காரணத்தாலோ, அல்லது இப்படிப்பட்ட மண்டபங்கள் அர்த்தமற்ற முறையில் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியாது ; இவைகளை எல்லாம் வாடகைக்கு விட்டு விட்டார்கள். இந்த அரசு இப்படிப்பட்ட கலை சிறப்புள்ள, நாமெல்லாம் போற்றி பாதுகாக்க வேண்டிய கருவூலமாக உள்ள மண்டபங்களை, சிலைகளை பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவைகளை எல்லாம், கிடங்குகளாகப் பயன்படுத்தக் கூடாது ; அவைகளை வாடகைக்கு விடக்கூடாது என்று தெரிவித்து இருக்கிறோம். ஆகவே இந்த தவணை காலம் முடிந்ததற்குப் பிறகு உணவு வழங்கு துறையிடத்தில் சொல்லி, அதை வேறு இடத்திற்கு மாற்றும்படி அறநிலையத் துறை கேட்டுக்கொள்ளும். அது முறையாக பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பூரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருமலை நாய்க்கரின் 400-வது பிறந்த நாள் விழாவை அரசு மிகச் சிறப்பாக நடத்த இருக்கிறது. அந்த விழாவிற்கான ஊர்வலம் அந்த சிவன் கோவிலில் இருந்துதான் ஆரம்பிக்க இருக்கிறது. ஆகவே, அந்த பிறந்த தின விழாவை முன்னிட்டு, அங்கே திருப்பணி வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அங்கே கம்பிவலை போட்டு பாதுகாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்களின் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அது தூசு படிந்து இருக்கிறது. அந்த சிலையின், மீது அந்த இடத்தைப் பெருக்குவதற்காக வைத்துள்ள விளக்குமாறை வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ளது தவறான தகவல் என்று சொல்லிக்கொண்டு, அந்தக் கோவிலுக்குச் செல்பவர்களின் மனதில் எந்தவிதமான கெட்ட எண்ணமும் எழாதவண்ணம் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னிடத்தில் தரப்பட்டுள்ள குறிப்பின்படி அது நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது? ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படியில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியாக இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்குத் தகுந்த பாதுகாப்புத் தந்து, அந்தப் பணியை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 400-வது ஆண்டு விழா பற்றி சொன்னார்கள். திருப்பணி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக அமைக்கப்பட்டுள்ள விழாக் கமிட்டியினர் பல வேண்டுகோளை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த வேண்டுகோள்களில் அரசு எதையெதை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு எடுக்கிறதோ, அந்தந்த முடிவுகளின் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

5. அறிக்கை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, ' வணிக ஒற்றுமை ' திங்களிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1984) நிறைவேற்றப் பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 10-30)

7. வரவு-செலவுத் திட்டம், 1994-85—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 32.—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,98,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். "

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருந்துவரும் மாணவர்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் தருவதை அனைவருக்கும் தர வேண்டிய அவசியம் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,98,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

1984 மார்ச் 28]

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, வாசுதேவநல்லூரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டப்படாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,98,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் சலவை தொழிலாளர், முடி திருத்துவோர் ஆகியோர்களுக்கு வழங்கப்படும் பொருட்களுக்கு கூடுதல் தொகை வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,98,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவரவர்களே, பிற்பட்ட வகுப்பினர் நலன் பற்றிய கொள்கை விளக்கப் புத்தகம் ஒன்று ** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதை நான் அவையில் பேசியதாக ஏற்று, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவைகளுக்கு இறுதியில் நான் என்னுடைய பதிலைத் தெரிவிக்கிறேன்.

*திரு. பி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைமீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்

இந்தப் பேரவையிலே பிற்பட்ட சமுதாயத்திற்காக வாதாடி வந்தவர்தான் இன்றைய பிற்பட்டோர் நல அமைச்சராக இருக்கிறார் என்பதைக்காண நான் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாயத்திலே சமதர்மம் மலர வேண்டுமென்றுதான் நமது சமுதாய சீர்

**136 178-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திருத்த சிற்பிகள் எல்லாம் இந்த நாட்டிலே பாடுபட்டு வந்தார்கள். அந்த முறையிலே இன்றைக்கு பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் இந்தத் துறைக்கு அமைச்சராக நியமிக்கப் பட்டிருக்கிறார் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அன்றைய தினம் பாரதப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் மூலம் சமுதாயத்திலே சமதர்மம் மலர வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன் மூலம் பின்தங்கிய வகுப்பினருக்கு சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டுதான் அண்டை மாநிலமான கர்நாடகத்திலே பிற்பட்ட மக்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியாக அந்த அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலே இன்றையதினம் 50 சதவீதம் பிற்பட்ட மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள் தற்போது பிற்பட்டோர் பட்டியலிலே ஏறத்தாழ 60 சதவீத மக்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய பிற்பட்ட தன்மை முற்றிலும் ஒரே நிலையில் சீராகி இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

பிற்பட்டோர் பட்டியலில் காணப்படுகின்ற ஒரு சில குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்கள்தான் இன்றைக்குப் பயன் அடைகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களில் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தெற்குப் பகுதியிலே முக்குலத்தோர், முத்துராஜாக்கள் இருக்கிறார்கள். இந்த உண்மையை மதிப்பிற்குரிய சட்டநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட பிற்பட்டோர் நலக் குழு அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரவர்கள் 1931-32 ஆம் ஆண்டு இந்தச் சட்ட மன்றத்திலே பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை மீது பேசுகின்றபோது, ஒரு கருத்தினைச் சொன்னார்கள். பின்தங்கிய மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளைப் பொறுத்தவரையில், பின்தங்கிய மக்களில் ஒரு சில குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்தான் இன்றையதினம் பயன் அடைந்து வருகிறார்கள். உண்மையிலேயே பின்தங்கிய இனத்தைச் சார்ந்தவர்களுக்கு, அந்த இனத்திற்குரிய சலுகைகள் இன்னும் அளிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்தப் பாகுபாடுகளைக் களைய வேண்டுமென்றால். பின்தங்கிய பட்டியலிலுள்ள ஒவ்வொரு சாதிக்கும் அவர்கள் சார்ந்திருக்கின்ற மக்கள் தொகை அடிப்படையிலே தனித் தனியாக ஒதுக்கீடுகளைக் கொண்டுவர வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இன்றையதினம் இந்தத்

தனி ஒதுக்கீடுகள் அமைக்கும் பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ இந்தப் பிற்பட்டோர் நல அறிக்கையில் ஒதுக்கீடுகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்கு கல்வியறிவு அளித்தால் மட்டும் போதாது. வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற தொழிற் கல்வியும் அளிக்கப்பட வேண்டும். இந்தத் தொழிற் கல்வி விசேஷ சலுகைகள் மூலமாகத்தான் அமைக்கப்பட முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜினுடைய ஆட்சிக் காலம் தமிழகத்தில் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், பெருந் தலைவர் காமராஜ் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது. பின்தங்கிய பகுதியான அரியலூரில் ஒரு தொழிற்பயிற்சிக் கூடத்தை ஏற்படுத்தி னார்கள். அந்தப் பகுதியிலே அனைத்துத் துறைகளிலும் பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் அந்தத் தொழிற் பயிற்சி நிலை யத்தை அரியலூரில் ஏற்படுத்தினார்கள். இன்றையதினம் அகில இந்தியப் போட்டியிலே, 5 முறை அகில இந்திய பரீட்சையில் முதலாவதாக வந்திருக்கி றார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பின்தங்கிய மாணவர் களுக்கு அரசு சரியான சலுகைகளையும், கல்வி வசதியையும் அளித்தால்தான், அவர்கள் இன்றைக்கு முன்னேற முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டாக இதைச் சொன்னேன்.

இன்றைக்குத் தொழிற் கல்லூரியிலே மதிப்பெண்கள் அடிப் படையிலே, ஒரு தேர்வு நடத்தப்போவதாக ஒரு கருத்து மக்கள் மத்தியிலே நிலவி வருகிறது. பெருந்தலைவர் காமராஜ் அவர் கள் ஆட்சிக் காலத்திலே, நடைமுறையிலே இருந்த நேர்முகத் தேர்வு முறையைத் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான், சமுதாயத்தில் பின் தங்கிய மாணவர்களும், தாழ்த்தப்பட்ட மாணவர்களும் நிறைய அளவில் பயன்பெற முடியும். பிற்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழக ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அரியலூரில் ஒரு மாணவர் இல்லம் கட்ட முன் வந் ததற்காக, இந்த அரசுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அரியலூரில் அதுவும் பின்தங்கிய பகுதி யாக இருப்பதால் அங்கே படிக்கின்ற கல்லூரி மாணவிகளுக்கு ஒரு விடுதி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டான், சித்தமல்லி, கோடாரிகருப்பூர் ஆகிய இடங்களில் மாணவர்கள் விடுதியைக் கட்டவேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். படிப்பிற்கான உதவித் தொகையை அளிக்கும் போது, பிற்பட்ட மாணவர்களுக்கு நான்காவது வகுப்பிலிருந்து அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன். இந்த உதவித் தொகையை அந்த மாணவர்கள் பெற

வேண்டுமென்றால், முந்தைய ஆண்டு 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற வேண்டும் என்றிருக்கிறது. அதனை மாற்றி, தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் இந்தச் சலுகையை அளிக்க வேண்டும்.

கல்வி நிறுவனங்களைப் பொறுத்த வரையில், முதல்வரின் மூலமாக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இந்த உதவித் தொகையை அளித்து வருகிறார்கள். இதனை உரிய காலத்தில் அளிக்க வேண்டும். அதுவும் செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக கொடுத்தால் தான், பெய்டு ஸ்டூடன்ட்ஸ், ஸ்காலர்ஷிப் ஸ்டுடென்ஸ்—இவர்களுக்கிடையே நிலவிவரும் கருத்து வேறுபாடுகளைக் களைய முடியும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

அடுத்து நான் இங்கே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே சில வட்டாரங்களை தொழிற்துறையில் பின் தங்கிய வட்டாரங்கள் என அரசு அறிவித்திருக்கிறது. அதைப் போலவே நாமும் பரீட்சார்த்தமாக ஒரு சில வட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பின்தங்கிய வட்டமாக எடுத்துக் கொள்ளலாம். அந்த வட்டத்தில் கலைக் கல்லூரியோ, அல்லது பாலிடெக்னிக்களோ, அல்லது கூட்டுறவுத் தொழிற்சாலைகளோ—அந்த வட்டாரத்தின் வாய்ப்புக்கு ஏற்ப ஒரு முன்னோடித் திட்டத்தை செயல்படுத்தலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய சட்டநாதன் கமிட்டியினர் தமிழ்நாடு பூராவும் சென்று பார்வை யிட்டனர். என்னுடைய தொகுதியான செயங்கொண்டத்திலும் ஆய்வு நடத்தினர், முடிவில் ஒரு கலைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே என்னுடைய தொகுதியில், கலைக் கல்லூரியோ, அல்லது பாலிடெக்னிக் ஒன்றையோ அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய சட்டநாதன் கமிட்டி 24-1-1970 ஆம் தேதி என்னுடைய செயங்கொண்டம் பகுதியில் உள்ள 2 கிராமங்களைச் சென்று பார்வையிட்டனர். ஒன்று அகரம். அந்தக் கிராமத்தில் மொத்தம் 1,000 குடும்பங்கள் இருக்கின்றன. 500 பேர்கள் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 100 பேர்கள் செங்குந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அங்கு வன்னிய சமூகத்தைச் சேர்ந்த 20 குழந்தைகள் தான் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தான் தமிழ் கல்லூரியில் படித்திருக்கிறார். அங்கே வசிக்கின்றவர்கள் அனைவரும் விவசாயப் பெருங்குடி மக்கள். இவர்கள் 2 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். இன்றைக்கு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுக்காலம் ஆகியும், உடையார்பாளையம் வட்டத்தைச் சேர்ந்தவர்கள், ஏறக்குறைய 68 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குள்ளே வாழ்கிறார்கள். இதைத்தான் சட்டநாதன் கமிட்டியின் குறிப்புகள் எடுத்துக் கூறுகின்றன.

அதைப்போலவே வல்லம் கிராமத்திற்குச் சென்று சட்டநாதன் குழுவினர் பார்த்திருக்கின்றார்கள். அங்கே 3 ஆயிரம் பேர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதிலே பெரும்பான்மையோர் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 50 பேர்கள் அரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள். மற்றும் வண்ணான், நாவிதர், தச்சர் போன்றவர்கள் எல்லாம் அங்கே வசித்து வருகிறார்கள். ஆனால் அங்கே 100 பிள்ளைகள்தான் அந்தப் பள்ளியிலே படிக்கிறார்கள். மூன்று பேர்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார்கள். ஒருவர் தமிழ்க் கல்லூரியிலே படித்து வருகிறார். அங்கே படிக்கின்ற மாணவர்களை விசாரிக்கின்றபோது சிலர் ஸ்காலர்ஷிப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். காரணம் முந்திய தேர்வில் குறைந்த பட்சம் 40 மதிப் பெண்கள் பெற்று இருக்க வேண்டும். அதைப் பெற முடியாத காரணத்தாலே, அவர்கள் சரியான முறையிலே கல்லூரியிலே பயில முடியாமல் இருக்கிறார்கள். என்னுடைய உடையார்பாளையம் பகுதியில் உள்ளவர்கள், அனைத்துத் துறையிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற காரணத்தால், இந்த அரசாங்கம் தனியான சலுகை இந்த உடையார்பாளையம் பகுதி மக்களுக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பின்தங்கிய மாணவர்கள் விடுதியிலே டியூட்டர்கள் அல்லது உதவி வார்டன்கள் அமைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையே போதுமானதாக இல்லை.எனவே அவர்கள் இலவசமாக விடுதியில் சாப்பிடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்காக பின் தங்கிய மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, 1971 ஆம் ஆண்டு சென்னையிலே ஒரு சிறப்புப் பயிற்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பயிற்சிக் கூடத்திலே பயின்றவர்கள், 1979 ஆம் ஆண்டு வரை, ஐ.ஏ.எஸ். தேர்வில் 4 பேர்கள் வெற்றி பெற்று வேலையில் இருக்கிறார்கள். ஐ.பி.எஸ். 3 பேர்கள்தான் இருக்கிறார்கள். அதேபோன்று மத்திய அரசுப் பணிகளுக்கு 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். டெல்லியிலே உள்ள டாக்டர் ராவ் அவர்களின் அனைத்திந்திய ஆட்சிப் பணி பயிற்சி மன்றத்தில், 7 பேர்கள் பின்தங்கிய மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் இருவர் தற்போது தேர்வில் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தேசியப் பாதுகாப்புப் பணிகள், 'நேஷனல் டிபன்ஸ் அகடமி' யில் பின்தங்கிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சி நிலையத்திலே பயிலுகின்ற மாணவர்களுடைய பயன் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாவிட்டாலும், இந்தப் முயற்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இந்த ஆண்டு, சட்டப் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்காக சலுகை கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் சிறந்த 20 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் தனிப் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளி, போயர் போன்றவர்களுக்கு 1983-84 ஆம் ஆண்டு 6,250 பேர்களுக்கு உதவி அளித்திருக்கிறார்கள். ஆனாலும் முந்தைய ஆண்டைவிட இந்த எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அதை உயர்த்தி அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு கழகம், மதிப்பிற்குரிய பொன். பரமகுரு அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது. அதிலே, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுத் துறையின் மூலமாக தொழில் செய்பவர்களுக்குத்தான் பண உதவி அளிக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலேயும், தொழிலிலே தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது ஆணைக் குழுவிலே, மதிப்பிற்குரிய அம்பாசங்கர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள்.

அவர்கள் 18 உறுப்பினர்களுடன் பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று பின்தங்கிய மக்களுடைய கருத்துக்களைக் கேட்டு அறிந்திருக்கிறார்கள். அந்தக்குழு வினாத்தாளையும் ஆங்காங்கே அனுப்பி வைத்தார்கள். அதிலே பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த பின் தங்கிய மக்களெல்லாம், தங்களுடைய வகுப்பினர்களுடைய பிற்பட்ட நிலைமை பற்றியும், அவர்களுக்கு அளிக்கப் படவேண்டிய சலுகைகள் பற்றியும், விவரங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்திற்கு அந்தக் குழு வருகை தந்தபோது நானும் என்னுடைய கருத்துக்களை அந்த நேரத்திலே கூறினேன்.

17—11—1978 ஆம் தேதியிட்டு, தமிழக அரசினர் சமூக நலத் துறை எம்.எஸ். நெ. 1087-ல் ஒரு அரசாணையை வெளியிட்டிருப்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதன்மூலம் தமிழகத்தில் உள்ள பிற்பட்ட சமூக மக்களின் தொகையைக் கணக்கு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி தற்போது அந்தக் கணக்கு எடுக்கப்பட்டு முடிந்திருப்பதாக அறிகிறேன். ஆனால் என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில், ஜாதி அடிப்படையிலே மக்கள் தொகை எடுக்கின்ற கணக்கு சரிவர எடுக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டை கூற விரும்புகிறேன். அதனை மறு பரிசீலனை செய்து,

அந்தப் பகுதியிலே மறுபடியும் கணக்கு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஆண்டிலே இரண்டு முறை பஞ்சாயத்து தேர்தலுக்காக இந்த அரசு வாக்காளர் பட்டியல் தயாரித்ததே, அதனைப் போலவே, இந்த சாதிகளைப் பற்றிய கணக்குகளையும் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று, நேரிடையாக அந்தக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

வாக்களர் பட்டியலை எப்படி ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குழு அமைத்து சரிபார்க்கிறீர்களோ, அதே போன்று பின்தங்கிய மக்கள் சமூகத்தினரின் கணக்குகளையும், பின்தங்கிய மக்கள் அடங்கிய குழு ஒன்றை அந்தந்த வட்டத்திலே ஏற்படுத்தி அதன் மூலம் கணக்கெடுப்பை சரியான முறையிலே செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே, விட்டுப் போயிருக்கிற சமுதாயத்தின் எண்ணிக்கையையும் சேர்த்துக் கொண்டு நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கிற பின்தங்கிய மக்களுக்கு அரசு கொடுக்கின்ற சலுகைகளையெல்லாம் நல்ல முறையிலே அவர்களுக்கு அளிக்க முடியும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

மத்திய அரசு மண்டல் கமிஷனை நியமித்திருக்கிறது. அதே போல இங்கே இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவை அம்பாசங்கர் அவர்கள் தலைமையிலே தமிழக அரசு அமைத்து இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த மண்டல் கமிஷனின் அறிக்கையை ஆதரித்து இங்கே ஒரு தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பவேண்டும் என்று தமிழக அரசையும், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரையும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அது மிகப்பயன் உள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், எங்களுடைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் இந்த மண்டல் கமிஷன் அறிக்கையை அமலுக்கு கொண்டு வர வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே வாதாடுவதற்கு, இந்தத் தீர்மானம் நலம் பயப்பதாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். மத்திய அரசும், மண்டல் கமிஷனின் சிபாரிசுகளை மத்திய சர்வீசிலே அமல்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பிற்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்கள் பின்தங்கிய மக்களின் நலனிலே மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். இறுதியாக நம்முடைய பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலேயே கூறியிருக்கிற அவருடைய கருத்தையே எடுத்துக் கூறி நான் எனது உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

''பின்தங்கிய பட்டியலிலே உள்ள ஒவ்வொரு சாதிக்கும், அவர்கள் சார்ந்திருக்கிற பிரிவின் மக்கள் தொகையின் அடிப்படையிலே தனித்தனியாக ஒதுக்கீடுகள் அளிக்க வேண்டும்'' என்று கூறினார்கள். இன்று அவர்கள் பின்தங்கிய துறையின் பொறுப்பையே ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தாலே, அதிலே அவர்கள் ஆர்வம் மிக்கவர்களாகவும், உணர்வு மிக்கவர்களாகவும் இருப்பதாலே, அவருடைய எண்ணத்தை அவரால் செயல்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எப்படிப்பட்ட ஒரு சமுதாயமும் எப்பொழுதுமே பின்தங்கிய சமுதாயமாக இருக்க முடியாது. எந்த ஒரு சமுதாயம், அது பிற்படுத்தப்பட்ட சமுதாயம் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று வேறுபடுத்தியதோ. அந்த சமுதாயங்களுக்கு சமுதாய ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் அரசு சலுகை அளிப்பதின் மூலம்தான், சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள வர்களை மேல்நோக்கி கொண்டுவர முடியும். அதைத்தான் நம்முடைய நேருஜி அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் கூறியிருக்கிறார்கள். 'சமுதாயத்திலே சமதர்ம சமுதாயம் வளரவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. அத்தகைய சமதர்ம சமுதாயம் வளரவேண்டும் என்று கோரி, இன்றைக்கு இதில் பேச வாய்ப்பளித்தமைக்காக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10.50)

*திரு. கே. சௌந்திரராசன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பிற்பட்டோர் நலத் துறையினுடைய மானியக் கோரிக்கை எண் 32இன் கீழ் பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததற்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பிற்பட்டோர் நலத் துறை தமிழகத்திலே 1969 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இன்றைய தினம் செம்மையாக அது செயல்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்திலே இந்தத் துறைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 10 கோடியே 98 லட்சத்திற்கு தொகையை அனுமதித்திருக்கிறது என்றால் உள்ளபடியே நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் மூலமாக இன்றையதினம் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக 277 பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று இந்த குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, இந்தப் பள்ளிகளிலே ஏறக்குறைய 50 ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் அறிகிறபோது நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்ட மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தின் மூலமாகவும் 3-வது வகுப்பு வரையிலே இலவசப் புத்தகங்கள் வழங்குவதன் மூலமாகவும் 8வது வகுப்பு வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 2 ஜோடி உடைகள் வழங்குவதன் மூலமாகவும் பல்வேறு வகைகளிலே துறை சலுகைகளை அளித்து வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக மட்டுமல்ல, சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர்கள், போயர்கள் போன்றவர்களுக்காகவும் இந்தத் துறை பல்வேறு உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை அறிகிறபோது உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1984-85 ஆம் ஆண்டில் பள்ளி விடுதிகளுக்காக 23 லட்சத்து 79 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி அதற்கு மேலும் 7 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிற இந்தத் துறையினுடைய தூய நல்ல பணிகளையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் மூலமாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயில்கின்ற மாணவர்களுக்காக டெல்லியிலே உள்ள ராவ் இன்ஸ்டிட்யூட்டில் படிப்பதற்காக வசதிகளைச் செய்து கொடுத்ததிலே சில பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறபோது அந்த முயற்சிகளுக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக 10 கோடி ரூபாயை ஒதுக்கி பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது தொழிலைத் துவங்கி வாழ்வை அமைத்துக் கொள்ளக்கூடிய வகையிலே அவர்களுக்கு உதவுகின்ற அந்த முயற்சிகளையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர் விடுதியிலே மாணவர்களுக்காக பகுதிநேர ஆசிரியர்கள் நியமித்திருப்பது போன்ற சூழ்நிலைகளையெல்லாம் உருவாக்கியிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பாராட்டுகிறபோது, ஆண்டுக்கு 5 ஆயிரத்திற்குமேல் 10 ஆயிரம் ரூபாய்க்குள்ளாக வருமானம் உடையவர்கள்—குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 500 ரூபாய் கடனாக வழங்குவதற்காகவும் நான் இந்தத் துறையை உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் ஒருபுறத்திலே அரசாங்கம் 10 கோடி ரூபாயை செலவு செய்து பிற்பட்டோர் நலத்துறை மூலமாக பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக பல்வேறு நல்ல பணிகளை ஆற்றிவருகிற அதே நேரத்திலே இந்த 10 கோடி ரூபாய் போதுமானதா என்ற கேள்வி என்னைப் போன்றவர்கள் உள்ளத்திலே எழுகிறது. 10 கோடி ரூபாய் மூலமாக இவ்வளவு பெரிய சமுதாயத்திற்கு எப்படி தொண்டாற்ற முடியும்? தமிழகத்திலே இன்றைய தினம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 3 கோடி மக்கள் இருக்

கிறார்கள். அந்த 3 கோடி மக்களுக்கும் இந்த 10 கோடி ரூபாயிலே நல்வாழ்வு நல்ல விதமாக கிடைத்துவிடச் செய்ய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கிறபோது மிகுந்த வேதனை அடைகிறேன். நான் இதை ஏதோ ஒரு குறையாகச் சொல்லவில்லை. இந்தச் சமுதாயம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கடந்த காலத்திலே இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, ஜாதி வேண்டும், மதம் வேண்டும் இவைகள் எல்லாம் வளருவதற்கு மதகுருக்கள், மதத் தலைவர்கள் வேண்டுமென்று சொல்கிற ஒரு நிலைமை ஒரு காலத்திலே இருந்தது. அதன் மூலமாக ஜாதியைச் சொல்லி, மதத்தைச் சொல்லி நீ படிப்பதற்கு திறமை அற்றவன், லாயக்கு அற்றவன், படித்தால் பாவம், படித்தால் நாக்கை வெட்டு, படிப்பதை கேட்டால் காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று இந்த அளவுக்கு மனு தர்மங்கள் எல்லாம் இந்த நாட்டில் கோலோச்சி பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஒடுக்கப்பட்டு இருக்கிறார்கள், பிற்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அவர்கள் எல்லாம் பயன் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த பிற்படுத்தப்பட்ட நலத் துறை உருவாக்கப்பட்டது என்பதும் இந்த நலத்துறை மூலமாக அப்படி 3 ஆயிரம் 4 ஆயிரம் ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஏதோ ஒரு 10 கோடி ரூபாய் ஒதுக்கி அதன் மூலமாக ஏதோ பரிகாரம் கிடைக்கும் என்று சொன்னால் நாம் ஏமாளிகளாகத் தான் ஆவோமே தவிர அதிலே நாம் எந்தவிதமான பலனும் உருப்படியாக கண்டுவிட முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிச் சொல்கிறபோது நான் இன்னும் ஒன்றை இந்த மாமன்றத்தின் மூலமாக சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பிற்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஏறக்குறைய 60 சதவீதத்திற்கு மேல் இருக்கிறார்கள். அதைப் போலவே, தாழ்த்தப்பட்ட மக்கள் 20 சதவீதம் இருக்கிறார்கள். இந்தியா விடுதலை அடைந்து 37 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதற்கு பின்னால் கூட மத்திய பேரரசு முறையான ஒரு திட்டத்தைத் தீட்டி இதை ஒரு குறுகிய கால கண்ணோட்டத்தில் இந்தத் திட்டத்தை தீட்டுவதன் மூலமாக சமுதாயத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்டவர்கள் 3 ஆயிரம் ஆண்டு காலமாக வஞ்சிக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு வாழ்வு கொடுக்கின்ற வகையில் குறுகிய காலத்தில் அதாவது 5 ஆண்டு, 10 ஆண்டு காலத்தில் அவர்கள் வாழ்வு மலர்வதற்கு திட்டம் தீட்டுவார்களானால் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். இதை விட்டு விட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் இருப்பார்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இருப்பார்கள், அவர்களுக்கு யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவது போல் திட்டங்களைத் தீட்டினால், அதனால் அதனுடைய வளர்ச்சிக்கு உருப்படியான பலன் கிடைக்குமா என்று

நாம் எண்ணிப் பார்க்கிறபோது, சாக்கடையை கொஞ்சம் திறந்து விடுவதற்கு வழி இருக்கிறதே தவிர, அந்த சாக்கடை மீண்டும் அதிகமாக பெருகுவதற்கு அங்கே வழி இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இந்த சமுதாயச் சாக்கடையை நீக்குவதற்கு முறையான நடவடிக்கைகளை தேவையான அளவுக்கு எடுத்தால் தான் இந்த சமுதாயத்திற்கு கடந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிற அந்த நலிவுகள், அந்த அழுத்தப்பட்ட நிலைமைகள் இவைகளை எல்லாம் போக்குவதற்கு ஒரு நல்ல காரியமாக அது அமையும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அன்றைய தினம் ஆதி திராவிட நலத்துறை மானியக் கோரிக் கையில் பேசுகையில் மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர் கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒரிசாவிலே போய் சங்கராச் சாரியார் பேசியிருக்கிறார், என்ன பேசியிருக்கிறார் என்று சொன் னால் இந்த நாட்டில் தீண்டாமை இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தீண்டாமை இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஒரு மதம் தேவையா? ஒரு மதத் தலைவர் தேவையா? என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்பு கிறேன். தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டில் பிறந்து இந்த நாட்டில் இருக்கின்ற மக்களை தட்டி எழுப்பி நீ யார் என்று கேட்ட நேரத்திலே நான் பிராமணன் அல்லாதவன். என்று சொன்ன நேரத்திலே இல்லை, இல்லை நீ தமிழன் உன்னை தமிழன் என்று சொன்னால் நீ எங்கே தளிர்நடை போட்டுக் கொண்டு இந்த தமிழகத்தை ஏற்றமிக்கதாய் மாற்றி விடுவாயோ என்று கருதிக்கொண்டு உன்னை தமிழன் என்று சொல்ல கூச்சப் பட்டுக்கொண்டு பிராமணர் அல்லாதவர் என்று குறிப்பிட்டார் கள் என்று தமிழ் இனத்தை அடையாளம் காட்டியவர் தந்தை பெரியார் அவர்கள். அப்படி வாழ்ந்த ஒரு சமுதாயத்தில் இன் றைய தினம் தீண்டாமை இருக்க வேண்டும் என்று ஒரு மதத் தலைவர் சொல்கிறார் என்று சொன்னால் நான் இங்கே இருக் கிற மாமன்ற பெருமக்களைப் பார்த்து கேட்கிறேன் தயவு செய்து அப்படிப்பட்ட மதம் இந்த நாட்டுக்குத் தேவையா? அப்படிப்பட்ட மதத் தலைவர் இந்த நாட்டுக்குத் தேவையா என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் இன்னும் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொருளாதாரத்தில் ஒன்றைச் சொல்வார்கள்,

Nurse the baby, feed the child, free the man என்று சொல்வார்கள்,

நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த நாட்டில், எந்த வளம் இல்லை, எல்லா வளமும் இருக்கிறது. ஆனால் நாட்டில் இன்றைய தினம் இருக்கிற மக்களில் 60 சதவீத மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே மூழ்கிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு மூலக் காரணம் என்ன? இந்த நோய்க்கு மூலக் காரணம் என்ன? என்று பார்த்தால், நம்முடைய மதிப்பிற்குரிய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சொல்வார்கள் ''இந்த நாட்டில் எல்லா வளமும் இருக்கிறது. இல்லாதது அறிவு ஒன்றுதான். ஆகையால் அறிவு இல்லாத சமுதாயமாக இருக்கிற காரணத்தால் தான் நாம் வறுமையில் வாடுகிறோம். ஜப்பானில் எந்த வளமும் இல்லை. ஆனால் அறிவு இருக்கிறது அதன் விளைவாக அங்கே இருக்கின்றவர்கள் வளத்தோடு வாழ்கிறார்கள்''. இதை டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிடுவார்கள். நான் இங்கே கேட்கிறேன் இந்த நாட்டிலே இல்லாதது எதுவும் இல்லை. ஆனால் இருக்கிற அறிவை கடந்த 3 ஆயிரம் ஆண்டுகளாக அறிவுள்ள சமுதாயத்தை முட்டமாக்கி வைத்ததன் விளைவாக இன்றைய தினம் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிடுகிறபோது அப்படிப்பட்ட சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கு ஏற்றம் மிக்க சமுதாயமாக மாற்றுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டியது நமது கடமையல்லவா? தமிழர்கள் இன்றைய தினம் சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கிறார்கள். ஆண்டு ஆண்டு காலமாக இப்படி இருக்கிற அந்த சமுதாயத்தைச் சார்ந்தவர் வாழ்வதற்கு ஏதாவது திட்டங்கள் தீட்ட வேண்டும்; அப்படிப்பட்ட திட்டங்கள் வருகிறபோது அப்படி யாருக்கு நாம் வாழ்வு அளிக்க முற்படுகிறோமோ அவர்களே கூட எதிர்த்ததாக வரலாறுகள் இருக்கின்றன. அமெரிக்க நாட்டின் அடிமைகளை ஒழிக்க வேண்டும் என்று ஆபிரகாம் லிங்கன் அவர்கள் முயற்சித்த நேரத்தில், எந்த அடிமைக்காக அபிரகாம் லிங்கன் அவர்கள் பாடுபட்டார்களோ அந்த லிங்கனை அதே அடிமைதான் சுட்டுக் கொன்று இருக்கிறான் என்று வரலாறுகள் கூறுகின்றன. அதைப் போலவே தந்தை பெரியார் அவர்கள் இந்த சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில் யார் அந்த சமுதாயக் கொடுமைகளுக்கு ஆளாகி இருக்கிறார்களோ அவர்களே தந்தை பெரியார் அவர்களை ஆரம்பக் காலத்தில் கடுமையாக எதிர்த்தார்கள். ஆகவே எந்த சமுதாயத்திற்காக பாடுபடுகிறோமோ அந்த சமுதாயமே கூட ஆண்டு ஆண்டு காலமாக பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக தன்னே அடிமைப்படுத்திக்கொள்வதற்கு தயாராக இருக்கிற ஒரு சமுதாயத்திற்கு பாடுபடுகிற போது நான் ஒன்றைக் தெளிவாகச் சொல்ல வேண்டும். அந்த சமுதாயத்தில் பாடுபடக்கூடியவர்களை அவர்களுக்கு வழி காட்டிகளாக அந்த அந்த பகுதியில் உருவாக்கி அதன் மூலமாக நீ உன்னுடைய வாழ்க்கையை செவ்வனே அமைத்துக் கொள்ள வேண்டும், அறிவுள்ள சமுதாயமாக மாற வேண்டும்

1984 மார்ச் 28] [திரு. கே. சௌந்திரராசன்]

ஆற்றல் மிக்கச் சமுதாயமாக மாற வேண்டும், இந்த இந்த வகையில் என்னுடைய குழந்தைகளை வளர்க்க வேண்டும் குடும்பத்தை நடத்த வேண்டும் என்ற அளவுக்கு வழி காட்டுகின்ற முறையில் இந்த சமுதாயத்தை உருவாக்கினால் தவிர அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் கிடைக்க முடியாது.

(முற்பகல் 11-00)

ஜாதீயத் தலைவர்கள் பலர் இருக்கலாம், அவர்கள் ஜாதியைச் சொல்லிக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்கின்ற சூழ் நிலைதான் இந்த நாட்டிலே இருக்கிறது. இப்படியில்லாமல், அந்த ஜாதியை ஒழிப்பதற்கு, அந்த ஜாதியை அழிப்பதற்கு, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஜாதிக் கொடுமை என்னும் நோயைத் தீர்ப்பதற்கு அவர்கள் ஏதாவது முயற்சித்து இருக்கிறார்களா என்று கேட்டால் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

கடந்த ஆதி திராவிடர் நலத் துறை மானியத்தின் பொழுது கூடக் குறிபிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் முப்பதாண்டுக் காலத்திற்கும் மேலாக பாராளுமன்றத்திலேயும், சட்டமன்றத்திலேயும் இருக்கிறார்கள். ஆனால் உருப்படியான பலன் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா? அவர்கள் வேண்டுமானால் நன்றாக இருக்கிறார்களே தவிர அந்தச் சமுதாயம் உயர்ந்திருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காக எந்தெந்த வகைகளிலே பணியாற்றியிருக்கி றார்கள் என்றால், ஏதோ சட்டமன்றம் கூடுகின்ற பொழுது பேசுகிறார்களே தவிர ஏதாவது உருப்படியான பலன் கிடைக் கின்ற வகையில் செய்திருக்கிறார்களா என்று கேட்டால்...

திரு. எல். இளையபெருமாள் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அருமைச் சகோதரர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் என்னைப் பார்த்துக் குறிப்பிட்டதால்தான் நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. 1944-ஆம் ஆண்டு முதல், வெள்ளைக் காரன் காலத்திலேயே தீண்டாமையை ஒழிப்பதற்காக, எங்கள் பகுதியில் உள்ள 150 கிராமங்களில் உள்ள ஆதிதிராவிட மக்கள் எல்லா மக்களோடும் சேர்ந்து சமத்துவ வாழ்வு பெற வேண்டுமென்பதற்காக, வெள்ளைகாரன் காலத்திலேயே அடிபட்டதை மகிழ்ச்சியாக நான் சொல்லவில்லை, ஏதோ என்னால் முடிந்த அளவிற்கு, என்னுடைய தனி மனித சக்தியைக் கொண்டு செய்திருக்கிறேன். நண்பருக்குச் சொல் கிறேன், அரசியலில் புகுந்த பிறகு, இந்தியா பூராவும் சுற்றி ஆளுங் கட்சியிலிருந்துங் கூட, என்னுடைய கட்சி, என்னுடைய தலைவர் அதை ஏற்படுத்தினாலும் கூட, நான் நிதானமாக நிலைமைகளை விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்தின்

மூலம், ஆளுங்கட்சியாக இருக்கும் அந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்கள் கடமையில் தவறியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய கடமையை நான் செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு புறத்தில் டெல்லியை ஆதரிக்கின்ற நேரத்தில், அவர்கள் இங்கே மதத் தலைவர்களை அனுமதிக்கிறார்கள். தீண்டாமையை எதிர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். காலையிலே தபால் கவரை எடுத்துப் பார்த்தால், அதிலே காந்தியின் படத்தைப் போட்டு, Untouchability is a crime against God and Man என்று எழுதியிருக்கிறது. ஆனால், அண்டச்சபிலிட்டி இருக்க வேண்டும் என்று யாராவது சொன்னால் அதற்கு ஏதாவது கிரிமினல் ஆக்ஷன் எடுக்கிறார்களா என்றால் இல்லை. அதைச் செய்யத் தவறியிருப்பதற்காக மத்திய அரசை நான் கண்டிக்கிறேன். இதை நான் சொல்கிற பொழுது நம்முடைய பெரியவர் இளைய பெருமாள் போன்றவர்கள் சொல்வார்கள், நாங்கள் டெல்லியிலேயிருந்து பாடுபட்டோம் என்று. எங்களுக்குத் தெரியும்.

** ** **

என்ற முறையிலே இருக்கக் கூடியவர்கள் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஆகவே, அதைப்பற்றி நாங்கள் கவலைப் படவில்லை. நான் குறிப்பிட விரும்புவதெல்லாம். மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல், தவறு என்று தெரிந்தால்(குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் தனிப்பட்ட முறையில் என்னென்ன செய்தார்கள் என்று சொன்னதை ஏற்றுக் கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராசன் அவர்கள் சொல்கிறார்கள். கட்சியால் முடியவில்லை என்ற கருத்தில் தான் அவர் சொல்கிறார்.

திரு. கே. சௌந்திரராசன் : பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கிருக்கிற சமுதாய நோயை நீக்குவதற்காகத்தான் 1959 ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது; அந்த நோயை நீக்குவதற்காகத்தான் சட்டநாதன் குழு அமைக்கப்பட்டது ; அந்த நோயை நீக்குவதற்காகத்தான் அம்பாசங்கர் குழு அமைக்கப்பட்டது. இப்படி அந்த நோயை நீக்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வதற்காக ஒரு புறத்தில் இப்படிப்பட்ட குழுக்களை உருவாக்கினாலும், மறுபுறத்தில் தீண்டாமை வேண்டும் எனும் மதத் தலைவர் இருக்கிறார் என்றால் கண்டிக்க வேண்டாமா? மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

இன்னும் சொல்லப்போனால், காடு திருத்தி, கழனியாக்கி, வரப்பெடுத்து. வாய்க்கால் பெருக்கி, விதை நெல்லைப் போட்ட பிறகு, அதில் வருகின்ற விஷக் கிருமிகளை அழித்து, அதன் மூலம் களையை எடுத்தால்தான் அந்தக் கழனியிலே உற்பத்தியின் பலன் கிடைக்க முடியும். ஆனால், மத்திய அரசு, காடு திருத்தி, கழனியாக்கிய பிறகு, அதில் உள்ள மதம் என்னும் நச்சுக் கிருமிகளை அழிப்பதற்காக மருந்து அடிக்க மாட்டோம் என்று சொன்னால், இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் பிற்பட்டோரை ஏமாற்றுவதற்காகத்தான் பயன்படுமே தவிர, நிச்சயமாக இது பிற்பட்டோரை வளர வைப்பதற்கு உறுதுணையாக அமையாது.

ஆகவே அந்த வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிற போது இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சலுகை தர வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதைச் சலுகையாகக் கூட நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். சலுகை என்பது அவர்களுக்காக ஏதோ விட்டுக் கொடுப்பது போன்றதாகும். அப்படி அல்ல. வஞ்சிக்கப்பட்ட ஒரு தலைமுறைக்கு நாம் செய்ய வேண்டிய தலையாய கடமைதானே தவிர சலுகையாகச் சொல்லி, பிச்சைப் பாத்திரம் ஏந்துவது போன்ற நிலைமையில் சொல்வது சரியல்ல. ஆகவே இந்த நிலைமைகளை எல்லாம் போக்குகின்ற வகையிலே திட்டங்களை முடுக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே 467 மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அவைகள் போதுமா என்று பார்க்கின்றபோது தமிழகத்திலே உள்ள ஜனத் தொகையினைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது அவை ஒரு சதவீதம் கூட இல்லை. கால் சதவீதம் மாணவர்களைத்தான் அங்கே சேர்த்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கின்றது. திருச்சி போன்ற நகரங்களில் விடுதிகளிலே சேர வேண்டும் என்று மாணவர்கள் வருகிறார்கள். ஆனால் திருச்சி மாவட்டம் முழுவதையும் சேர்த்துப் பார்த்தால் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 1,700 மாணவர்களை மட்டும் அந்த விடுதிகளிலே சேர்த்துக் கொள்வது என்றால் பரிகாரம் கிடைக்காது. ஆகவே அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரப் பரிகாரம் காண

வேண்டும். எந்த அளவுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மனுச் செய்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் இடம் கிடைக்கின்ற வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : சகோதரர் இங்கே பேசுகின்ற போது ** ** ** **

(கூச்சல் — குழப்பம்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :

** ** ** **

ஆகியவை பற்றிக் குறிப்பிட்டது தேவையில்லாத ஒன்று என்பதால் அவற்றை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (கூச்சல் — குழப்பம்.)

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, நீக்கினால் இரண்டையும்தான் நீக்க வேண்டும். நான் சொன்னதை மட்டும் நீக்கிவிட்டு அவர் சொன்னதை நீக்காமல் இருப்பது சரியல்ல (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை) :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சௌந்திரராஜன் குறிப்பிட்டது என்ன ?...... (குறுக்கீடு).

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, தாங்கள் சேரிலே இல்லாதபோது மாற்றுத் தலைவர் அவர்கள் இருந்தார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சௌந்திரராஜன் அவர்கள்......

** ** ** ** **

என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பழமொழி ஒன்றும் அன்பார்லிமெண்டரி அல்ல. (கூச்சல் — குழப்பம்.)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

1984 மார்ச் 28]

(முற்பகல் 11-10)

திரு. எல். இளையபெருமாள் : பழமொழி அன்பார்லிமெண்டரி இல்லையென்றால் இரண்டும் இருக்கட்டும். இல்லாவிட்டால் இரண்டையும் நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மிக சாதாரண விஷயம் (கூச்சல் —குழப்பம்).

திரு. எல். இளையபெருமாள் : You are the authority you have to decide it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, இரண்டும் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு).

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ** ** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றதைத் திரும்பவும் சொல்லக் கூடாது. இதுவும் நீக்கப்படுகிறது.

*திரு. எஸ்.ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். இம்மானியக் கோரிக்கைக்கு, ரூ. 10,98,64,000 அதாவது, கிட்டத்தட்ட ரூ. 11 கோடி, 1984-85 ஆம் ஆண்டில்—பிற்பட்டோர் நலத் துறைக்காக—ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் துறையின் பொறுப்பிலே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1979-80 ஆம் ஆண்டு இந்தச் சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்தபொழுது, பிற்பட்டோர் நல மானியத்தில் பேசும் பொழுது அவர் குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ''கிட்டத்தட்ட ¼ பகுதி முத்தரையர்கள் சமுதாயத்தினர், அதாவது 1 கோடி பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதிகமான அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பி இருக்கிறார்கள். கடைசியில் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்த மக்களுக்கு எந்தவிதமான உருப்படியான காரியங்களும் செய்யவில்லை என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று அவர் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். '' குறிப்பாக அரிசன மக்களை விட கேவலமாக பிற்பட்ட

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மக்கள் நடத்தப்படுகிறார்கள் ; பல இடங்களில் முத்தரையர்கள் ஆதிக்கம் பெற்ற சமுதாயத்தினரால் தீண்டத் தகாதவர்களாக, அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். டீ கடைகளில் டீ குடிக்கக் கூட அனுமதிக்கப்படுவதில்லை '' என்று இன்றைக்கு பிற்பட்ட நலத்துறையின் அமைச்சர் பொறுப்பில் இருக்கிற மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் அவர்கள் அன்றைக்கு சட்டமன்றத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பிற்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக வருகிறவர்கள் கூட பிற்பட்ட மக்களுடைய உரிமைகளை பாதுகாப்பதில், அவர்களுடைய நலனில் அக்கரை இல்லாமல் இருக்கிறார்கள் என்று அன்றைக்கு ஆதங்கப்பட்ட இன்றைய அமைச்சர் அவர்கள் அதற்காக பெரிய ஒதுக்கீட்டை இந்தத் துறைக்கு அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு நேர் மாறாக சுமார் 11 கோடி ரூபாய் தான் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1979—80 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 8 கோடி ரூபாயாக இருந்தது ; இன்றைக்கு இந்த அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள சமயத்தில் அந்தத் தொகை இன்னும் உயர்ந்திருக்குமேயானால் நான் நிச்சயமாக அவர்களைப் பாராட்டி இருப்பேன்.

இன்றைக்கு சமுதாயத்தில் சோஷியல் ஜஸ்டிஸ் (Social Justice) வேண்டும். சமுதாய நலத்தைக் குறிக்கோளாக கொண்டிருக்கும் நம்முடைய அரசு சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டும் ; சமுதாயத்தில் ஜாதிக் கொடுமைகளை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் அடிப்படையாக நம்மிடத்தில் இருந்தாலும் பிற்பட்ட மக்களுக்கு சலுகைகளை தொடர்ந்து தந்தால்தான் ஈக்குவாலிட்டியை (equality) உண்டாக்க முடியும். பிற்பட்ட மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டுமென்று தான் 1970 இல் பிற்பட்டோர் நலத்துறையென்று தனியாக ஆரம்பிக்கப்பட்டது.

புரொபோர்ஷனேட் ரெப்பரெசன்டேஷன் (Proportionate representation) அதாவது பல்வேறு ஜாதி மக்கள் இந்த மக்கள் மன்றத்திற்கு, நம்முடைய அரசு துறைகளுக்கு, அமைச்சர்களாக அல்லது சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பின்ர்களாக வந்து அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் குலாலர், கம்மாளர், தச்சர், வண்ணார், நாவிதர் போன்ற மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிற சமுதாயத்தினர் ஒன்றாக கூட்டமாக இல்லாத காரணத்தால், பல இடங்களில் பரவிக் கிடக்கிற காரணத்தால் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகச் செல்வதற்கு உரிமை கிடைப்பதில்லை என்று சட்டநாதர் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்து தனது அறிக்கையில் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கடந்த கூட்டத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது கருத்துக்களை

சொல்லி இருக்கிறார்கள். நாவிதர், வண்ணார் போன்று மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். நம்முடைய அரசிற்கு அதற்கு உரிமை இல்லாவிட்டாலும், நாம் ஒரு தீர்மானம் போட்டு, மத்திய அரசிடம் கேட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் பிச்சைக்காரர்களைப் போல் மிகவும் கேவலமாக இருக்கிற வண்ணார், நாவிதர் போன்ற ஜாதிகளைச் சேர்ந்தவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் இருக்கிற பிற்பட்ட மக்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சட்டநாதர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குலாலர் என்பவர்கள் மண் பாண்டங்களைச் செய்கிற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு புரோபோர்ஷனேட் ரெப்பரசன்டேஷன்கொடுக்காவிட்டால் அவர்கள் டாக்டர்களாக, என்ஜினியர்களாக, உயர்ந்த அதிகாரிகளாக வர இயலாது. காரணம் ஜனத்தொகை கணக்கெடுப்பின் போதும், நம்முடைய சட்டநாதர் அவர்கள் பல்வேறு பகுதிகளில் சுற்றி விவரங்களைச் சேகரித்த போதும் தெரிந்த தகவல்களை பார்ப்போமேயானால், கம்மாளர் என்ற மர வேலை செய்பவர்கள் அல்லது இரும்பு வேலை செய்பவர்கள் அல்லது குலாலர் போன்றவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

(முற்பகல் 11-20)

அதேபோல், நெசவுத் தொழிலில் சாலியர், பட்டிரியர், சௌராஷ்டிரா போன்ற பிரிவுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். நெசவுத் தொழில் என்பது லாபகரமான தொழில் இல்லை என்பதை நாம் அறிவோம். நெசவுத் தொழிலில் இருக்கும் எத்தனையோ பிரச்னைகளை, சிக்கல்களை, அவர்களுக்கு சாயம் வழங்கப்படாமல் மலிவு விலையில் நூல் வழங்கப்படாமல் இருப்பது போன்ற நிலைமைகளை நாம் அறிவோம். அதனால் அவர்கள் மிகவும் நலிந்த நிலைக்குப் போய்க்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலில் இருப்பவர்கள் குடும்பத்திலே படித்தவர்கள், பட்டதாரிகள் இல்லை என்பதை உணர்ந்து அப்படிப்பட்டவர்களுக்கும் தனிச் சலுகை அளிக்கும் வகையில், மிகவும் 'பின்தங்கிய சமுதாயம் என்ற பிரிவை ஏற்படுத்தலாம். அதை நம்முடைய மாநில அரசே ஏற்படுத்தலாம், அவர்களுக்கு பிரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு முக்குவர், பரவர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் பரதர் என்று இருக்கின்றனர். அவர்களுக்கு பிற்பட்ட இனத்துவருக்குக் கிடைக்கும் சலுகை கிடைக்கவில்லை. இப்படிப்பட்டபிரிவைச் சேர்ந்தவர்கள் ஒரு 100 அல்லது ஆயிரம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆகவே இவர்களையும் பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரள முதலி என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறார்கள். இவர்கள் சவரத் தொழிலில் ஈடுபடுவர்கள் அல்ல. சட்டநாதன் அறிக்கையில்கூட இவர்களைப் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் நாவிதர், கவரா என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள். இவர்கள் குமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, குமரி மாவட்டத்தில் இருக்கிற கவரா இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செக்காலா, கிருஷ்ண வகை என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் குமரி மாவட்டத்தில் மட்டும் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு காலத்தில் ஆடு வளர்க்கும் யாதவ இனத்தில் இருந்தவர்கள் என்றும், அதற்கு அடுத்து கோனார் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளக்கம் தரப்பட்டாலும், இந்த கிருஷ்ண வகை இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டமாக வாழ்ந்தாலும், அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில், பஞ்சாயத்து மன்றங்களில் தலைவர்களாக வர வாய்ப்பு இல்லை. அரசு அலுவலகப் பொறுப்பிலேகூட யாரும் வரவில்லை. இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மருத்துவத்துறையிலும் வரமுடியவில்லை என்ற பெரும் குறை இருக்கிறது. அவர்கள் பிரத்யேக தன்மை கொண்டவர்கள். அவர்கள் தமிழ்மொழி பேசினாலும், அது மலையாளம் கலந்த மொழியாக இருந்து வருகிறது. ஆகவே, அவர்களுக்கு பிரத்யேக சலுகைகள் ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிதர் இனத்தை பிற்பட்டார் பட்டியலில் வைத்து இருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு 50 சதவீதம் ரிசர்வேஷன் அப்பாயின்ட்மென்ட்டில் வைக்கப்பட்டிருந்தாலும் அந்த ரிசர்வேஷன் சரியாக எல்லோருக்கும் கிடைக்கும்வகையில் அமுல் செய்யப்படவில்லை. அதற்கு மேல் அதை உயர்த்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து, எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஏற்ற வகையில் ப்ரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷன் கொடுத்தால்தான் சோசியல் ஜஸ்டிஸ் அளித்த

தாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன் பிற்பட்ட வகுப்பினர் நலன் கருதி அனைத்துத் துறைகளுககும். சேர்த்து ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தீட்டுவதற் காக மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், பிற்பட்ட மக்கள் இருக்கிற பகுதிகளில் பல்வேறு நலப் பணிகள் நடைபெற வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மீனவர்கள் இருக்கிற குளச்சலில் துறைமுகம் உடனடிகட்டப்பட்டால்தான் பிற்பட்டவர் வளம் பெற, மீனவர்கள் நல்ல வளர்ச்சி பெற வாய்ப்பு உண்டு. அதற்கு என்ன செய்யவேண்டுமென்று அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதைப்போன்று அந்தப் பகுதியில் மீன வர்கள் வாழுகின்ற சைமன் காலனி ஒன்று இருக்கிறது. அங்கே ஒருபாலம் கட்டப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்தப் பாலம் கட்டப்பட்டால்தான் அங்கே இருக்கிற மீனவர்கள் வாழ்க்கை வளம்பெறும்; அவர்களுடைய வியாபாரத்தை பெருக் கிக்கொள்ள முடியும்; அவர்களுடைய குழந்தைகள் முறையாகப் பள்ளிக்குச் சென்று கல்வி பெற வாய்ப்பு இருக்கும்.

அதைப்போன்ற சாலைப் போக்குவரத்து, அங்கே இருந்தா லும், மற்ற பணிகளில் உரிய கவனம் செலுத்த வேண்டும். பனைபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், சாலை போடு தல் போன்ற பணிகளில் எல்லாம் இந்த பிற்பட்ட நலத்துறை தலையிட்டு, இந்தத் துறையில் பல்வேறு முன்னேற்றங்களைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு ஊராட்சிகளில், ஊராட்சி ஒன்றி யங்களில் டோபிகானா அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று நகர்ப்புறங்களில் டோபிகானா இப்போது இல்லாமல் இருக்கிறது; அங்கேயும் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பிற்பட்ட மக்களிடையே வேலையில்லாத் திண் டாட்டம் பெருவாரியாக இருக்கிறது. அரசு இந்த வேலையில் லாத் திண்டாத்தை நீக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டு, இந்தத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ் தவ மதத்திற்கு மாறினால் அவர்கள் 'ஃபார்வார்டு', ஆகிவிட்ட தாகக் கருதப்படுகிறார்கள். அதிலும் 'சால்வேஷன்ஆர்மி' என்று சொல்லப்படுகின்ற இரட்சனிய சேவை இருக்கிறது, அதிலே இந்த அரிசன மக்கள் சேர்ந்து விட்டால் அவர்கள் ஃபார்வார்டு

கம்யூனிட்டி என்று கருதப்படுகிறார்கள். ஆனால் இதர எல்.எம்.எஸ்., ஆர்.சி. மதத்தில் சேர்ந்தால் அவர்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இது சரியான அணுகுமுறை அல்ல. அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சால்வேஷன் ஆர்மியில் சேர்ந்துவிட்டால் அவர்கள் பின்தங்கிய நிலையைத் தாண்டிவிட்டார்கள். பிராமணர் அந்தஸ்துக்கு உயர்ந்துவிட்டார்கள் என்று எண்ணுவது சரியல்ல. அவர்களுக்கும், அவர்களுடைய நிலையை சிந்தித்துப் பார்த்து, சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண். 32-ஐ வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற்பட்ட நலத்துறை 1969 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அதற்கு என்று தனியாக, பிற்பட்ட வகுப்பினர் மேம்பாட்டுக்காக தனியாக மானியம் கொண்டுவரப்பட்டது 1971 ஆம் ஆண்டுதான். அதற்குப் பிறகு இந்தத் துறையை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இதற்கு என்று ஒரு தனித் துறையை ஏற்படுத்தி, தனியாக ஒரு அமைச்சரையும், நியமித்திருக்கிறார்கள். ''குழந்தையின் அருமை பெற்றவருக்குத்தான் தெரியும்'' என்று சொல்வார்கள். அதைப்போல பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவரை இந்தத் துறைக்கு அமைச்சராக நியமித்தால்தான் இருக்கிற குறைபாடுகளைக்களைய முடியும் என்று அடிப்படையில் இன்றைக்கு தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி, அந்தத் துறைக்கு பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக நியமித்து, கேட்பாரற்று இருந்த சமுதாயத்தில் தங்களுக்கு என்று பலர் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டத் தான் இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அமைச்சரை இந்தத் துறைக்கு நியமித்திருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி, அதற்கு என்று தனியாக ஒரு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சரையும் நியமித்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்பதைத் தெரிவித்து, அதற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் தமிழக முதல்வர்........

திரு. ஜே. எஸ். இராசு: துணைத் தலைவரவர்களே, ஒரு கிளாரிஃபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கராசு அவர்கள் பேசும் போது பிற்பட்ட நலத் துறையை உருவாக்கியதும் அதற்காக தனியாக ஒரு அமைச்சரை நியமித்திருப்பதும் இன்றைய அ.தி.மு.க. ஆட்சியில்தான் என்ற பொருளில் பேசினார்கள். (குறுக்கீடு)

1984 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஏற்கெனஇருக்கிறது என்பது எல்லோருக்கும். தெரியும். இதில் பிரச்சினை ஒன்றும் இல்லை.

(முற்பகல் 11-30)

திரு. ஏ. தங்கராசு: 1971 ஆம் ஆண்டில் இதற்கு தனி மானியம் இந்த ஆட்சியில் தான் கொண்டுவந்தார்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) 1971 ஆம் ஆண்டில் இதற்கு ஒரு தனி மான்யமாகக் கொண்டுவந்து, அதற்கு ஒரு முழு உருவம் தந்தது, புரட்சித் தலைவருடைய ஆட்சியில் தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். இந்தத் துறைக்கு முழு உருவம் தந்தது புரட்சித் தலைவருடைய ஆட்சியில் தான் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த பிற்பட்ட சமூகத்திற்கென, ஒரு தனி அமைச்சரை நியமித்தது, அதற்கென ஒரு துறையை ஏற்படுத்தி, இதைக் கண்கணிக்கக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்தது இந்த புரட்சித் தலைவர் ஆட்சித் காலத்தில் தான் என்பதை(குறுக்கீடு)

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். அப்படித் தவறான தகவலைத் தருகிறபோது, மற்றவர்கள் பேசும் போது, தாங்கள் குறுக்கிட்டு, அதை நீக்குவதுபோல், இதையும் நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுட்டிக்காட்டுங்கள். நான் ஒவ்வொன்றையும் விசாரித்துக்கொண்டிருக்க முடியாது. 'You bring it to my notice, I will expunge it'

திரு. ஜே. எஸ். இராசு : உறுப்பினர் தங்கராசு அவர்கள் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் சரியான தகவலைத் தருகிறாரா, அல்லது தவறான தகவலைத் தருகிறாரா என்பது பற்றி மற்ற உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் சுட்டிக்காட்டலாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தங்கராசு அவர்கள் பேசுவதெல்லாம், இன்று இதற்கு ஒரு தனி துறை ஏற்படுத்தப்பட்டு, இதற்கென ஒரு அமைச்சரும் போடப்பட்டிருப்பதன் முக்கியத்துவத்தை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் இராசு போன்றவர்கள் இதிலே தலையிட்டு, தவறான தகவல் தருகிறார் என்று சொல்வது சரியாக இருக்கமுடியாது. எனவே, அவர்கள் பேசுவதற்கு வழி விடவேண்டும். இந்த மாமன்றத்தின் நேரத்தை வீணடிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கராசு போன்ற உறுப்பினர் பேசுகின்றபோது, குறுக்கிடவேண்டுமென்பது ராசுவுக்கோ, எனக்கோ அவா இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிற்படுத்தப்பட்டவருக்கென ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டு, தனி அமைச்சர் போடப்பட்டு, தனியாக இம்மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. திரு தங்கராசு போன்றவர்களுக்கு இது விளங்காமல் இருக்கலாம். அதனால் குழப்பிச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். திரு. தங்கராசு அவர்களுக்கு எங்கள் மீதுகுற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்காது. ஆனால் இதிலே நம்முடைய அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் புகுந்து, சந்தடி சாக்கில் இதைக் குழப்பி விடக்கூடாது என்பது தான் என்னுடைய ஆசை.

திரு. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னால், தமிழகத்தில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பிற்படுத்தப்பட்ட நலத்துறை பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 5 வயது முதல் 9 வயது வரையிலும், பிறகு 10 வயது முதல் 14 வயது வரையில் உள்ள மாணவர்களுக்கும் சத்துணவு வழங்குவதற்கு இந்த அரசு ரூ. 23.82 இலட்சம் வழங்கியதை நான் பாராட்டுகிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.

அதற்குப் பின்னால், மேல்நிலைத் பள்ளித் தேர்வில் பிற்பட்ட மாணவர்களுக்கு, இந்த பிற்பட்ட நலத்துறையின் மூலமாக பரிசு வழங்கும் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும், ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு இந்த அரசு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அதை நான் பாராட்டுகிறேன்.

அதற்குப் பின்னால், உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு இரண்டு ஜோடி சீருடை வழங்குவதற்கு இந்த அரசு 10,20,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல், பகுதி நேர போதனை ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்குப் பின்னால், மாணவர்களுக்கு 3-ஆம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் பாட நூல் நிறுவனத்தின் மூலமாக வழங்குவதையும் நான் பாராட்டுகிறேன்.

அதற்கு அடுத்து, 8-ஆம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் இரு ஜோடி உடைகள் வழங்குவதற்காக இந்த அரசு 25,46,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதையும் நான் பாராட்டுகிறேன்.

பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்காக பிற்பட்ட நலத்துறை மூலமாக, மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தி, நடத்தி வருகிறார்கள். 1983-84 ஆம் ஆண்டு 483 மாணவர்கள் இல்லங்கள் நடத்தி வருகிறார்கள். இவற்றில் 62 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும், ஒன்று, தொழில் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்காக, 23,79,000 ரூபாய் செலவிடப்பட்டு இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மேலும், 40 மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு 7 லட்சம் ரூபாய் செலவில் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக, 2 இல்லங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதையும் நான் பாராட்டுகிறேன்.

அடுத்து தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் இல்லங்களுக்கு மாணவர் ஒன்றுக்கு உணவுச் செலவிற்காக சென்னையில் ரூபாய் 45-ம் மற்ற இடங்களில் ரூபாய் 40-ம் கொடுக்கப்பட்டு வருகிறது இதற்காக, 10,07,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை நான் பாராட்டுவதோடு அல்லாமல், இந்த மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 5 ஆயிரம் என்று இருக்கிறது. அதை உயர்த்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் கிராமப் பகுதியில் இருப்பவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் இந்த இல்லங்களில் சேர்ந்து படிப்பதற்கு போதிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு வருமானத்தை 10 ஆயிரமாக உயர்த்தவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னால், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள், ஆகியோர்களுக்கும் நாம் தொழிற்கல்வி வழங்கிவருகிறோம். அந்த வகையில் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு, இந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு, 1983-84-ஆம் ஆண்டு 6,250 பேர்களுக்கு அரசு சலுகை வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில், இந்த ஆண்டு 19,42,000 ரூபாய் ஒதுக்க அனுமதி தந்திருக்கிறது. அதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

அதற்குப் பின்னால், சலவைத் தொழிலாளர்களுக்கு, சலவைத் துறை கட்டுவதற்கு, அவர்கள் மேம்பாடு அடைவதற்கு முற்போக்குத் திட்டமாக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அரசாங்கம் 75 சதவீதம் மானியமும், உள்ளாட்சித்துறை 20 சதவீத மானியமும், பயனடைவோர். 5 சதவீதம் என்று கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதற்குப் பின்னால், மிகவும் நலிந்தவர்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக, நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக இன்றைக்கு 13,20,000 ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில் பிற்பட்டவர்களுடைய நலத்தில் இந்த அரசு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது என்னைப் போன்றவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்காக இந்த ஆண்டு 15 லட்சம் ரூபாய்க்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இப்படி பல கோணங்களில் இந்தப் பிற்பட்ட நலத்திற்காக அரசாங்கம் பல குறிக்கோள்களை வைத்து, 10 கோடியே 98 லட்சம் 64 ஆயிரம் ரூபாயைக் கோரியிருக்கிறது. இருந்தாலும் இந்தத் தொகை போதுமானதா, என்றால், என்னைப் பொறுத்தவரையில் போதாது என்றுதான் சொல்வேன். காரணம் இந்த அரசாங்கத்தின் மூலமாக பின்தங்கியவர்களுக்கு நாம் எவ்வளவு சலுகைகள் வேண்டுமானாலும் செய்து வருகிறோம். ஆனால் கிராமப் புறத்தில் உள்ள பின்தங்கிய மாணவர்கள் இந்த மாணவர் இல்லங்களில் சேர்ந்து படிப்பதன் மூலமாகத் தான் அவர்கள் பயன் பெற வேண்டியிருக்கிறது. எனவே, கிராமப் பகுதியில் உள்ள மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்து படிக்கின்ற வகையில் இந்த மாணவர் இல்லங்களை அதிகமாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதற்குப் பின்னால், தமிழ்நாடு பிற்பட்ட நல வகுப்பினருக்காக உயர்மட்ட ஆணைக் குழு ஒன்றை, நம்முடைய அம்பாசங்கர் அவர்களை தலைவராகக் கொண்டு, 18 உறுப்பினர்கள் கொண்ட குழுவை இந்த அரசாங்கம் நியமித்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பாராட்டுகிறேன். அதற்குப் பின்னால், என்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, பின்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள பெரிய குப்பத்தில் ஒரு மாணவர் விடுதி இருக்கின்றது. அங்கே தற்போது 70 மாணவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அது கடலோரப் பகுதியில், மீனவர்கள் இருக்கின்ற பகுதியில் இருக்கின்றது. அங்கே 20 கிராமத்தினர் இருக்கிறார்கள். எனவே, அந்த விடுதியில் நிறைய மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறைந்தது 150 மாணவர்களையாவது இப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பெரிய குப்பம் பள்ளிக் கூடத்தில் 150 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11.40)

அடுத்து என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் குள்ளன் சாவடி, பூண்டியான்குப்பம், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில், பின் தங்கிய மாணவர்களுக்காக 5,6 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இந்த இடங்களில் அந்த மாணவர்களுக்கு இல்லம் கிடையாது. ஆகவே, குள்ளம் சாவடியை ஒரு சென்டராகவும், குறிஞ்சிப்பாடியை ஒரு சென்டராகவும் பூண்டியான்குப்பத்தை ஒரு சென்டராகவும் வைத்து, இந்த மூன்று இடங்களிலும் மூன்று மாணவர் இல்லங்களை, வருகிற ஆண்டிலாவது ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதை நான் தெரிவித்து, அதே நேரத்தில் சிதம்பரம் தொகுதியைச் சார்ந்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கே. ஆர். கணபதி அவர்கள், சிதம்பரம் தொகுதி, காட்டுமன்னார் கோயில், ஸ்ரீ முஷ்ணம் பகுதியில் உயர்நிலைப் பள்ளி இருக்கிற இடத்தில், பின் தங்கிய மாணவர்களுக்கான விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் ஏற்பாடு செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த பின் தங்கிய சமுதாய மக்களுக்கான மானியத்தை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் இங்கே பேச வந்திருக்கிறேன். இன்றையதினம் இந்த பிற்பட்டோர் நலத்துறைக்கு சுமார் 10 கோடியே சொச்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதை பார்க்கும் போது, அதுவும் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே 2 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பட்ஜெட் இருக்கும்போது, அதிலே இந்த 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பது கடலிலே கரைத்த பெருங்காயம் தான் என்பதை முதலிலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இந்த துறை ஏற்கனவே ஆதித்திராவிட நலத் துறையோடு இணைந்திருந்த ஒரு அமைப்பு. அதைப்பிரித்து சமீபத்திலே பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று ஏற்படுத்தி அதற்கு ஒரு அமைச்சரையும் போட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு பல அமைச்சர்கள் இருக்கிறாகள். இந்த அமைச்சரவையிலே இருக்கக்கூடிய 24 அமைச்சர்களையும் எடுத்துக் கொண்டால், அதிலே கிட்டத்தட்ட 80 சதவீதத்தினர் பிற்

படுத்தப்பட்ட பிரிவினர்களாக இருப்பார்கள் என்று கருது கிறேன். ஆனாலும் கூட இந்தத் துறையை தனியாக ஏற்படுத்தி அதற்கு அமைச்சரையும் தனியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள. அதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் நீங்கள் ஒதுக்கியிருக்கக்கூடிய இந்தத் தொகையையும் அந்த மக்களுடைய வாழ்க்கை நலனையும் ஒப்பிட்டு சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட பிரிவில் கள்ளர்கள், மறவர்கள் குறவர்கள், நரிக்குறவர்கள், வண்ணார், நாவிதர், காட்டு நாயக்கர் போயர்கள் இப்படி பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மக்களிலே கடைசி நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தாழ்த்தப்பட்ட மக்களை விட, கீழ் நிலையிலே இருப்பவர்களை சில இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். அப்பேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நாம் சலுகைகளை அளிப்பதற்காக ஒதுக்கியிருப்பது வெறும் 10 கோடி ரூபாய்தான் என்பதை அருமை ஆளும் கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்த்து, அதற்கேற்ற வாறு விமர்சிக்க வேண்டும்.

ஏனென்று சொன்னால் எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணம் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு போதாது. என்னுடைய மதுரை மாவட்டத்திலே திருமலைக் கள்ளர்கள் என்ற பிரிவினர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள் நான்கூட அவர்கள்படிக்கக்கூடிய ஒருபள்ளி விடுதிக்குச் சென்றிருந்தேன். அது உசிலம்பட்டி விடுதி என்று கருதுகிறேன். அந்த விடுதிக்குச் சென்றிருந்தேன். அங்கே மாணவர்கள் தங்கி படிப்பதற்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. அங்கே பெஞ்ச் கிடையாது. நாற்காலி கிடையாது. விரிக்கப் பாய் கிடையாது, எந்தவித சுகாதார வசதியும் கூட கிடையாது. அந்த அளவிற்கு மோசமான நிலையில் அந்த விடுதியை துறையினர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு அமைச்சர் கூட இருக்கிறார்கள். என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே தான் சொல்கிறேன், இந்த மானியத்தில் ஒதுக்கக்கூடிய தொகை போதுமானதாக இல்லை. இதிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள். கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மாதத்திற்கு 95 ரூபாயும், பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 50 ரூபாயும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவிற்கு அந்த மாணவர்களுக்கு வசதிகளை செய்துக் கொடுக்க, இந்தத் தொகையால் முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து மனசாட்சியோடு நாம் பேச வேண்டும்.

ஏதோ நாங்கள் வந்ததற்குப் பின்னால்தான் இந்தத் துறைக்காக இவ்வளவு தொகையைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு முன்னால் அந்த மக்களுக்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பது போன்ற பிரம்மை ஏற்படும் வகையில் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இதில் சத்துணவு திட்டத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். எதிலேயும் சத்துணவு திட்டத்தை விட்டது கிடையாது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அதில் சத்துணவு நுழைந்து விடுகிறது. சரி சொல்லுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இந்த மாதிரியான சாதனைகளை எடுத்துச் சொல்வதால் மட்டுமே, அவர்களுடைய பிரச்னைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாம் என்று நினைப்பது மாபெரும் தவறு. அதேபோல் இன்றைக்கு இந்தப் பள்ளியிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு பரிசு என்று, இந்த புள்ளி விவரத்திலே சொல்லியிருக்கிறார்கள். முதல் பரிசு 100 ரூபாய் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு, அவர்களுக்கு இரண்டாவது பரிசு 50 ரூபாய், 8வது வகுப்புக்கு முதல் பரிசு 50 ரூபாய் இரண்டாவது பரிசு 10 ரூபாய் என்று எல்லாம் எதற்காக புள்ளிவிவரம் கொடுக்கிறீர்கள்? 10 ரூபாய் பரிசுகொடுக்கிறோம் என்று தைரியமாக ஆளும்கட்சியைச் சேர்ந்த யாரும் இங்கே சொல்லமுடியவில்லை. ஆகவே இந்த ஊக்கத் தொகையை அதிகப்படுத்தவேண்டும். ரூ. 2,000, 3,000 என்று கொடுத்தால் அது பெருமையாக இருக்கும்.

2 ஜோடி சட்டைகள் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குக் கொடுப்பதாகத் தெரிகிறது. நாங்கள் விசாரித்ததில் யார் யாருக்குக் கிடைத்தது என்று பார்த்தால் யாருக்குமே கிடைக்கவில்லை. எனவே இதுவெல்லாம் வெறும் ஏமாற்று வேலை தான்.

போயர்களுக்கு கருவிகள் வாங்குவதற்காக உதவிசெய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஊருக்கு 8 பேர்கள் 10 பேர்கள்தான் அவர்கள் இருப்பார்கள். என்னுடைய ஊரிலே இருக்கிற அந்த போயர்களுக்கு எந்த தொழில கருவியும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் வேண்டுமென்று மனுப்போடுகிறார்கள். மாவட்ட அளவிலே உள்ள அதிகாரிகளைப் போய் அதைக்கேட்கிற அளவிலே அவர்கள் இல்லை. ஏனென்றால் தாலுக்கா அளவிலே அதற்காக அதிகாரிகள் இல்லை. மாவட்ட அளவிலேதான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அது கிடைப்பதில்லை. உண்மையில் அந்த மக்களுக்கு உதவிட வேண்டுமென்றால் நிதியை அதிகமாக ஒதுக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்கள், பிற்பட்டவர்கள் என்கிறவர்கள் 10 லட்சம் பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 10 லட்சம் பேர்களுக்கு நீங்கள் ஒதுக்குகிற தொகை போதாது, அதைப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒரு சில ரூபாய்தான் வரும். அதைவைத்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேறமுடியாது. மண்டல் கமிஷன் அறிக்கைபற்றிச் சொல்கிறார்கள். எந்தக் கமிஷனைப் போட்டாலும் மக்களுடைய அடிப்படை பிரச்சினையை தீர்க்கமுடியாது. விவசாயத்தையே நம்பி வாழுகின்ற மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் இதன்கீழ் வருகிறார்கள், சலவைத் தொழிலைச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள், சவரத் தொழிலைச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். ஏதோ பெயரளவிற்கு சில ஆயிரத்தை ஒதுக்கி ஊருக்கு ஒன்றிரண்டு பேர்களுக்குக் கொடுத்துவிட்டு பார் நாங்கள் இந்த இலாகாவிற்கு தனித் துறையை, தனி அமைச்சரைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுவது தானே தவிர நிலைமைகளை பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உதவாது அந்தச் சமுதாயத்தினருடைய வோட்டுக்களைப் பெறுவதற்காகத் தான் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அல்ல. அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும், அந்த மக்களுக்கு உண்மையான பரிகாரம் வேண்டுமென்றால் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவேண்டும். அவர்களுடைய வருமானத்தை உயர்த்தவேண்டுமென்றால் நிலச்சீர்திருத்தைக் கொண்டுவரவேண்டும். நிலத்தைப் பங்கிட்டு அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

சலவைத் தொழிலாளர்களுக்கு 150, 200 ரூபாய் கொடுக்கிறார்கள். அதுவும் 10 ஆண்டுகளாக எந்தவிதமான சர்க்கார் கடனும் வாங்காமல் இருக்க வேண்டுமாம், அப்படிப்பட்டவர்களுக்குத்தான் அந்த உதவி என்று சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் சொல்லி பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. வாடகைக் கட்டிடத்திலே இருக்கிற விடுதிகளுக்கு சொந்தக கட்டடம் கட்டிக்கொடுக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்’ வேண்டும். அந்த விடுதியிலே 50 மாணவர்கள் தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 250 மாணவர்கள் வரையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற தனி அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 28]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எனக்கு முன்னால் இங்கே பேசிய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த நண்பர் பிற்பட்ட நலத்துறை மூலமாக இந்த அரசு செய்கின்ற பணிகளை ஏமாற்று வேலை என்று சொன்னார்கள். இந்த அரசு செய்கின்ற வேலையை நீங்கள் ஏமாற்று வேலை என்று சொன்னால் திரிபுராவில் நீங்கள் செய்கிற வேலை மோசடி வேலை என்று நான் சொல்லமுடியும். ஏன் என்றால் திரிபுராவில் நீங்கள் பிற்பட்டவர்களுக்கு எதையுமே செய்யவில்லை. சட்டமன்றத்தில் எதிர் கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் நீங்கள் நடந்துகொண்டு இருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இங்கே மிகச் சிறப்பாக இந்த அரசு செய்கின்ற பணிகளை எல்லாம் நீங்கள் பாராட்டுவதற்கு பதிலாக ஏமாற்று வேலை என்று நீங்கள் சொல்வது உண்மையிலே நீங்கள் செய்கிற மோசடி வேலை என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். பிற்பட்ட சமுதாயத்திற்காக இந்த அரசு தான் இந்தியாவிலேயே எந்த அரசும் செய்யாத சலுகைகளை இங்கே செய்து கொண்டு இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். பிற்பட்டவர்களுக்கு 32 சதவித ஒதுக்கீடு என்று இருந்ததை இந்தியாவில் எந்த மாநிலம் செய்யாத அளவுக்கு அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படவேண்டும் பிற்பட்ட சமுதாயத்தை இந்த நாட்டில் கைத்தூக்கி விடப்படவேண்டும் என்ற காரணத்திற்காக தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 32 சதவீதம் என்று இருந்ததை 50 சதவீதமாக சலுகைகளை உயர்த்தினார்கள் என்பதை ஏன் பேசுகின்ற எதிர்கட்சியினர் மறந்து விட்டார்கள் என்பதைதான் இந்த நேரத்தில் நான் கேள்வியாக கேட்க விரும்புகிறேன். 32 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக சலுகைகள் உயர்த்தியது சாதனை இல்லையா? ஏன் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த இந்த அரசை பாராட்ட மறுக்கிறார்கள். என்பதைதான் இன்று நாட்டு மக்கள் வியப்போடு உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 32 சதவீதத்தை 50 சதவீதமாக உயர்த்தியதன் காரணமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற பிற்பட்ட சமுதாயத்தினர் இன்று தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அது மட்டும் அல்ல, இந்த ஆட்சியில் தான் பிற்பட்ட சமுதாயத்தில் இருக்கிறவர்களுக்கு எல்லாம் அரசியல் துறையிலும் அவர்களை தூக்கிவிட வேண்டும் என்று அண்மையில் தமிழக அரசு ஆளுநர் அவர்கள் மூலமாக சட்டமன்ற மேலவைக்கு மூன்று

உறுப்பினர்களை நியமனம் செய்தார்கள். அதில் திரு அங்க முத்து என்பவர் பொற்கொல்லர் வகுப்பைச் சேர்ந்தவர். திரு கோலப்பன் என்பவர் பார்பர் இனத்தைச் சார்ந்தவர், திரு. மாசிலாமணி என்பவர் டோபி இனத்தைச் சார்ந்தவர், ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த அரசு எந்த அளவுக்கு நியமனம் செய்கின்றபோது கூட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக நாட்டு மக்கள் மத்தியில் அவர்கள் குரல் ஒலிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சட்டமன்ற பேரவையிலும், மேலவையிலும் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்து வத்தை இந்த அரசின் மூலமாக செய்து கொண்டிருப்பதை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டாமல் இருப்பது உண்மையிலே வருத்தத்தை அளிக்கிறது. அதைப் போலவே இந்த அரசு பிற்பட்டவர்களுக்கு பிற்பட்டோர் நல வாரியம் என்ற ஒரு வாரியத்தை அமைத்து 10 கோடி ரூபாய்க்கு மேல் நிதியை அதற்கு ஒதுக்கி இன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற பிற்பட்டவர்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டும், தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இப்படி செய்யப்படுகின்ற இந்த செயல்களின் மூலமாக இன்று பிற்பட்ட சமுதாயத்தினர் தமிழக அரசின் மூலமாக தமிழ்நாட்டில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்று இரண்டு கருத்துக்களை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பாக வருமான உச்ச வரம்பு திட்டம் என்ற ஒரு திட்டத்தை இந்த அரசு ஏற்கனவே முதலில் கொண்டு வந்தது. ஏன் இதை சொல்கிறேன் என்றால் பிற்பட்ட துறையின் மூலமாக பிற்பட்டோர் என்று சொல்கின்ற அந்த பிரிவில் வருவதன் மூலமாக உண்மையிலேயே பிற்பட்டவர்கள் அந்த பிற்பட்டோர் துறையில் இருக்கின்ற மிக மிக ஏழைகள் பயன்பெறுகிறார்களா என்று பார்த்தால் மிக குறைவாக இருக்கிறது. அதிலே என்னுடைய கருத்தாக தெரிவிப்பது எல்லாம் இந்த பிற்பட்டவர்கள் துறையில் வருகின்ற எந்த சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அந்த துறையில் இருக்கின்ற அடி மட்டத்தில் இருக்கின்ற ஏழைகள் பயன்பெறுகிற வகையில் அவர்களுக்கு ஒரு திட்டத்தை தீட்டி ஆக வேண்டும். அதற்காகவாவது வருமான உச்ச வரம்புச் சட்டத்தை கொண்டு வந்தாக வேண்டும். ஏன் என்றால் பிற்பட்டவர்கள் என்று வருகின்ற காரணத்தால் அங்கே அந்த ஜாதியில் உள்ள வசதியானவர்கள் இருக்கிறார்கள், அங்கே மிகவும் பணக்காரர்கள் இருக்கிறார்கள் இவர்கள் எல்லாம் அந்தச் வாய்ப்புகளை பெற்று விட்டு அந்தச் இனத்தில் இருக்கின்ற மிக மிக ஏழைகளாக இருப்பவர்களுக்கு அந்த சலுகைகள் கிடைக்காமல் இருக்கக் கூடாது என்ற எண்ணம் தான் என்னிடத்தில் இருக்கிறது. ஆகவேதான் முன்பு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலை

1984 மார்ச் 28] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

தலைவர் அவர்கள், வருமானத்தை உச்சவரம்பாக வைத்து சலுகைகளைப் பெறும் விதத்தில், 9,000 ரூபாய் என்ற உச்சவரம்பை வைத்து அருமையான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். வேண்டுமென்றால் உச்சவரம்புத் தொகையை கொஞ்சம் அதிகப்படுத்தி 9,000 ரூபாய் என்பதை 15,000 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வருமானத்தை உச்சவரம்பாக வைத்துக் கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான் உண்மையிலேயே பிற்பட்ட இனத்தில் மிகமிக ஏழைகளாக இருப்பவர்களுக்கு அந்த உதவிகள் கிடைக்க முடியும். எனவே, அதற்கு இந்த அரசு முயல வேண்டும் ; இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்டோர் பட்டியலில் கொண்டு வருவதற்காகப் பல்வேறு ஜாதிகளினுடைய கோரிக்கைகளையும் கவனிப்பதற்காக இந்த அரசின் சார்பில் அம்பாசங்கர் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த அம்பாசங்கர் கமிஷன் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்த மக்களின் குறைகளைக் கேட்டு வந்தது. அந்தப் பணி, 30-6-84 வரையில் நடக்கும். அது விரைவிலே முடிய இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த மக்களின் குறைகள் எந்த அளவிற்கு இந்தக் கமிஷனால் தீர்க்கப்படுகிறது அல்லது தீர்க்கப்பட வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதில் ஒன்று, நெல்லை மாவட்டத்தில் உள்ள சைவப் பிள்ளைமார்களும், அதைப்போல, குமரி மாவட்டத்தில் உள்ள வெள்ளாளர்கள். இந்த இரண்டு பிரிவினரும் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் உள்ள சைவப் பிள்ளைமார்கள் சொல்லுகிறார்கள் ; குமரி மாவட்டத்தில் உள்ள வெள்ளாளர்கள் சொல்கிறார்கள் ; சிதம்பரம் தாலூக்காவிலேயும் கொஞ்சம் பேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த மூன்று இடங்களிலேயும் உள்ளவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

ஆனால், சேலம் மாவட்டத்திலும், இன்னும் உள்ள பல்வேறு இடங்களிலேயும் துளுவ வேளாளர் என்பவர்கள் பிற்பட்டோர் பட்டியலிலே இருக்கிறார்கள். இப்படி துளுவ வேளாளர் என்ற இனம் பிற்பட்டோர் பட்டியலிலே இருக்கிறது. இப்படி ஏற்கனவே பிற்பட்டோர் பட்டியலில் இருககின்ற அந்தத் துளுவ வேளாளர் இனத்தில் விடுபட்ட சில பிரிவுகள் சிதம்பரம், கன்னியாகுமரி மாவட்டம், நெல்லை மாவட்டம் ஆகிய இடங்களிலே இருக்கின்ற பிள்ளைமார் பிரிவுகள் என்பதை நான் சொல்லிக் கொண்டு, எனவே, வேறு மாவட்டத்திலே ஏற்கனவே பிற்பட்டோர்

பட்டியலில் இருக்கின்ற அந்தத் துளுவ வேளாளர்களில் விடுபட்ட இனங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு சேர்த்து, அம்பாசங்கர் கமிஷன் ஜூன் மாதத்தில் அறிவிக்க இருக்கும் அறிக்கையில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதற்கும் பயனளிக்கும் விதத்தில் மத்திய அரசு, மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து, பேச வாய்ப் பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத்துறை சம்பந்தப்பட்ட 32 வது எண் மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூறுகிறேன்.

1969 ஆம் ஆண்டு இந்தத் துறை தனியாக ஆரம்பிக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டிலே தனி அமைச்சரைப் போட்டு, 1984-85 ஆம் ஆண்டுக்கு 10 கோடியே 98 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் இந்த இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டை விட ஏறத்தாழ 1 கோடியே 30 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் அதிகம் என்றாலும் சென்ற ஆண்டிலுள்ள விலைவாசிக் கும், ஏனையவைகளுக்கும் இந்த ஆண்டு வித்தியாசம் இருக்கி றது.

கல்வியைப் பொறுத்தவரையில் குற்ற மரபினர் பட்டியலிலி ருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த அந்தக் குழந்தைகளுக்குச் சலுகை என்ற முறையிலே இந்த அறிக்கையிலே கூறப்பட்டி ருப்பது, எட்டாம் வகுப்பில் மாவட்டம் முழுவதும் முதல் மாண வன் அல்லது மாணவியாக தேர்வு பெற்று வந்தால் சலுகை ரூபாய் 50; அதே சமயத்தில், இரண்டாவது பரிசைப் பெறும் அந்தக் குழந்தைக்கு 10 ரூபாய். எஸ். எஸ். எல். சி.-யைப் பொறுத்தவரையிலும் முதல் தகுதி பெறுபவர்களுக்கு 100 ரூபாய்; இரண்டாவது தகுதி பெறும் அந்தக் குழந்தைகளுக்கு மாவட்டம் முழுவதும் சேர்ந்து 50 ரூபாய் என்று இருப்பது, விவரத்திற்காக மட்டும் இதில் கொடுக்கப்பட்டிருந்தாலும், இது போதுமான தொகை என்று சொல்ல முடியாது. இது எண்ணிக்கைக்காகக் கொடுக்கப்பட்ட தொகை என்றுதான் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

1984 மார்ச் 28] [திரு. தி. கா. நல்லப்பன்]

அடுத்ததாக இந்தக் குழந்தைகளுக்கு வருடம் ஒன்றுக்கு இரண்டு செட் துணி கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த இரண்டு செட் துணி என்பது போதுமானதாக இல்லை. அரசு அதனை அதிகப்படுத்த வேண்டும். மேலும் 5 வயது குழந்தைக்குக் கொடுக்கப்படக்கூடிய துணி 10 வயது குழந்தைக்குப் போடக்கூடியதாகவும், 10 வயது குழந்தைக்குக் கொடுக்கப்படக்கூடிய துணி 5 வயது குழந்தைக்குப் போடக்கூடியதாகவும் இருக்கின்றது. அதாவது அந்த துணிகளைத் தைத்துக் கொடுக்கின்ற அளவு அந்தமாதிரியான நிலைமையில் இருக்கின்றது. ஆகவே முறையாக அந்தக் குழந்தைகள் போடக் கூடிய முறையிலே தைத்துக் கொடுப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். ஒரு இனத்தைச் சேர்ந்தவரை அல்லது ஒரு ஜாதியைச் சேர்ந்தவரை எம். எல். ஏ. ஆக அல்லது எம். பி. யாக ஆக்கிவிட்டாலே அந்த இனம் முன்னேறிவிடும் என்று சொன்னால் அது நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் கூட அந்தந்த ஜாதி மக்கள் முன்னேறாததற்குக் காரணம் அந்த சொத்துடைமை அமைப்புதான் என்பதை நான் இங்கே சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தினைப் பொறுத்தவரையில் எல்லாத் துறைகளிலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதுபோல் இந்த துறையிலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் இந்தத் துறையிலே இருந்து 23 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. புத்தகம் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையிலே 1-வது வகுப்பிலே இருந்து மூன்றாம் வகுப்பு வரை இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு நல்ல நோக்கத்தோடு இலவசமாக சிலேட்டு, புத்தகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அதாவது பள்ளி திறந்தவுடனே அந்தக் குழந்தைகளுக்கு முறையாக சிலேட்டு, புத்தகங்கள் வழங்கப்படாமல் கால தாமதம் ஏற்படுகின்றது. அப்படி காலதாமதம் ஏற்படாமல் குறிப்பிட்ட காலத்திலே கொடுப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து மாணவர் இல்லங்களில் சேரக்கூடிய குழந்தைகளைற பொறுத்தவரையில் 5,000 ரூபாய் ஆண்டு வருமானம் என்ப் வகையிலே ஒரு இலக்கினை நிர்ணயித்திருக்கிறோம். ஆனால் விவசாயத் தொழிலாளர்களாக இருந்தால்கூட ஆணுக்கு

10 ரூபாய், பெண்ணுக்கு 5 ரூபாய் என்று கணக்கிட்டால் 5 ஆயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கைதான் ரூபாய் வரும். ஆகவே அந்த விவசாய தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்கூட நிச்சயமாக விடுதிகளிலே சேர்ந்து படிக்கக் கூடிய வகையிலே நிலைமை ஏற்படாது. அவர்களுக்கு இடம் கிடைக்காது. ஆகவே இந்த வருமான இலக்கினை அதிகப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருமான சான்றிதழ் பெறவேண்டும் என்றால் கிராமத்திலே இருக்கக்கூடிய ஒருவர் கிராம அதிகாரியைப் பார்த்து, அதற் கடுத்து ரெவின்யூ அதிகாரியைப் பார்த்து, தாசில்தாரைப் பார்த்து ஏறக்குறைய ஒரு வார காலத்திற்கும் மேலாக அங்குமிங்கும் அலைந்துதான் இந்தச் சான்றிதழைப் பெற முடிகின்றது. ஆகவே, பள்ளி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அதாவது ஒரு மாதமோ அல்லது ஒன்றரை மாதமோ சம்பந்தப்பட்ட வருவாய்த் துறையிலே சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து அதன்மூலம் அந்த மாணவர்களுக்கும், மாணவிகளுக் கும் வருமான சான்றிதழ்களை உடனடியாகக் கொடுக்கக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவ, மாணவியருக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. அதாவது கல்லூரி யிலே படிக்கக் கூடிய மாணவர்களைப் பொறுத்தவரையில் மாநகரத் திலே இருப்பவர்களுக்கு 95 ரூபாய் என்றும் மற்ற வெளியூர் களிலே இருப்பவர்களுக்கு 80 ரூபாய் என்றும் தொழிற்கல்வியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மாணவர்களைப் பொறுத்தவரையிலே மாநகரிலே இருப்பவர்களுக்கு 95 ரூபாய் என்றும், மற்ற வெளியூர்களிலே இருப்பவர்களைப் பொறுத்தவரையில் 80 ரூபாய் என்றும், பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரையில் நகரத் திலும் சரி, கிராமங்களிலும் சரி 60 ரூபாய் என்றும் இந்த மானியக் கோரிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இன்றைய தினம் உள்ள விலைவாசியைக் கணக்கிட்டால் இந்த நிதியைக் கொண்டு அந்த பிற்பட்ட மாணவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பது நிச்சயமாக முடியாது. ஆகவே இந்தத் தொகையைக் கண்டிப்பாக அதிகப்படுத்த வேண்டும்.

அடுத்து அந்த மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய ஹாஸ்டல் களைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் தனியாரி டத்திலே இருந்து இடத்தை வாடகைக்கு வாங்கி நடத்துகின்ற நிலைமையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சம்பந்தப்பட்ட அந்தத் தனியார்களுக்கு வாடகையைச் செலுத்துவதற்குக் கூட காலதாமதம் வருடக்கணக்காக ஏற்படுகின்ற சூழ்நிலை இருக் கின்றது. அப்படி இருப்பதன் காரணத்தால் தனிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட ஹாஸ்டல்களுக்காக இடம் கொடுப்பதற்குப் பயப் படுவார்கள் அல்லது நான் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விடுவார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

1984 மார்ச் 28] [திரு. தி. கா. நல்லப்பன்]

மேசை நாற்காலிகளைப் பொறுத்தவரையில், பிற்பட்டோர் நலத் துறை ஹாஸ்டல்களில் இப்பொழுது அதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை போதாது. என்னுடைய தொகுதியான பெருந்துறையில் கூட மாணவர், மாணவியர், இல்லங்கள் 3 இருக்கின்றன. அங்கே சென்று பார்க்கும் போது, அந்தக் குழந்தைகளுக்கு மேசை, நாற்காலி போன்ற வசதிகள் இல்லை. ஆகவே, அந்த ஹாஸ்டல்களுக்கு மேசை, நாற்காலி போன்ற வசதிகளை செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

தனியார் நடத்துகின்ற மாணவர் இல்லங்களை பொறுத்த வரையில், உணவு மிகவும் மோசமாக இருக்கிறது. தனியார் ஹாஸ்டல்களிலே அந்த மாணவர்களுக்கு ரூ. 40 ஒதுக்கப்படு கிறது. நமது துறை மூலம் நடத்துகிற ஹாஸ்டல்களில், நகரத் தில் அந்த மாணவர்களுக்கு ரூ.95-ம், கிராமத்திலே ரூ. 85-ம் ஆக இருக்கிறது. ஆனால் தனியார் இல்லங்களிலே தங்குகின்ற மாணவர்களுக்கு ரூ. 40 என்பது நிச்சயமாகப் போதுமான தொகையாக இல்லை. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நரிக்குறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுவதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நறிக்குறவர்களைப் பொறுத்த வரையிலும், தமிழகத்திலே இருக்கக் கூடிய அனைத்து ஜாதிகளிலும் மிகவும் கீழ் தங்கிய நிலையில் இருக்கக்கூடிய இனம் அந்த இனம். அந்த இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்திருக்கிறீர்கள். நிச்சயமாக அந்த இனம், எஸ். சி. அல்லது எஸ்.டி. யிலே சேர்க்கப்பட வேண்டிய இனம் என்று சுட்டிக் காட்டுவதோடு, உடனடியாக அப்பட்டியலில் சேர்க்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 1980-81 ஆம் ஆண்டு, வட ஆற்காடு மாவட்டம் அரும்பகுதி கிராமத்தில் அவர்களுக்கு 76 வீடுகள் மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1981-க்குப் பின் இந்த 4 ஆண்டு களாக அவர்களுக்கு எந்தவிதமான வீடும் கட்டிக் கொடுக்கப்பட வில்லை. அப்படிக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்குமானால், இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருப்பார்கள். 1981-க்கு பின் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்காதது ஏன் என்பதை அமைச் சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் அவர்களுக்கு வீடு மட்டும் கட்டிக் கொடுத்தால் எந்தவித உபயோகமும் இல்லை. தொழில் தெரிந்த மாணவர் களுக்கு அந்த இடத்திலேயே தொழில் அமைக்க உதவி செய்யப் படுகிறது. ஆகவே, குறிப்பாக அந்தப் பகுதியிலே இருக்கிற நரிக்குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்திருப்பதற்கு அருகிலேயே அவர்கள் தொழில் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சென்னைக்கு சமீபத்திலே இருக்கக்கூடிய சைதாப் பேட்டையில் கடந்த 12, 13 ஆண்டுகளாக நரிக்குறவர் பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அரசுத் தரப்பிலே இருந்து அன்றைய அரசும் சரி, இன்றைய அரசும் சரி, 34 கிரவுண்ட் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கும் குழந்தைகளுக்குப்போதுமான வகுப்பு வசதியில்லையென்று அவர்களுக்கு ஓலைகொட்டகை வேய்ந்து வசதிசெய்து கொடுக்கப்பட்டது. கடந்த 2-3-1983 அன்று எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் பிரிக்கப்பட்டுள்ளது. பி.டபிள்யூ.டி.-க்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அரசுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூட நலன் கருதி போடப் பட்ட அந்த ஓலைக்கொட்டகைக் கூறையை பிரித்து விட்டு, அங்கேயிருக்கிற ஆசிரியர்கள், மற்ற சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10.)

தயவு செய்து அதை பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழக்கை வாபஸ் பெறுவதோடு, கொட்டகை போடுவதற்கு ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முடிதிருத்துவோர், சலவைத்தொழிலாளர் மற்றும் போயர்கள் கடந்த 1981-82, 1982-83, 1983-84 ஆகிய ஆண்டுகளில் பெற்றிருக்கின்ற சலுகைகள் குறித்து இந்த அறிக்கையில் கொடுத் திருப்பதை நாம் பார்த்தால், 1982-ஆம் ஆண்டு, 8,000 பேர் களும், 1983-ம் ஆண்டு 7,445 பேர்களும், 1983-84-ல் 6,250 பேர்களும் என்ற முறையில் படிப்படியாக பயனடைந்தவர்கள் குறைந்து வந்திருக்கிறார்கள். இந்தக் குறைவு வந்ததற்கு காரணம் என்ன? அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு சலுகைகள் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய தேவை அடிப் படையில் நிதி ஒதுக்காததுதான் இந்தக் குறைவிற்குக் காரணம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் டோபி கானா கட்ட அவர்களுக்கு அரசு உதவித் தொகை 75 சதவீதம் ; பேரூராட்சியோ அல்லது நகராட்சியோ, ஊராட்சியோ உதவி 20 சதவீதம், உபயோகிப்போர்கள் 5 சதவீதம் என்று ஒதுக்கப் பட்டிருந்தாலும் பெரும்பாலான பேரூராட்சி, ஊராட்சிகளில் பணம் இல்லாத காரணத்தால் சலவைத் துறை கட்டிக் கொடுக்கப் படாத நிலை இருக்கிறது. ஆகவே ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் அங்கே இருக்கிற சலவைத் தொழி லாளர்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சிகளில் பணம் இல்லையென்றால் அந்த 20 சதவீதம் உதவியை அரசே ஈடு செய்து சலவைத் துறையை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றைக் கூறி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதி யான குன்னத்தூரில் பிற்பட்ட நலத்துறையின் விடுதி ஒன்று கட்டுவதற்கு அல்லது ஆரம்பிப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெருந்துரையில ஏற் கெனவே அந்த பிற்பட்ட பெண்கள் விடுதி தனியாரிடத்தில் இருக் கிறது. அதைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக் கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்பு கிறேன்.

என்னுடைய தொகுதியில் சின்னத்தடாகம் பிற்பட்ட மாணவி யர் விடுதி சென்ற ஆண்டு துவக்கப்பட்டது. அதைத் துவக்குவதற் கான ஆணை பிறப்பித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாணவியர் விடுதிக்கான கட்டிடம் அந்தக் கிராமத்தில் கிடைக்காததால் வசதி குறைவான இடத்தில் அது நடந்து வரு கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கேள்வி யின் மூலமாக நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டி இருக்கிறேன். அவரும் பரிசீலிப்பதாகச் சொல்லி இருக்கிறார். அதை அவசிய மாகக் கருதி இந்த ஆண்டு சின்னத்தடாகம் மாணவியர் விடு திக்கு கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்க வேண்டு மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல தொண்டாமுத்தூரில் கடந்த 12 ஆண்டுகளாக பிற்பட்டோர் நலத்துறையின் மாணவர்கள் விடுதி நடந்து வரு கிறது. அதற்கான வாடகை கட்டிடம் அதனுடைய உரிமை யாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் காலி செய்யப்பட்டு விட்டது. இப்போது அது வசதி குறைந்த ஒரு கொட்டகையில் நடந்து வருகிறது. எந்த நோக்கத்திற்காக மாணவர்கள் விடுதியை துவக்கி நடத்தி வருகிறோமோ அது நிறைவேறாமல் இப்படி வசதி இல்லாத காரணத்தால் அவர்களுடைய படிப்பு பாதிக்கப் படுகிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே ஒரு மாணவர் விடுதிக்கான கட்டி டம் சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அது முடிவிற்கு கொண்டு வரப் பட்டு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக சமுதாய மாற்றத்திற்கு வழி வகுத்திருக்கிற நம்முடைய அரசின் பல்வேறு திட்டங்களை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நல மேம்பாட்டு வாரியம் இன்றைக்கு நல்ல பல பணிகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த வாரியத்தின் மூலம் பிற்பட்ட மக்கள் பொருளாதார மேம்பாட்டிற்கான பல வசதிகளை பெறுகிற முறையில் நல்ல திட்டங்களை வகுத்திருக்கிறது. அந்த வாரியத்தின் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நல்ல பணிகளை ஈடேற்றி இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அது மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கருதி, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அதற்காக அறிக்கையினை அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதற்காக இன்று இரண்டாவது பிற்பட்டோர் நல ஆணைக் குழு புரட்சித் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பிற்பட்டோருக்கு தாங்கள் தான் வாரிசு என்று சொல்லிக் கொள்கிற சில மாற்றுக் கட்சி நண்பர்களைக் கேட்கிறேன். மண்டல் கமிஷன் அறிக்கையை இங்கே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்பவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், மண்டல் கமிஷன் பரிந்துரைகள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே நிறைவேற்றியாகி விட்டது. வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் அவர்களே ஒரு கமிஷனாக இருந்து பணியாற்றியதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய பிரச்சாரத்தின் பயனாக நாட்டில் ஏற்பட்ட மாறுதலையும், அவர் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் செய்யப்பட்ட சிறப்பான காரியங்களும், அவரைத் தொடர்ந்து இங்கே அண்ணா ஆட்சி அமைத்த புரட்சித் தலைவர் அரசும் மண்டல் கமிஷனில் என்னென்ன சொல்லப்பட்டு இருக்கிறதோ அதைவிடச் சிறப்பான பணிகளை இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 51 சதவீத இட ஒதுக்கீடு இந்த அரசு செய்து இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய நிலைமைகள் கொண்டு வரப்படவில்லை என்பதைத் தெரிவித்து, இங்கே கூறுகின்ற நண்பர்கள் குஜராத், பீகார் போன்ற மாநிலங்களில் அதை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை சொல்ல வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களின் கொள்கையைப் பின்பற்றி இங்கே பிற்பட்ட மக்களுக்கு எவ்வளவோ பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மற்ற மாநிலத்தில் உள்ளவர்கள் இதை உணருகிற வகையில் காங்கிரஸ் நண்பர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இன்றைக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகள் எழுதுவதற்காக நாம் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு எல்லாம் பயிற்சி அளிக்கிறோம். ஆனால் தமிழகத்தில் உள்ள மாணவர்கள் அதிலே அதிகம் வெற்றி பெறமுடியவில்லை. அதற்குக் காரணம், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரிட்சைகளை இந்தியில் எழுதலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இந்தி பேசும் மாநிலங்களில் உள்ளவர்கள் இதன் காரணமாக தங்களுடைய தாய் மொழியில் அந்தத் தேர்வை எழுதுகின்ற காரணத்தால், அவர்களால் நல்ல முறையில் சிறப்பான முறையில் எழுத முடிகிறது. அதனால் நல்ல முறையில் அதிலே தேர்ச்சி பெற முடிகிறது. அதே அடிப்படையில் இங்கே தமிழகத்தில் இருந்து செல்கிற மாணவர்களும் தமிழில் அந்தத் தேர்வை எழுத அனுமதிக்க வேண்டும். இந்தக் குறைபாட்டை போக்குகிற அளவில் மத்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தி மொழியில் அந்தத் தேர்வுகளால் நமக்கு ஏற்படும் இந்த இடர்பாடுகளையும் நான் இங்கே சுட்டிக் காட்டுவது என் கடமை என்று கருதுகிறேன். தமிழில் எழுத முடியாது, தமிழகத்து மக்கள். ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும். ஆனால், வட மாநிலங்களில் உள்ளவர்கள் இந்தியில் எழுதலாம் என்பதால், அந்தத் தேர்வுத்தாளை திருத்துபவர்கள் இந்தி மொழி பேசும் மாநிலங்களிலே இருந்து வருவதால் அந்த மொழிப் பற்றின் காரணமாக அதற்கு அதிக மார்க்குகளைப் போடுகிறார்கள். ஆகவே, இயற்கையாகவே அவர்கள் அதிக அளவில் தேறும் வாய்ப்பு இருக்கிறது. இந்தக் குறைபாட்டை போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொழியாலும், இனத்தாலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக இயங்கி வரும் ஒரே இயக்கம்தான் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் தெரிவித்து, இங்கே 10 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருப்பதால், அவர்கள் அனைவரும் முன்னேறிவிட்டார்கள் என்ற அடிப்படையில் இந்த மானியக் கோரிக்கை கொண்டு வரப்படவில்லை. பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு நல்வாழ்வாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில்தான் கொள்கை ரீதியான முடிவுகள் இங்கே எடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் தான் இந்த மானியக் கோரிக்கை இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பட்டயக்காரருக்கும், பண்ணையாளுக்கும் ஒரே சட்டம் என்றால், அவர்கள் இருவரும் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டனர் என்று சொன்னால் அதனாலே யாருக்கு அந்தச் சலுகைகள் அதிகம் போய்ச் சேரும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பட்டயக்காரர் தோட்டத்திலே வேலை செய்யும் பண்ணையாளும் கவுண்டர்தான் என்று சொன்னால்,

அவரும் பிற்படுத்தப்பட்டவர்தான் என்று சொன்னால், அந்தப் பட்டயக்காரர் பையன் படிக்கும் பள்ளி, கல்லூரி வசதிகள் அந்தப் பண்ணையாளுக்கும் இருக்க முடியுமா என்றால் முடியாது. ஆகவேதான் அனைவருக்கும் ஒரே சட்டம், ஒரே கல்விச் சலுகை என்று தருகிறபோது நம்மால் கொடுக்கப்பட்டு வரும் சலுகைகள் எல்லாம் மேட்டுக் குடிக்குப் போய்ச் சேருகிறது என்ற வகையில் தான் பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் நன்மை பெற வேண்டும் என்ற வகையில், நாம் அளிக்கும் சலுகைகள் யாருக்குச் சேர வேண்டும் என்றால், பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்ட குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குப் போய் சேரவேண்டும் என்ற முறையில் தான் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

(பிற்பகல் 12-20)

ஆனால் எதையும், அரசியல் ஆக்கி பேசுகின்றவர்கள், அரசியலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறவர்கள், இதையும் அரசியலாக்கி, இந்தக் கொள்கையில் ஒரு மாறுபாடு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தார்கள். இது எந்தவகையிலும் பாதிப்பாக அமையாது. பொருளாதாரத்தில் சலுகை, கல்வியில் சலுகை என்று பல்வேறு சலுகைகளை அளித்து வந்ததால் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டுமே முன்னேறி வருவதாகப் பலர் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதனால் உண்மையில் பின்தங்கிய பலர் முன்னேற வாய்ப்பு இல்லை என்றும் கூறினார்கள்.

சாதாரணமாக இருக்கிற சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர், குரும்பர், குறவர் இவர்களைப் போன்றவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையிலேதான் இன்னும் இருக்கிறார்கள். அதனால் இதிலே ஒரு மறு ஆய்வு செய்ய வேண்டிய காலம் இப்போது வந்திருக்கிறது. காலத்திற்கு ஏற்ற மாறுதல் செய்கிறபோது பொருளாதாரத்தில் பின்தங்கிய அத்தனை பேர்களுக்கும் சலுகை என்பது நிச்சயம் ஏற்றுக் கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பட்ட நலத் தொழிற் பயிற்சி பள்ளிகள் மூன்றை ஐ.டி.ஐ., சர்டிபிகேட் கொடுக்கும் அளவுக்கு தரம் உயர்த்தியிருப்பதாக இந்த மானியக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற பிற்பட்ட மாணவர்களுக்கு ஐ.டி.ஐ., சர்டிபிகேட் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதைப் போன்று, எல்லாத் தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் கொடுக்க ஏற்பாடுசெய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. இரண்டாண்டுகள் படிக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழில் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ஐ.டி.ஐ. சர்டிபிகேட் வழங்க அல்லது அதற்கு நிகரான சர்டிபிகேட் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் பிற்பட்ட மக்களிடையே இருக்கிற வேலை வாய்ப்பின்மை பிரச்சினை குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த பிற்பட்ட நலத்துறையின் மூலம் சலவைத் தொழிலாளர்களுக்கும் சவரத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைக்காக நிலம் எடுத்துக் கொடுக்கும் முறை இருக்கிறது. ஆனால் அந்தப் பணி சரியாக நடக்கவில்லை ; மாவட்டத்திற்கு 2 அல்லது 3 இடங்களில் தான் கொடுக்கின்ற நிலைமை தற்போது இருக்கிறது. காரணம் இந்தத் துறைக்கு என்று தனியாக தாசில் தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சர்வேயர்கள் இல்லை. மற்றத் துறையில் இருக்கிற அலுவலர்களைத்தான் இந்தப் பணிக்காக நாடவேண்டியிருக்கிறது. அதனால் ஒதுக்கீடு செய்கின்ற பணத் தைக்கூட சரியாக செலவிட முடியவில்லை. இந்தப் பிரச்சினை தீர வேண்டுமென்றால் இந்தத் துறைக்கு என்று தனியாக தாசில் தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சர்வேயர்களை நியமித்து, நில ஆர்ஜிதம் செய்கின்ற பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு மக்களுக்கு இன்றைக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பது இந்த வீடற்ற பிரச்சினைதான். இந்தக் குறை நீக்கப்பட வேண்டுமென்றால், அவர்கள் வாழ்க்கை யில் முன்னேற்றம் காண வேண்டுமென்றால் இந்தத் துறைக்கு தனியாக நில ஆர்ஜித அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நல மேம்பாட்டு வாரியத்திற்கு இன்னும் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக் களை ஏற்படுத்தி, அதன் மூலம் சிறு நில விவசாயிகளுக்கு, அதா வது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சிறு நில விவசாயிகளுக்கு தமிழக அரசு நிறுவியுள்ள குழாய்க் கிணற்றுக் கழகத்தின் மூலம் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சாதாரண மக்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் பொரு ளாதார மேம்பாடு ஏற்பட வேண்டுமென்றால் இந்தக் குழாய்க் கிணறுகள் கழகத்தின் மூலம் நிதி ஒதுக்கித் தந்து பிற்பட்ட ஏழை மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவ வேண்டுமாய்க் கேட்டு, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ஆண்டி.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அப்படிக் குறிப்பிடுவது சரியாகத் தெரியவில்லை. இந்த இடத்தில் முழுப் பெயரையும் நீங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளியே ஜாதியை ஒழிக்க முடியாவிட்டாலும் இந்த அவையிலாவது ஜாதியை ஒழித்துவிடலாம் என்று பார்த்தேன்.

திரு எஸ். ஆண்டித்தேவர் : ஜாதியை இங்கேயும் ஒழிக்க முடியாது, வெளியிலேயும் ஒழிக்க முடியாது. இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருப்பதே ஜாதி வளர்ப்பு மானியம்தான். என்றைக்கு நீங்கள் பள்ளிகளிலும் மற்ற இடங்களிலும் ஜாதிப் பெயரைக் கேட்கக் கூடாது அல்லது ஜாதிப் பெயரைக் குறிக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்குகிறீர்களோ அன்றைக்குத் தான் ஜாதி ஒழியும் ; அதுவரையில் ஜாதி இருக்கத்தான் செய்யும். எந்த எந்த ஜாதி, எந்த எந்த பகுதியில் இருக்கிறது, எந்த எந்த ஜாதியினருக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி இப்போது நாம் ஜாதியை வளர்க்கின்ற மானியமாகத்தான் கருதி, இந்த மானியக் கோரிக்கையில் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஜாதிப் பெயரே இல்லாமல், ஒரு சோஷலிச முறை ஏற்பட்டு விட்டால் அன்றைக்கு நான் 'ஆண்டி' என்று எழுதிக் கொள் கிறேன். அதுவரையில் ஆண்டித் தேவர் என்றுதான் இருக்கும். இப்போது நீங்கள் தேவரை எடுக்க முடியாது.

துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கை எண் 32 இன் மீது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பிற்பட்டோர் நலத்துறை இந்த ஆண்டு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நான் பேசும்போது அவை முன்னவர் அவர்களைப் பார்த்து, அவர்களோடு தனியாகப் பேசும்போது கேட்டேன். பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை முற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவரிடம் இருக்கிறதே என்று கேட்டபோது, அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள், உங்களை எல்லாம் எங்களைப் போன்று முன்னேறியவர்களாக்கத்தான் என்று சொன்னார்கள்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கும்போது அட்டையிலே பிற்பட்டவர்கள் என்று இருந்தாலும் உள்ளே மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அதாவது மிகப் பிற்பட்டோர், குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர், பிற்பட்டோர் என்று வகைப்படுத்தி மூன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பட்டோருக்கு மட்டும் இந்தப் படிப்புச் சலுகை, கட்டணத் தொகை என்பது 92 எம்.இ.ஆர்.-படி அது பாதி இல்லை என்று சொல்கிறார்கள். ஏன் இந்த வித்தியாசம் என்று புரியவில்லை. மிகப் பிற்பட்டோருக்கும் இந்தப் படிப்புச் சலுகை இருக்கும்போது, இந்த குற்ற மரபினர் பரம்பரையிலிருந்து வந்தவர்களுக்கு பாதியாகத்தான் இருக்கிறது. இவர்களுக்கு இந்தச் சலுகையை அளிக்க வேண்டும்.

அதேபோல, இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லும்போது, குற்றப் பரம்பரை மரபிலிருந்து நீக்கப்பட்டோர் என்ற பகுதியிலிருந்து தான் வருகிறது. ஆனால் அவர்களுக்கு குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் என்கிறவர்களுக்கு வேறு வித்தியாசமான சலுகை இருக்கிறதா என்றால் இல்லை. பள்ளிகள், விடுதிகள், தனியாகக் கட்டப்பட்டுள்ளன என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி அதிலே பெரிய வித்தியாசத்தைப் பார்த்தால், பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட விடுதிகள் 415 என்று தெரிகிறது. குற்றப் பரம்பரை மரபிலிருந்து நீக்கப்பட்டோர் விடுதிகள் 68 தான். ஆனால் 1965-லிருந்து எடுத்துப் பார்த்தால், அப்போது 30 ஹாஸ்டல்கள் குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டதாக இருந்தது. ஆனால் இப்போது 68 ஆக வளர்ச்சி அடைந்திருக்கிறது. 11 விடுதிகளாக இருந்தது, இன்றைக்கு 415 ஆக கூடியிருக்கிறது. பிற்பட்டோருக்குச் செய்வதைப் பற்றி நான் பாராட்டுகிறேன். அதுபோல், அந்த ஜனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். 1969-70 இல் 37 குற்றப் பரம்பரை விடுதிகளாக இருந்தது, இரண்டு பங்காகக் கூடியிருக்கிறது.

ஆனால் பிற்பட்டோர் விடுதிகளைப் பொறுத்த வரையில் 11 ஆக இருந்தது, 415 ஆக இந்த ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூடியிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில், தேவையான மாணவர்கள் இல்லாததினால், மூன்று குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன என்று சொல்லியிருக்கின்றீர்கள். இது வேதனையாக இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம் தேவையான அளவில் மாணவர்கள் இல்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் அது துவக்கப்பட வேண்டிய இடத்தில் துவக்கப்பட்டால், மாணவர்கள் இருந்திருப்பார்கள். உங்களுக்குத் தெரியும். தமிழகத்திலே குற்றப் பரம்பரை பட்டியல் விருந்து நீக்கப்பட்ட இனத்தவர்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறார்கள். மறவர்கள் சாதியைச் சேர்ந்தவர்கள் 80 சதவீதம் அங்கே இருக்கிறார்கள். அதேபோல கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள் மதுரை மாவட்டத்தில் இருக்கிறார்கள். புதுக்கோட்டையில் கந்தர்வ கள்ளர்கள் இருக்கிறார்கள். இப்படி புதுக்கோட்டை மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்

திலும் இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே நிறைய இடங்கள் இருக்கின்றன. அங்கே துவக்கியிருக்கலாம். ஒரு தவறு நடந்திருக்கிறது. குற்றப் பரம்பரை பட்டியலில் நீக்கப்பட்ட இனத்தவர்கள் சாணார்ப்பட்டி விடுதி என்று பழனிக்கு பக்கத்தில் உள்ள ஊரில் துவக்கிவிட்டார்கள். அங்கே மாணவர்கள் வரவில்லை.

விருவீட்டில் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அங்கே மாணவர்கள் விடுதி இல்லை. இன்னொன்று வேடிக்கையாக இருக்கிறது. 65-லும் 80 ஒதுக்கியிருக்கிறீர்கள். 70-லும் 80 தைத் தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். குற்றப் பரம்பரைப் பட்டியலில் நீக்கப்பட்ட ஜனத்தொகை கூடவில்லையா? அந்த மாணவர்களுக்கான தொகையை கூட்டித் தரவேண்டாமா? 1965லிருந்து இன்றுவரை அப்படியே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கள்ளர் மாணவர்கள் 1,148 பேர்கள் இருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று சாங்ஷன் ஆகியிருக்கிறது. ஆனால் கேட்டால், சோஷியல் வெல்பேர் செகரட்டரியிடம் இருக்கிறது. அங்கே இருக்கிறது, இங்கேயிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். இன்ஜினியரிடம் ரீ எஸ்டிமேட் போட வேண்டும் என்று திரும்பி விடுகிறது என்று சொல்கிறார்கள். 37 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து வலியுறுத்த விரும்புவது இந்தக் கட்டிடப் பிரிவு மட்டும், நமது அமைச்சரிடம் இல்லாமல், அது ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் பொறுப்பிலே இருக்கிறது. அதை ஏன் இந்தத் துறையில் சேர்க்கக் கூடாது. அப்படிச் சேர்த்தால் தான், பிற்பட்டோர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, கட்டிடம், கட்ட முடியும்.

அதைப்போல பிற்பட்டோர் நலத் துறையிலிருந்து இப்போது ஒதுக்கப்பட்ட மானியம் ரூ. 10 கோடி. தமிழகத்திலுள்ள பிற்பட்டோர் வகுப்பைச் பார்த்தால், அந்த பட்டியலில் 171 இனங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். ஆனால் பள்ளிகள், விடுதிகள், தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்தத் துறையின்கீழ் பிற்பட்டோர் நன்மை அடைகின்ற வகையில் ஒன்றும் இல்லை.

தொழிற்பயிற்சி பள்ளிகள், 3 மாவட்டங்களில், ஐ.டி.ஐ.யாக மாற்றியிருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. என்னுடைய தொகுதியில் இருக்கிறது, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. இதற்குமுன் பயிற்சி பெற்றவர்கள் இன்னும் சான்றிதழ் பெற முடியவில்லை. இப்போது அந்த நிலைமையை மாற்றியிருக்கிறீர்கள். அதேபோல பல தொழிற்கல்விகள் துவங்கப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட மானியத்தைப் பார்த்தால், வேடிக்கையாக இருக்கிறது.

1984 மார்ச் 28] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

வீடுகள் கட்டுவதற்காக, பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் அத்தனை வகுப்புகளைச் சார்ந்தவர்களுக்கும், நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, நிலம் பெறுவதற்காக ரூ. 15 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

15 லட்சம் தான் மனைப் பட்டா வழங்குவதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு சாத்தியம்? எந்த அளவிற்கு இந்தத் தொகையை வைத்துக் கொண்டு வீடு கட்டிக் கொடுக்க முடியும் இந்த மக்களுக்கு? அதேபோன்று கள்ளர் சீரமைப்புக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகையைப் பார்த்தால், மிகவும் குறைவு. அவர்களுக்கு நீங்கள் கடன் கொடுப்பதாக சொல்கிறீர்கள். புதுக் கிணறு வெட்டுவதற்கு 2,500 ரூபாய் இந்தப் பணத்தை வைத்து கிணறை வெட்ட முடியுமா? 50 ஆயிரம் ரூபாய் இல்லாமல் எங்கள் பகுதியிலே கிணறு வெட்ட முடியாது. இதை வைத்து கட்டிடம் கட்ட முடியுமா? பம்ப்செட் போட முடியுமா? இதைப் போய் அவர்களுக்கு ஒரு தொகை என்று கொடுத்து விட்டு, அவர்கள் அதை வைத்து ஒரு பள்ளத்தை தோண்டி விட்டு சும்மா இருக்கின்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே 2,500 ரூபாய் என்பதை அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல் வீடு கட்டுவதற்கு 2,000 ரூபாய் என்று கொடுத்து, அதை அவர்கள் 2 ஆண்டுகளில் பெற்று, கட்டியவுடன் காற்று அடித்தாலும், மழை பெய்தாலும், அது போய் விடுகிறது. அப்படிப்பட்ட நிலைக்குத்தான் இந்த அரசு மானியங்கள் பயன்படுகின்றன.

இதைப்போல, புத்தகங்கள், பலகைகள் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பள்ளிக் கூடங்கள் ஜூன் மாதம் தொடங்கியவுடன் இவைகளைச் கொடுப்பதில்லை. துணியும் தைத்துக் கொடுப்பதில்லை. நான் முன்பேகூட நாவலர் அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டை தைத்துக் கொடுக்கிறோம் என்று சொல்லி, அவர்கள் எனக்கும் அளவு எடுத்துத் தைத்து கொடுக்கிறார்கள் என்றால், அதை மற்றவர்கள் எப்படி போட முடியும்? அதுபோன்று வகுப்பிலே இருக்கின்ற மாணவர்களுக்கும் துணியைத் தைத்துக் கொடுக்காமல், அவர்களிடம் பணத்தைக் கொடுத்து, துணியைக் கொடுத்தால், அவர்கள் தங்களுக்கு வேண்டிய சரியான அளவிலே தைத்துக் கொள்வார்கள். அல்லது இந்த சோஷியல் ஃவெல்பேர்

டிபார்ட்மென்டிலே இருக்கிறவர்கள் தான் தைக்க வேண்டும் என்று சொன்னால், ஒவ்வொரு மாணவனுக்கும் அளவை எடுத்து வைக்கட்டும். இல்லை என்றால் நீங்கள் கொடுக்கிற இந்த இரண்டு ஜோடி சீருடைகள் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய் விடும். அதை யாருமே போட முடியாத நிலையில் இருக்கின்றது.

அடுத்து, இந்த தொழில் பயிற்சி படிப்பவர்களுக்கு 2,500 ரூபாய் உதவித்தொகை கொடுக்கிறார்கள், 5 வருஷத்திற்கு, இதை, எப்போது, யார் கொடுக்கிறார்கள்? அவர்கள் சொத்து வைத்து கேட்க வேண்டுமா? எப்படி இதை வாங்குவது? இதைப் போன்ற விளக்கங்கள் இதிலே இல்லை. இதைப் பற்றிய விளக்கள் தெரியாமல் மாணவர்கள் தவிக்கிறார்கள். எனவே இந்த 2,500 ரூபாயை திருப்பிக் கொடுப்பது யார்? அதை எப்படிக் கட்டுவது? அவன் சம்பாதித்துக் கட்டுவதா? அல்லது அவனுடைய தாய் தகப்பன் கட்டுவதா?போன்ற வரைமுறைகள் இதில் இல்லை. இதைப்பற்றி எல்லாம் மாணவர்களுக்குத் தெரியவில்லை. எனவே இதைப் பற்றி விளக்க வேண்டும்.

அடுத்து, பல்வேறு இடங்களில் மாணவர் இல்லங்கள வாடகைக் கட்டிடங்களிலேதான் இருந்து கொண்டிருக்கின்றன. வாடகைக் கட்டிடத்திலே இருக்கிறது என்று சொன்னால், அவன் பெட்டியை வைத்து விட்டு, வெளியிலே தான் இருக்க வேண்டும். படுப்பதற்கு எந்தவிதமான வசதியும் இல்லை. குளிப்பதற்கு வசதிகள் இல்லை. தனியார் கட்டிடங்களில் இப்படி இருக்கின்றது. எனவே இப்படி மாணவர்களுக்குத் தேவையான இல்லங்கள் கட்ட வேண்டும் என்று சொன்னால், இந்த 10 கோடி ரூபாய் வைத்து இந்தப் பிற்பட்ட இனத்தின் மாணவர்களை நாம் முன்னேற்றப் போகிறோம் என்று சொன்னால், வேடிக்கையாக தான் இருக்கின்றது. நம்முடைய தமிழகத்தின் பட்ஜெட் கிட்டதட்ட 2,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருக்கும் போது, இந்தத் துறைக்கு வெறும் 10 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருப்பதை வைத்து எப்படி இந்த 170 இனத்தைச் சேர்ந்தவர்களை முன்னேற்றப்போகிறோம்? இது ஒரு தலைக்கு ஒரு ரூபாய் என்று கூட வராது. எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் தொகையை உயர்த்துவதற்கு, அரசிடம் வலியுறுத்துவது மட்டுமல்லாமல், இந்த பிற்பட்ட நலத் துறைக்கு அதிகமான தொகையை ஒதுக்க வேண்டும்.

அடுத்து, 415 விடுதிகள் பிற்பட்ட மாணவர்களுக்கும், 68 விடுதிகள், குற்றப்பரம்பரையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்று கூட சொந்தக் கட்டிடத்தில் இல்லை. ஒன்றிரண்டு இந்தக் குற்றப் பரம்பரையினருக்காக, பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்டது இருக்கின்றது. 415 பிற்பட்ட மாணவர் இல்லங்களை துவக்கியிருந்தாலும், அதற்குத் தேவையான கட்டிடங்கள் இல்லை. வாடகைக் கட்டிடத்தை பிடித்து 50 பையன்களை வைத்து துவக்கியிருக்கிறார்கள்.

1984 மார்ச் 28] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவர்களுடைய படிப்பு முன்னேற வேண்டும் என்று வேதனையோடு சொன்னார்கள். இந்தக் கல்வி அனைத்தும் கல்வித்துறைக்கு கொடுத்து விடுவோம் என்று சொன்னார்கள். அப்படி என்றால், பிறகு பற்பட்ட நலத் துறைக்கு என்று ஒரு மானியம் இருக்காது. இந்த 415 விடுதிகள், அதோடு சேர்ந்த பள்ளிகளும் தான் இருக்கும். ஆகவே பிற்பட்டோர் நலன் என்று எப்படி பேசுவது? இந்தக் கல்வித் தரம் குறைவதற்குக் காரணமே அவர்களுக்கு நல்ல கல்வி கொடுப்பதற்கு, பின் தங்கிய மாணவர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை. அதோடு போதிய ஆசிரியர்களும் கிடையாது. எனக்குத் தெரியும். பிற்பட்ட மாணவர்களுக்காகவும், குற்றப் பரம்பரையினருக்காகவும், இருக்கின்ற 247 பள்ளிகளில், 200 பள்ளிகளில், 2 ஆண்டு காலமாக ஆசிரியர்கள் இல்லை. செக்கிய நல்லூரில் 2 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே 11 ஆசிரியர்கள். அதே மாதிரி நாட்டார் மங்களம், அங்கே ஒரு மேல் நிலைப் பள்ளி, அங்கேயும் 11 ஆசிரியர்கள். ஆனால் ஒன்று கூட நிரப்பப்படவில்லை. கேட்டால், ஏ.ஜி. சாங்சன் வேண்டும் அரசு சாங்சன் வேண்டும் என்று சொல்கிறார்கள். எதற்கு ? பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அதற்காக இருக்கிறார்கள். அரசும் இருக்கிறதா இல்லையா? ஆனால், அதை எழுதி பெறுவதற்கு ஓர் ஆண்டு ஆகி விட்டால், ஏ.ஜியிடம் அனுமதி பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கல்வித் தரம் உயர்வதற்கு தடையாக இருப்பவைகளில் முறையாக ஆசிரியர்கள், நியமிக்கப்பட வேண்டிய எண்ணிக்கையில் நியமிக்கப்படாமல் இருப்பதே ஒரு முக்கிய காரணம். இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் நீக்கி, இந்த பிற்பட்டோருக்கு உண்மையாகவே நலம் செய்ய வேண்டும் என்று சொன்னால், அடுத்து வரும் ஆண்டுகளிலாவது, பட்ஜெட்டைப் பார்த்தால், அவர்களுக்காக 100 கோடிக்கு ஒதுக்கீடு இருக்கிறது என்று சொன்னால்தான், தமிழகத்திலே இருக்கிற அத்தனை பிற்பட்டோர் மக்களுக்கும் சரியாக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை, தொழில் பயிற்சியை, கல்வி முன்னேற்றத்தை, பொருளாதார முன்னேற்றத்தைச் சிறப்பாக செய்ய முடியும். அந்த நல்ல எண்ணம் இருந்தால் பட்ஜெட்டிலே அதிகமாகக் கொண்டு வந்தால்தான் அதைச் செய்ய முடியும். ஆகவே வருங்காலத்திலாவது அப்படிக் கொண்டு வந்து பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

இந்தக் குறிப்பிலே ஐ.ஏ.எஸ். தேர்விற்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தேறியவர்கள் எவ்வளவு என்று பார்த்தால், நில். அதாவது ஒன்றுமே இல்லை. கல்வித் துறை மட்டும் அல்ல, நம்முடைய அரசாங்கத்திலும் சொல்லுகிறோம். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று கொண்டு வந்து விட்டோம். ஆனால் மத்திய தேர்வு ஆணைக்குழுவில்,

தமிழில் எழுதுவதற்கு நாம் அங்கீகாரம் வாங்காதது மட்டும், இங்கே அவர்கள் தமிழ்க் கல்வியில் படித்து விட்டு, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். பரீட்சை எழுதப் போனால் நில் ரிசல்ட் தான் வரும். நாம் பயிற்சி கொடுத்து தேர்வுக்கு அனுபியவர்களே 45 பேர்கள். அதில் எழுத வந்தவர்கள் 35 பேர்கள்தாம். அதிலே பைனல் இன்டர்வியூவிற்கு 2 பேர்சள் போயிருக்கிறார்கள். அவர்களும் தேறவில்லை. ஆகவே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விலே ரிசல்டே வரவில்லை. இந்த ஆண்டிலே மத்திய அரசுப் பணிக்கு அவர்களுக்கு கிடைத்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தைத் தான் நாம் இதிலே பார்க்க முடிகிறது. ஆகவே, ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்வு எழுதலாம் என்று தேர்வு ஆணைக்குழுவிலே இருப்பதைப் போல தமிழிலும் எழுத லாம் என்ற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும். அப் பொழுது தான் பிற்பட்டவர்கள் எல்லாம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளாக வரமுடியும் என்ற கருத்தினையும் கூறி, அமர் கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் சார்பிலே பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசு வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேச விழைகிறேன்.

பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரையே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறையை கவனிப்பதற்காக அமைச்சராக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதே இந்த அரசுக்கு பிற்பட்டோர் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டு பாடுபட்டு வருகிறது என்பதைக் எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இந்த துறை சிறப்பாக பணியாற்றி வருவதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரி வித்துக் கொண்டு, பிற்பட்டோர் நலத்துறை மூலமாக பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் விடுதிகளை நடத்து வதை மட்டுமே கவனித்து வந்த இந்தத் துறை இன்று பிற்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒரு தனி வாரியத்தை அமைத்து அதற்குப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரையே தலைவராகவும் நியமித்து, அதன் மூலமாக பிற்பட்ட மக்களுடைய மேம்பாட் டுக்கு உதவி அளித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1984 மார்ச் 28] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

அது மட்டும் அல்ல, இங்கே பிற்பட்டோர் நலத்துறை மூல மாக ஆண்டுக்காண்டு விடுதிகளை நடத்துவதை அதிகப்படுத்தி, அதன் மூலமாக பல மாணவர்கள் பயன்படுகிற நிலைமையையும் உருவாக்கியிருக்கிறது. அந்த வகையிலே இந்த ஆண்டு பிற்பட் டோர் நலத்துறையின் மூலமாக என்னுடைய தொகுதியில் வேதா ரணியத்திலே ஒரு மாணவியர் விடுதியும், தகட்டூர் கிராமத்திலே ஒரு பிற்பட்டோர் மாணவர்கள் விடுதியும், நடத்துவதற்கு அரசு ஆணையிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் முதலிலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாணவர்கள் விடுதிகள் இல்லாமல், வாடகைக் கட்டிடங்களிலே இருக்கக் கூடிய, கொம்பணாச்சேரி, மணல்குடி, ஆகிய இடங்களிலே அரசின் சார்பிலே விடுதிக் கட்டிடங்களைக் கட்டி, அந்த மாணவர்கள் வசதியான முறையிலே படிப்பதற்கு வழி வகைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதேபோல, மேல்நிலைப் பள்ளிகள் கிராமங்களிலே இன்று உருவாகிக் கொண்டிருக்கிற நேரத்திலே, உயர்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட வேண்டிய மாணவர்களின் எண் ணிக்கை உயர்த்தப்படாமல் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்காக, உயர்நிலைப் பள்ளிகளாக இருந்து மேல்நிலைப் பள்ளிகளாக மாறியிருக்கக்கூடிய இடங்களில், அனு மதிக்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை 25 சத வீதமாவது அதிகரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில் வேதாரணியத்திலே 50 மாணவர்கள் மட்டுமே இன்று பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் படித்து வருகிறார்கள். அந்த விடுதியினுடைய மாணவர்களின் எண்ணிக்கையை குறைந் தது 100 ஆகவாவது உயர்த்த வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, பிற்பட்டோர் நலத்துறையிலே இன்றைக்கு பேசுகிற நேரத் திலே, பிற்பட்டோர் மட்டும் அல்லாது, அதிகமாக இருக்கக்கூடிய அத்தனை வகுப்பைச் சார்ந்தவர்களும், முற்பட்ட வகுப்பிலேயும், முன்னேறியிருக்கக்கூடியவர்களும் கூட, இன்று அரசு சலுகை களைப் பெற வேண்டும் என்பதற்காக, தங்களைப் பிற்பட்டோர் வகுப்பிலே சேர்க்க வேண்டும் என்று கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிற நேரம் இது

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1984 மார்ச் 28

(பிற்பகல் 12-40)

வாக்குகளைப் பெறவேண்டுமென்ற காரணத்திற்காக முற்பட்டவர்களாக இருந்தவர்களையெல்லாம் பிற்பட்ட வகுப்பிலே சேர்க்கிற நிலை 1952-லேயே உருவாக்கப்பட்டது. இன்றைக்கு இருக்கிற நிலையில் பிராமணர்களைத் தவிர பாக்கியிருக்கிற அத்தனை பேர்களும் பிற்பட்டவர்கள் என்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம் என்று உயர்த்தியிருந்தாலும் கூட பிற்பட்ட சமுதாயத்தினருக்குப் போதுமான அளவுக்குப் பலன் கிடைக்காத நிலைதான் இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருந்ததைப் போன்று அளிக்கப்பட்டால்தான் பிற்பட்ட மக்களுக்கு பலன் போய்ச் சேரமுடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய மக்களாக இருக்கிறவர்கள் பின்தங்கிய மக்களாகக் கருதக் கூடிய நிலைமை இருக்கிறது. வட தமிழ் நாட்டிலே வாழக்கூடிய வன்னிய சமுதாய மக்கள் மிகவும் பின் தங்கிய மக்களாகக் கருதப்பட்டாலும் கூட பின்தங்கிய மக்களாகக் கருதப்பட்டு எந்த அளவுக்கு வேலை வாய்ப்பிலேயும் பொருளாதாரத்திலேயும் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். தென் தமிழ் நாட்டில் வாழக்கூடிய முக்குலத்தோர் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களை விட பின் தங்கிய நிலையிலே இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அமைச்சராக வந்து விட்டாலும் மிகவும் பின்தங்கிய மோசமான நிலையில் இருக்கக்கூடிய முத்தரையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்கள் எத்தனை பேர்களிலே இருக்கிறார்கள்? அமைச்சர் அவர்கள் ஒருவர்தான் அமைச்சராக வந்திருக்கிறார்களே தவிர மிகக் குறைந்த அளவில்தான் இருக்கிறார்கள். உயர்ந்த பதவியிலே இல்லை. கல்லூரியிலே படிக்க முடியாத நிலை இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு பின் தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வன்னியர் சமுதாயத்திற்கும், முத்தரையர் சமுதாயத்திற்கும குறிப்பிட்டு இத்தனை சதவீதம் என்று ஒதுக்கவேண்டும். அதைப் போலவே பின்தங்கியிருக்கக்கூடிய முக்குலத்தோருக்கும் குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்க வேண்டும். வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே பின் தங்கியவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி அந்த மக்கள் தொகையின் அடிப்படையில் வேண்டிய அளவுக்கு அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளித்தால் தான் அந்த மக்களுக்கு அது பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

1984 மார்ச் 28] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

உறவினர்கள் அல்லது சொந்தக்காரர்கள் பதவிகளில் வந்து விட்ட காரணத்தினால் அல்லது ஐ.ஏ.எஸ். ஆக அல்லது உயர்ந்த பதவிகளிலே வந்தவர்கள் அவர்களுடைய உறவினர் அல்லது, சொந்தக்காரர்கள் என்று ஒரு சில குறிப்பிட்டவர்கள் தான் வரக்கூடிய அல்ல்து முன்னேறக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றி அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் ஏழை எளிய வர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு இட ஒதுக்கீடு செய்தால்தான் அவர்கள் முன்னேற முடியும். கர்நாடக மாநிலத்திலே அந்த அரசாங்கம் பிற்பட்டவர்களுக்கு அவர்களை 3, 4 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் இத்தனை சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று பொருளாதாரத் திலே பின்தங்கியவர்கள் அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் 5 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு அவர்களுடைய மக்கள் தொகை அடிப்படையிலே வேலை வாய்ப்பிலும், கல்வி வாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் வாய்ப்பு அளிக்க வேண்டும். பின்தங்கி இருக்கிறவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஓரளவுக்கு இடம் ஒதுக்கி அவர்களும் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு அது உறுதுணையாக இருக்கும்.

என்னுடைய கிராமத்தை எடுத்துக் கொண்டால் நான்தான் கல்லூரிக்குச் சென்று படித்து பட்டதாரியாக வந்தவன். எனக்குப் பின்னால் எத்தனை பேர்கள் கல்லூரியில் படித்து வந்திருக்கிறார் கள் என்று பார்த்தால் ஒருவர் கூட இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கிற நிலையில் பின் தங்கிய மக்கள் உயர வேண்டுமானால் அவர்களுக்கு பொருளா தார வசதி இல்லை, அவர்கள் கிராமப் புறங்களிலே படித்து இருக்கக்கூடிய நிலைமைகளைப் பார்க்க வேண்டும். நகரங்களிலே படித்துவிட்டு—உயர்ந்த ஜாதி மக்கள் மட்டுமல்ல—பின்தங்கிய சில பகுதி மக்கள்கூட நல்ல கல்வியைக் கற்று அதன் மூலம் உயர்ந்த பதவியைப் பெற்று விடுகிறார்கள். ஆனால் கிராமப் புறங்களிலே வாழக்கூடியவர்கள் எந்த வசதியும் வளமும் இல் லாமல் பின்தங்கிய நிலையிலே இன்னும் இருந்து கொண்டிருக் கிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கு கிராமப் புறங் களிலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை தர வேண்டும். கல்வியிலே முன்னுரிமை அளிக்க வேண்டும். அதைப் போல் பின்தங்கிய மக்களிலே உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் வேலை வாய்ப்பிலே யும் கல்வியிலேயும் உதவியை அளித்தால்தான் அவர்கள் முன் னேற முடியும். அந்த நிலைமையை மாண்புமிகு புரட்சித் தலை வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக் காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[1984 மார்ச் 28

திரு. ஏ. சாகுல் ஹமீது ; மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்ட நலத்துறையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பிற்பட்டோர் நலத்துறை சார்பாக முடி திருத்தும் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனை ஒதுக்கப் பட்டு இருப்பதாக இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியான கடைய நல்லூரை பொறுத்தவரையில் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர் களுக்கும் அளிக்கப்பட்டிருந்த வீட்டு மனை அதிகாரிகளுடைய சரியான நடைமுறை இல்லாத காரணத்தால் இதுவரைக்கும் அந்த சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனை ஒப்படைக்கப்பட வில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு போயர் சமுதாயத்தில் அவர்கள் மழை யிலும் வெய்யில்லும் தங்களுடைய தொழிலை நடத்த முடி யாமல் தடை படுகின்ற காரணங்களினால் அவர்களுக்கு கல் உடைக்கும் ஏரியாவில் செல்டர் கட்டிக் கொடுத்தால் அது பய னுள்ள முறையில் மழை காலங்களிலும் வெயில் காலங்களிலும் தொழில் பாதிக்காமல் அந்த தொழில் நடைபெறுவதற்கு ஏது வாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்த வரை அங்கே சலவைத் துறை கட்டுவது இன்னும் பலயிடங்களில் கட்டப்படாமல் இருக்கின்றன. அவைகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் பிற்பட்டோர் பட்டியலில் ஏறக்குறைய இன்றைக்கு 50 சதவீதம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத் தை எடுத்துக் கொண்டால் 65 சதவீதத்திற்கு மேல் பிற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அந்த 65 சதவீதத்தில் இஸ்லாமிய சமுதாய மக்களும், கிருத்துவ சமுதாய மக்களும் ஏறக்குறைய 18-சதவீத மக்கள் இருக்கிறார்கள். இந்த 18 சதவீத மக்களுக்கு இந்த 50 விழுக்காட்டில் எவ்வளவு பேருக்கு இடங்கள் கிடைக் கிறது. என்றால் அது பூஜ்யமாகத் தான் தெரிகிறது. ஆக இன் றைக்கு 50 சதவீதம் ஒதுக்கிவிட்டோம், பிற்பட்டோர் பட்டி யலில் சேர்த்து விட்டோம் என்று சொன்னால் மட்டும் போதாது. இன்றைக்கு இந்த மைனாரிட்டி சமுதாயமாக இருக்கின்ற முஸ்லீம் சமுதாயத்திற்கும், கிருத்துவ சமுதாயத்திற்கும் அந்த 18 சத வீதம் இடம் கிடைக்க வில்லை. வலிவுள்ளவர் களும், அதிகாரத்தில் இருப்பவர்களும் தான் அந்த வாய்ப்பை பெறுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால் இந்த மைனா ரிட்டி சமுதாயமாக இருக்கின்ற இந்த முஸ்லீம் சமுதாயத்திற்கும் கிருத்துவ சமுதாயத்திற்கும் வேலை வாய்ப்புத் துறையில் அதிக

மான பாதுகாப்பு இல்லை. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். விகிதாச்சார அடிப்படையில் என்று ஒதுக்க வில்லையோ அந்த நிலை வராத வரையில் இந்த மைனாரிட்டி சமுதாய மக்கள் நிச்சயமாக வேலை வாய்ப்புத் துறையில் பயன் பெற மாட்டார்கள் இதனால் பயன் அளிக்காது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு சிறுபான்மை சமுதாயத்தினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. அப்படி மைனாரிட்டி சமுதாய மக்கள் நடத்துகின்ற கிருத்துவ பள்ளிகளிலும், முஸ்லீம் நடத்து கின்ற பள்ளிகளிலும் இன்றைக்கு தனிப்பட்ட மைனாரிட்டி பள்ளிகள் என்ற காரணத்தால் அதனால் மிகவும் பின் தங்கிய மக்கள் ஓரளவுக்கு கல்வியில் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. ஆகவே அதற்கு நல்ல சிறப்பான வழி வகைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். குறிப்பாக நடுநிலைப் பள்ளிகளில் இன்றைக்கு இடை நிலை ஆசிரியர்களுக்கு பதிலாக பட்டதாரி ஆசிரியர்களை நிய மித்தால் அந்த பிற்பட்ட மக்கள் மைனாரிட்டி மக்களுடைய கல்வியை இன்னும் மேம்பாடு அடையச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இந்த முஸ்லீம் மைனாரிட்டியில் அந்த உருது பேசுகின்ற மக்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சென்னை போன்ற இடங்களில் கூட இதுவரை அவர்களுடைய பாட நூல்கள் வழங்கப்படவில்லை என்பதை மெத்த வருத்தத் தோடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை காணாது. அதை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளி வாசல், மதராசக்கள், அனாதை நிலையங்கள், வக்ஃ போர்டு சொத்துக்கள் எல்லாம் இன்றைக்கு நிலகுத்தகை வரு வாயில் பாதிக்கப்பட்டு இருப்பதால் குத்தகை பாதுகாப்புச் திருக்கோயில்களுக்கு வழங்கும் சட்ட பாதுகாப்பு இந்த வக் போர்டு சொத்துக்களுக்கும் இஸ்லாமிய அற நிலையங்களுக்கும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தஞ்சையில் நம்முடைய சர்போஜி மன்னர்-அங்கே இப்ராகீம் சாயபு என்ற ஒரு ஒரு தர்கா இருக்கிறது. ஒரு சமு தாயத்திற்கு பாடுபட்டவரை அடக்கம் செய்வதற்காக இடம் அளித்தார்கள் அந்த சர்போஜி மன்னர் அவர்கள். அவர்கள் அளித்த இடத்தில் கூட இன்றைக்கு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இப்படி தமிழகத்தில் பரவலாக இஸ்லாமிய சமுதாய அறக் கட்டளைகள் இருக்கிற இடங்களில் எல்லாம் ஆக்கிரமிப்பு இருக்கின்றது. இன்றைக்கு வக்ஃ போர்டு என்று வக் அற்ற போர்டு ஒன்று இருக்கிறது.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 மார்ச் 28

இப்படி சமுதாயத்தினுடைய சார்பாக இருக்கின்ற இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற செய்ய திராணி அற்ற வக் அற்ற போர்டாக அது இருக்கிறது. இஸ்லாமியர் பள்ளி வாசல், நிலையங் அனாதைகள், மதராசா. இந்த மாதிரி அடைக்கல ஸ்தலங்கள் இவைகளில் எல்லாம் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அவைகளை அகற்ற வக்ப் போர்டு முறையான அளவுக்கு அதில் தீவிராக செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிற்பட்டோர் நிலையை உயர்த்துகின்ற முறை யில் மதிப்பிற்குரிய திரு. ஜே. அம்பாசங்கர் அவர்களுடைய தலைமையில் இரண்டாம் உயர்நிலை ஆணைக்குழுவின் 18 உறுப் பினர்கள் இருக்கிறார்கள். ஆனால் முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினராகிய நான் அதிலிருந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50).

மேல்சபை உறுப்பினரான, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் மகன் மியாகான் அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக் கிறார்கள். அதிலே எங்களை ஏன் எடுக்கவில்லை. அதிலே ஏன் பாரபட்சம் என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பசுவதைத் தடைச் சட்டம் பற்றிய ஒரு கமிட்டி போட்டார்கள். அதிலே எங்களுக்கு இடமில்லை என் றால் அதைப்பற்றி நாங்கள் என்ன நினைப்பது?

சட்டமன்றத்தில் எத்தனையோ, குழுக்கள் போடப்படு கின்றன. ஒரு குழுவிலேயாவது எங்களுக்கு வாய்ப்பளித்திருக் கிறீர்களா என்றால் நிச்சயமாக இல்லை. முஸ்லீம் லீக் கட்சிக் காரர்கள், கட்சிக்காரர்களாகத் தெரியவில்லையா?

சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் கிருஷ்ணாம்பேட்டையில் 400 வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டன. அப்படித் தீப்பிடித்த இடங்களுக்கு இதுவரைக்கும் எந்த உதவியும் கொடுக்கப்பட வில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாகுல் ஹமீது அவர் கள் பேசும் பொழுது வக்ப் போர்க்கு இவரைப் போன்றவர் களை போடவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே இஸ்லாமியக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற இஸ்லாமியத்தைச் சேர்ந்தவர்களைத்தான் அந்த வக்ப் போர்டில் போடுகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வருத்தப்படத் தேவை யில்லை.

1984 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்னைகளையெல்லாம் திடீர் திடீரென்று பேசக் கூடாது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிப்பட்ட விவகாரங்களை அவர்கள் பேசுவது பண்புக்கு அழகு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருவொற்றியூர் தாங்கல் என்ற பகுதியிலே இன்றைக்கு மீனவர் சமுதாயம், அரிசன சமுதாயம், இஸ்லாமிய சமுதாயம் ஆகிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கிறார்கள். அங்கே அளிக்கப்படுகின்ற உதவித் தொகையைப் பொறுத்த வரையில் இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலர்களில் அமர்ந்ததும் தேனீக்கள் பாடுவதை நிறுத்திவிடுகின்றன ; அதைப் போன்று ஆட்சிப் பொறுப்பிலே அமர்கின்றவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதிப் பாட்டை நிறுத்தி விட்டு ஊமைகளாகிவிடுகிறார்கள் என்பதைத்தான் கடந்த கால வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் பார்த்தால் உத்தியோக உயர்வு இல்லை ; வேலைவாய்ப்பு இல்லை. கல்வித் துறையிலேயும் கூட நாங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம் நாங்கள் சலுகையைக் கேட்கவில்லை ; எங்களுடைய உரிமைகளைத்தான் நாங்கள் கேட்கிறோம். இந்த நாட்டிலுள்ள ஜனப் பிரஜைகளிலே நாங்கள் மைனாரிட்டி சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எங்களுக்கு உரிய உரிமைகளை அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்றுதான் உரிமைக் குரல் எழுப்புகிறோமே தவிர, எங்களுக்குச் சலுகைகள் தேவையில்லை. ஆகவே, அந்த உரிமைகளைப் பெறுவதற்காக இந்த சமுதாயம் போராட வேண்டுமென்றால் போராடும். உயிரைத் தர வேண்டுமென்றால் தரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமன்றி, இன்றைக்கு மைனாரிட்டி சமுதாயம் என்று எடுத்துக்கொண்டால் கிறித்துவ சமுதாயத்தையும், இஸ்லாமிய சமுதாயத்தையும் சேர்ந்த எங்களுடைய உயிருக்கும் மேலாக நாங்கள் போற்றுகின்ற நபிகள் நாயகத்தைப் பற்றியும், கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்த ஏசுநாதரைப் பற்றியும் எல்லாம் எவ்வளவு தரக் குறைவாக, கீழ்த்தரமாகப் பேசுகிறார்கள் ; சுவர்களிலேயெல்லாம் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற விடுதிக்கு வருகின்ற வழிகளிலேயெல்லாம் கூட, அப்படித் தூஷணமான வார்த்தைகளை எங்களுடைய உயிருக்கும் மேலாக நேசிக்கின்ற எங்களுடைய நபிகளையும்,

எங்களுடைய ஈசாநபி போன்ற கிறிஸ்து அவர்களையும் பற்றி எழுதி வைக்கிறார்களே, இது முறையா? அம்மாதிரி எழுதுவது, மேடையிலே பேசுவது போன்றவற்றையெல்லாம் தடைப் படுத்த வேண்டாமா? இது ஏன் அனுமதிக்கப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

விஜயபாரதம், இந்துமித்திரன், இந்துமரமட்டி, 20 பை. பாயின்டு, சிகப்புநாடா போன்ற ஏடுகளிலேயெல்லாம் இப்படிச் சமுதாயத்தை தூஷித்து எழுதுவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

பொன்னை எவ்வளவுதான் காலிலே போட்டு நசுக்கினாலும் அது துளிர்த்து நிமிர்வது போன்று எங்களை எவ்வளவுதான் நசுக்கி னாலும் அந்தக் கொடுமைகளை யெல்லாம் தாங்கிக் கொண்டு நிச்சயமாக நாங்கள் நிமிர்வோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லின் அநீதியை எதிர்த்துக் காலமெல்லாம் கண்ணாடி கதறு கிறது என்றால் அந்தக் கண்ணாடியாக நீங்கள் எங்களை நினைத்து விட்டீர்கள். நிச்சயமாக நாங்கள் கண்ணாடிகள் அல்ல, இரும்பாக மாறுவோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்று எத்தனையோ பிரச்சினைகளிலே இந்தச் சமுதாயம் புறக்கணிக்கப்படுகிறது. இன்றைக்கு ஹஜ் கமிட்டி இல்லத்தைப் பற்றி எடுத்துக் கொண்டேமேயானால் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெயலலிதா அவர்கள் (மணி அடிக்கப்பட்டது). (குறுக்கீடு).

ண்] கு பேரவைத் துணைத் தலைவர்: நல்ல பாதுகாப்பு தர வேண்டும் என்பதற்காகத்தான் தாங்கள் பேசுகின்ற நேரத் தில் மணி அடிக்கக்கூடாது என்று எண்ணி ஃப்ரீயாக விட்டிருந் தோம். மாக்சிமம் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அவ்வளவு நேரம் கொடுக்கப்பட்டு விட்டது.

திரு. ஏ. சாகுல் ஹமீது: ஒரேயொரு கருத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட ஆட்சியை நினைத்து விட்டால், இலஞ்சமோ இஞ்சிக்கு இஞ்சி வளருது ஐயா, நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட ஆட்சியை நினைத்து விட்டால் என்று கூறி என் உரையை நிறைவு செய் கிறேன்.

1984 மார்ச் 28]

திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானியத்திலே பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவிலேயே டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் இந்த பிற்பட்டோர் நலத்துறை என்பது தனியாகப் பிரிக்கப்பட்டது என்பதில் யாருக்கும் மாறுபாடான கருத்தோ மறைக்க வேண்டிய கருத்தோ இல்லை என்பதை நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன். எனவே இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்குவது சரியாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். காரணம் உங்களுடைய அறிக்கையிலேயே இந்தத் துறைக்கு என்று எவ்வளவு மானியம் 1971-லேயே ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுவிட்டு அதற்குப் பின்னாலே அதை மாற்றப் பார்ப்பது சரியானதல்ல என்ற வாதத்தை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்தத் துறை கலைஞருடைய காலத்திலேயே சிறப்பாகப் பணியாற்றியது. இப்போது இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே அது கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர இதற்கு முன்னாலேயே இது தனியாகப் பிரிக்கப்பட்டு இதற்கென்று அமைச்சர்கள் இருந்து வந்தார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரசபை சார்பிலே சலவைத்துறைகள் கட்டுகின்ற பணிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய காரைக்குடி நகரசபை பற்றி அதிலே குறிப்பிடப்படாமல் விடுபட்டிருக்கின்றது. காரைக்குடியிலே பல சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நான்கைந்து பகுதிகளிலே இருக்கிறார்கள். ஆகவே கழனிவாசல், கீழவூரணி போன்ற பகுதிகளிலே சலவைத்துறை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் கருவிகள் வாங்க நாங்கள் உதவி செய்வோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். உங்களுடைய குறிப்பின்படி பார்த்தால் 1981-82-லே 8 ஆயிரம் பேரும், 1982-83-லே 7,445 பேரும், 1983-84-லே 6,250 பேரும் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிகின்றது. ஆகவே ஆண்டுக்காண்டு அந்த எண்ணிக்கை குறைந்துகொண்டுதான் போய் இருக்கின்றதே தவிர, கூடியதாக உங்களுடைய கணக்கு கூட கூறவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் நீங்கள் தொகையைக் குறைத்திருக்கிறீர்கள். ஆகவே அந்தத் தொகையை அதிகப்படுத்தி அதிகமான சலவைத் தொழிலாளர்களும், முடிதிருத்துவோரும் பயன் பெறக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்றேன்.

[திரு. சி. த. சிதம்பரம்] [1984 மார்ச் 28

மேலும் இந்த உதவிகளைப் பெறுவதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களை நீக்கி எளிதாக அவர்கள் பெறக் கூடிய வகையிலே வழிவகையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனை ஒதுக்குகிறோம், வீட்டுவசதி செய்து கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். எங்களுடைய பகுதியிலே நிறைய முத்தரையர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்தரையர் பிரிவினைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய பகுதியிலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்தவிதமான பலனையும் அடைந்ததாகத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அந்தப் பகுதிக்கு வந்து பார்க்கலாம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வீட்டுமனை ஒதுக்கவும், அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் விடுதிகளைப் போதிய அளவிலே கட்டிக்கொடுக்க வேண்டும். பல மாணவர் விடுதிகள் வாடகைக் கட்டிடங்களிலேதான் இயங்கி வருகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கண்டரமாணிக்கம், புதுவயல் போன்ற பகுதிகளிலே உள்ள விடுதிகள் வாடகைக் கட்டிடத்திலே தான் இயங்கி வருகின்றன. அவற்றிற்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதோடு விடுதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லல் என்ற இடத்திலே முத்தரையர் பெருமக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கு உதவுகின்ற வகையிலே பிற்பட்டோர் நலத்துறையின் சார்பிலே விடுதி அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலக் கமிஷனை 30-6-84 வரை நீட்டித்து இருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படி பிற்பட்டோர் நலக் கமிஷன் அமைத்து அந்தக் கமிஷன் அளித்த பரிந்துரையின் பேரில் புதிதாக ஏதாவது சில வகுப்புகளைப் பிற்பட்டோர் நலப்பட்டியலிலே சேர்த்திருக்கிறீர்களா? அல்லது இந்தக் கமிஷன் சொல்லாமலே சில வகுப்பினரைச் சேர்த்திருக்கிறீர்களா? இரண்டு மூன்று வகுப்பினரைத்தான் சேர்த்திருப்பதாக அறிவித்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படி என்றால் இந்தக் கமிஷனை ஏன் அமைத்தீர்கள்? கமிஷன் அமைத்து விட்டு, இதையும் பால் கமிஷன் போல் ஆக்க

1984 மார்ச் 28] [திரு. சி. த. சிதம்பரம்]

வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். நாங்கள் இரண்டு, மூன்று வகுப்பினரை மட்டும் இணைத்துக்கொள்கிறோம் என்று சொல்வது கமிஷன்களை நீங்கள் மதிப்பதில்லை என்பதற்கு ஒரு ஆதாரமாக இருக்கின்றது.

மண்டல் கமிஷன் அறிக்கையை நீங்கள் செயல்படுத்தவேண்டும். வேலை வாய்ப்புக்களை அதிலே சொல்லி இருப்பது போல் அதிக அளவுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக அரசுத் துறையாக இருந்தாலும், வங்கித் துறையாக இருந்தாலும் வேலை வாய்ப்புகளை அதிகமான அளவுக்கு உருவாக்க வேண்டும்.

மத்திய அரசிலே இரண்டே இரண்டு பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். ஒன்று தாழ்த்தப்பட்டவர்கள்; மற்றொன்று மற்றவர்கள்; நமது அரசின் சார்பிலே நாம் எப்படி மூன்று பிரிவுகளை வைத்திருக்கிறோமோ அதேபோன்று அவர்களும் மூன்று பிரிவுகளை வைத்துக் கொள்கின்ற அளவுக்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

ஹையர் செகண்டரி படிப்பவர்களைப் பொறுத்தவரையில் 1,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் 1,500 ரூபாய் வருமானம் என்பது சாதாரணமாக எல்லோருக்கும் வரும். ஆகவே அந்த இலக்கினை 3,600 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி அந்த மக்கள் பயன்பெறத்தக்க அளவிலே செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00.)

அதைப் போல பிற்பட்டோர் நலத் துறையிலே டெக்ஸ்ட் புக்ஸ் கொடுக்கிறார்கள் அவற்றை ஜூன் மாதத்திற்கு முன்னால் கொடுத்தால்தான் பலன் உண்டு. ஜூன் மாதத்திற்குப் பின்னால் பள்ளிக்கூடம் திறந்து, தேர்வுகள் முடிந்தபிறகு புத்தகங்கள் கொடுப்பதால் பயன் இல்லை. ஆகவே, புத்தகங்களைத் தேவையான உரிய நேரத்தில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வயது வரம்பு 28 என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இன்னும் கொஞ்சம் கூடுதலாக ஆக்கி, பலபேர்கள் பயன் அடையும் விதத்திலே, உயர்த்தி, 35 ஆக ஆக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். அதை 35 ஆக ஆக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. த. சிதம்பரம்] [1984 மார்ச் 28

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எனக்கு முன்னால் பேசும் பொழுது, தங்களுடைய தலைவர்தான் திரு. மாசிலாமணி, திரு. அங்கமுத்து, திரு. கோலப்பா போன்றவர்களை மேலவையில் நியமித்திருக்கிறார்கள், ஆகவே, பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்குத் தங்களுடைய தலைவர் அக்கறை செலுத்துகிறார் என்று சொன்னார்கள். இவையெல்லாம் தி.மு.க. காலத்தில் செய்யப்பட்டதுதான். தி.மு.க. காலத்தில், அப்பொழுது அவர்கள் மேலவை உறுப்பினர்கள் ஆக்கப்பட்டார்கள். அப்பொழுது தி.மு.க. வில் இருந்தார்கள், இப்பொழுது, உங்களிடத்தில் இருக்கிறார்கள், நாளைக்கு எங்கே இருப்பார்களோ ? தி.மு.க. காலத்தில் அவர்களுக்கு மரியாதை செய்ததோடு உறுப்பினர்களாக ஆக்காமல் இல்லை. தி.மு.க. காலத்தில்தான் அந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட வேண்டும், அவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று ஒட்டு மொத்தமாக இருந்தது. அன்றைக்கே பிரிக்கப்பட்டது, மேலவை உறுப்பினர்கள் பதவிகள் கொடுக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, நேசமணி போக்குவரத்துக் கழகத்திலே பிற்பட்டவர்களுக்கு முறைப்படி வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. சரியான விகிதாசாரப்படி வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, முறைப்படி வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத் துறையிலே பல்வேறு வசதி வாய்ப்புகளை அவர்களுக்கு உருவாக்கித் தரத்தக்க திட்டங்கள் எதுவும் இந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை. ஏதோ பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள், கட்டிடம் கட்டுகிறோம், சாப்பிடுகிறார்கள் என்பதைவிட அவர்கள் வாழ்க்கைக்கு, அவர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பாக வருங்காலத்திலாவது திட்டங்கள் அமைத்துத் தரவேண்டுமென்று, சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 32 பிற்பட்டோர் நலத்துறை மானியத்தின் விவாதத்தில் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

இதுவரையில் நிதி அமைச்சர் அவர்களிடத்திலே கூடுதலாக இருந்த இந்தத் துறை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திடீரென்று தனியாகப் பிரிக்கப்பட்டு, அதற்காகவே தனியாக ஒரு அமைச்சரகம் உருவாக்கப்பட்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். அதைப் பாராட்டவும் கடமைப்

1984 மார்ச் 28] [டாக்டர் கே. சௌரிராஜன்]

பட்டிருக்கின்றோம். ஆனால், தனியாக ஒரு அமைச்சரகத்தை உருவாக்கி விட்டு, ஒரு இலாகாவை உருவாக்கி விட்டு, அதற்கு ஒரு அமைச்சர் அவர்களையே பொறுப்பாகவும் அமர்த்தி விட்டு மானியக் கோரிக்கை என்று வருகின்ற நேரத்தில் ரூ. 10 கோடி, ரூ.11 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கின்ற பொழுது ரூ.11 கோடி செலவு செய்வதற்கு ஒரு அமைச்சரகமே தேவையா ?

மெட்ராஸ் கார்ப்பரேஷனில் ரூ. 30 கோடி செலவு செய்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

There is no Minister. Two I.A.S. Officers are handling it one Special Officer and one Commissioner.

ரூ. 10 கோடி, ரூ.11 கோடி ஒதுக்கிவிட்டு அதற்காகப் பெரிய அமைச்சரகத்தையே உருவாக்குவதைப் பார்க்கும்போது நாங்கள் எல்லாம் வருத்தப்படுகிறோம். நாங்கள் எதிர்பார்ப்பது, கிட்டத்தட்ட குறைந்த பட்சம் ரூ.50 கோடி, ரூ. 60 கோடியாவது ஒதுக்கியிருப்பார்கள் என்று எதிர்பார்த்து கடைசியிலே பார்த்தால் ரூ.11 கோடிதான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவும் அவர்கள் சொல்கின்றபோது பிரமாதமாகச் செய்து விட்டதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள்.

The Provision of Rs. 1,61,40.000 for the Welfare of Backward Classes made in 1967-68.

1967—68-லே ரூ. 1.6 கோடிதான், இப்பொழுது, 1984—85லே 11 கோடியாகி விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். 67—68-லே அப்பொழுது பட்ஜெட்டிலே எவ்வளவு வருமானம் ? அப்பொழுது எத்தனை கம்யூனிட்டீஸ் பாக்வாட் கிளாஸ் லிஸ்டிலே இருந்தன ? இப்பொழுது, 1984—85-லே பட்ஜெட்டிலே வருமானம் எவ்வளவு ஏறிப்போய் விட்டது ? எத்தனை கம்யூனிட்டிஸை அந்த லிஸ்ட்டிலே சேர்த்து விட்டோம் கணக்கு போட்டு பார்த்தால் இருக்கிற ஸ்டேட்டஸ்கோ தெரியும். என்னிடத்தில் பெர்சென்டேஜ் தகவல் இல்லை ; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒர்க்-அவுட் செய்து பார்த்தால் தெரியும். 1967—68-ல் இருந்த வருமானம், எத்தனை கம்யூனிட்டீஸ், எவ்வளவு அலோகேஷன் என்று பார்க்க வேண்டும். இப்போது 1984—85 பட்ஜெட்டில் எவ்வளவுக்கு பட்ஜெட் போடுகிறோம் ? எத்தனை கம்யூனிட்டீஸ் சேர்த்து இருக்கிறோம் ? என்ன பெர்சென்டேஜ் ? அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பார்த்தால் பிரமாதமான இம்ப்ரூவ்மென்ட், சாதனை என்று சொல்லிக் கொள்வதற்கு நம்மால் முடியாது, அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு இன்னும் அதிகமான அளவிற்கு வலியுறுத்தி நிதி வாங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்தபடியாக பிற்பட்டோர், பின்தங்கியவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்றெல்லாம் தமிழில் போட்டிருக்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் வருகிறபோது பேக்வர்ட்-கிளாசஸ் என்று மொத்தமாக பிரித்து விட்டோம். பேக்வர்ட்-கிளாசஸ் என்பதற்கு தமிழ் ட்ரான்ஸ்லேஷன் கரெக்ட்டா என்றால் சந்தேகமாக இருக்கிறது. பேக்வர்ட்-கம்யூனிட்டீஸ், பேக்வர்ட்-கேஸ்ட்ஸ் என்று போட்டிருந்தால் கரெக்ட்டாக இருக்கலாம். பேக்வர்ட்-கிளாசஸ் என்று வருகிறபோது ஒட்டு மொத்தமாக இருக்கிறது.

There are backwardness in Communities, Castes, Socially backward, Economically backward, Communally backward, Phychologically backward, Culturally backward and Morally backward.

இப்படி பலவிதமாக பிரித்து விடலாம். ஆகவே மொத்தமாக பேக்வர்ட்-கிளாசஸ் என்று போடுவதை தவிர்த்து பேக்வர்ட்-கம்யூனிட்டீஸ் என்று போடலாம். அதை சுப்ரீம் கோர்ட்டிலேயே சொல்லி விட்டார்கள். எவ்வளவு காலத்திற்கு இதை போட்டுக் கொண்டே இருக்கப் போகிறீர்கள்? ஒரு டீ லிமிட்டேஷன் பண்ண வேண்டும். யார், யார் பேக்வர்ட் என்பதை டிசைட் பண்ணுங்கள் என்று Supreme Court has given a direction. அந்த டைரக்ஷனை வைத்துக் கொண்டு தான் தமிழ் நாட்டிலே அம்பாசங்கர், ஐ.ஏ.எஸ். அவர்களை தலைவராகப் போட்டு யார், யார் பேக்வர்ட் கம்யூனிட்டீஸ் என்பதை டிசைட் பண்ணுங்கள் என்று கொண்டு வந்தோம். அதற்குள்ளே தமிழ் நாட்டிலே என்ன ஆகிக் கொண்டிருக்கிறது என்றால், தொண்டை மண்டலம் துளுவ வேளாள முதலியார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு மதம் மாறி அகமடிய முதலியார், செங்குந்த முதலியார் என்று மாறிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் அயன் ரெட்டியார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் திடீரென்று கொண்ட ரெட்டியாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். செட்டியார்கள், நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தவிர மற்றவர்கள் தெலுங்குச் செட்டியார்கள்14 தேசம், 18 தேசம் செட்டியார்கள் என்கிறார்கள் ; வேளாள கவுண்டர்கள் எல்லாம் திடீரென்று வன்னிய கவுண்டர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். நாயுடுகள் எல்லாம், நாங்கள் நாமம் போட்டுக் கொண்டு வைஷணவர்களை விட ஓசத்தி என்று சொல்லிக் கொள்கிறவர்கள் நாங்கள் கவரை நாயுடு என்று மாறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பயங்கரமான மத மாற்றம், ஜாதி மாற்றம் தமிழ் நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. தினமும் காலையிலிருந்து நூறு பேர்களுக்கு தெரிந்தோ, தெரியாமலோ

1984 மார்ச் 28] [டாக்டர் கே. சௌரிராஜன்]

கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) மிச்சம்இருப்பது அய்யர்கள். பிள்ளைமார்கள், நாட்டுக்கோட்டை செட்டியார்கள் இப்படி மூன்று தான் ; இவர்களைத் தவிர மற்ற எல்லோரும், எம்.எல்.ஏ. உள்பட ஜாதி மாற்றத்தில் இருக்கிறார்கள். எதற்காக சொல்ல வருகிறேன் என்றால், பேக்வர்ட்னசை டிட்டர்மின் செய்கிறபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

The caste alone should not be the criterion. There should be another criterion. That is, economic criterion must also be enforced.

அப்படி புதியதாக நிலைமைகளை தமிழகத்தில் உருவாக்கிக் கொள்கிற வரையில் இந்த ஜாதி மாற்றங்கள் தினமும் நடந்து கொண்டே தான் இருக்கும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 'மோஸ்ட் பேக்வர்ட்' என்று சில பேர்களை வைத்திருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தன்னுடைய எண்ணங்களை சொல்கிறபோது என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு பெரும்பான்மையான சமுதாயம் வன்னியர் சமுதாயம். அதில் மோஸ்ட் பேக்வர்ட்டாக இருக்கிறார்கள் என்று வன்னிய குல சத்திரியாஸ் என்று கிளாசிபை செய்து வைத்திருந்தார்கள். ஆனால் பேக்வர்ட் லிஸ்ட்டில் அதிகமாக சேர சேர, இது நீண்டு கொண்டே போக போக, வன்னியகுல ரெப்ரசன்டேஷன் டைல்யூட் ஆகிப் போய் நிஜமாக அவர்களுக்கு ஏதாவதுகிடைக்கிறதா என்றால் இல்லையென்று தான் என்னைப் போன்றவர்கள் நினைக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் நாங்கள் எல்லாம் பார்வர்ட் -கம்யூனிட்டியில் இருக்கிறோம். நாங்கள் கேட்கவில்லை. ஆனால் லெஜிட்டிமேட்டாக கிடைக்க வேண்டியது அவர்களுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை ; குறிப்பாக, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் இருக்கிறவர்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்கிறபோது இந்த வன்னிய குல சத்திரியாசிற்கு ரெப்ரன்டேஷன் குறைந்து கொண்டே தான் போகிறது. அதோடு வருகிறபோது தந்தை பெரியார் அவர்கள் சொன்ன வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.

It is much better than what we are practising today.

அந்த நிலைமை உருவானால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. எங்களைப் பொறுத்தவரையில் பார்வர்ட் கம்யூனிட்டீஸில் இருக்கிறவர்களுக்கு வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வைத்தாலும் 2, அல்லது 3 பெர்சென்ட் கிடைக்கும். இப்போது இருக்கிற சிட்சுவேஷனை பார்த்தால் அவர்களுக்கு அது கூட கிடைக்காமல் இருக்கிறது. அந்த நிலைமையை தடுத்து நிறுத்த வேண்டும்.

ஆகவே பேக்வர்ட்னசை தீர்மானிக்கிறபோது கம்யூனிட்டீஸ், கேஸ்ட்ஸ் மட்டும் வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. அதையும் இங்கே சொன்னார்கள். பேக்வர்ட் கம்யூனிட்டீசில் வசதி உள்ளவர்கள் தான் மேலும், மேலும் வசதிகளைப் பெறுகிறார்களே தவிர கிராமப்புறத்தில் இருக்கிறவர்கள், அடித்தளத்தில் இருக்கிறவர்கள், பின்தங்கியவர்கள் முன்னேறுகிற நிலைமை இப்போது எங்கும் இல்லை என்பதாக தனது மனக் குறையை, மாண்புமிகு உறுப்பினர் மணி என்று நினைக்கிறேன், அவர்கள் சொன்னார்கள். இவ்வளவும் நிதர்சனமான உண்மை.

Now time has come, to start rethinking.

இது சரியானது, இந்த மாதிரிசெய்வது கரெக்ட் தானா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

(பிற்பகல் 1-10.)

தமிழ்நாடு பேக்வர்ட் ஸ்டேட்டாகிக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே எல்லோருமே பேக்வர்ட் ஆகிவிட்டால், திருப்பதியில் போய் மொட்டை யார் என்று கேட்டால் எப்படியிருக்குமோ, அப்படி இருக்கும். அப்புறம் பேக்வர்ட் கிளாஸ் என்பது பைத்தியக்காரத்தனமாகிவிடும் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக்குறிப்பிலே எனக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களை எடுத்துக்காட்டி, அமைச்சர் அவர்களிடத்தில் நான் விவரம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

One prize at State level to the value of Rs. 500 each is awarded to one boy and one girl belonging to Backward Classes and Denotified Communities who secure the highest marks in S.S.L.C. examination.

என்று போட்டிருக்கிறீர்கள். இது எஸ். எஸ். எல். சி-யிலே பேக்வர்ட் கிளாஸை சேர்ந்த மாணவன் அதிகமாக மார்க் வாங்கினால் தரப் போகிறீர்களா, அல்லது ஸ்டேட்டில் பர்ஸ்ட் ராங்க் வாங்கினால் மட்டும் தரப் போகிறீர்களா ? இதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1984 மார்ச் 28] [டாக்டர். கே. சௌரிராஜன்]

ஹாஸ்டல் கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 483 ஹாஸ்டல்கள் கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில், பல இடங்களில், இந்த பேக்வர்ட் கிளாஸ் ஹாஸ்டல் கட்டுவதற்கு நிதி வசதி இல்லாமல் இருப்பதால், வாடகைக் கட்டிடத்திலே அவற்றை வைத்து இருக்கிறீர்கள். அரசாங்கம் கொடுக்கும் வாடகை எவ்வளவு இருக்கும் என்பது நமக்கு எல்லாம் தெரியும். ஒரு இடத்தை அரசாங்கம் வாடகைக்கு எடுத்துக்கொண்டு விட்டது என்று சொன்னால், அந்த வீட்டுச் சொந்தக்காரர் எப்போது அரசு அதை காலி செய்யும் என்றுதான் பார்த்துக்கொண்டு இருப்பான். ஆகவே அவன் பெறுகின்ற வாடகையில் அந்த இடத்திற்கு மேற்கொண்டு வசதிகளோ அல்லது வெள்ளை அடித்துக்கொடுப்பது போன்ற வசதிகளோ செய்ய முடியாது. ஆகவே, அந்த தனியார் வீடுகளில் உள்ள ஹாஸ்டலில் வெள்ளை அடிப்பது என்பதோ, மற்ற சுகாதார வசதிகள் செய்வது என்பதோ நிச்சயமாக இருக்க முடியாது. ஆகவே, நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன்.

Why not we see that all the private buildings are acquired? We can make provisions to see that the buildings are acquired by the Government at a reasonable rate and pay the compensation to the owner.

இன்றைக்கு ஹாஸ்டல்கள் கட்டுவதற்காக 70 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் கட்டுவதற்காக எஸ்டிமேட் தயாரித்து, கட்டி முடிப்பதற்குள் பொருள்களின் விலை பன்மடங்கு உயர்ந்துவிடும். ஆகவே, இந்தத் தொகைக்குள் கட்டமுடியாது. ஆகவே, ஆதற்காக

We must try to see that all the buildings and all the hostels located in private houses are compulsorily acquired.

அதற்காக ஒரு ப்ரொவிஷன் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

டிரெயினிங் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே சொல்கிறபோது, அவர்களுக்கு கொடுக்கப்படுகிற டிரெயினிங் என்னவென்று சொன்னால், பாக்வர்ட் கம்யூனிட்டியை பொறுத்தவரையில், இன்டஸ்டிரியல் டிரெயினிங் சென்டர்கள்தான் தெரியும் போல் இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Industrial Training Centres are functioning for the Welfare of Denotified Communities and Backward Classes. Training Centres in Tailoring and Ready-made Garments. Tailoring and Embroidery Centre and so many other Tailoring Centres.

அந்தத் தொழில் தவிர வேறு தொழில் அந்தப் பெண்களுக்கு தெரியாதா ?

There are so many jobs. You can train them in Carpentry. Gold-smithy, Welding, Electrical rewinding and Automible Engineering

என்று இந்த மாதிரி பல தொழில்கள் இருக்கிறபோது, அந்தத் துறை ஏன் இந்த டெயிலரிங் பயிற்சியை மட்டும் கற்றுக்கொடுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. வேறு எந்தத் தொழிலையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பெண்கள் என்றால் இன்றைக்கு எலெக்ட்ரானிக் இன்டஸ்டிரியில் எத்தனையோ பேர் வேலை செய்கிறார்கள். மெக்கானிக்கல் எஞ்சினீயரிங் படித்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆகையால்,

You must try to train them in various trades and not in tailoring and embroidery only.

அதுவும் பாக்வர்ட் கிளாசுக்கு என்று சொல்கிறீர்கள். ஒரு ஐயர் பெண், ஒரு முதலியார் பெண் ஒரு பார்வர்ட் கம்யூனிட்டிப் பெண் தையல் வேலை கற்றுக்கொடுக்க வருகிறேன் என்று சொன்னால் அதற்கு ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது? இந்த மாதிரி தையல் வேலை கற்றுக்கொடுக்கிறேன், பிரம்பு பின்னுகிற வேலை கற்றுக்கொடுக்கிறேன், கூடை பின்னுகிற வேலை கற்றுக்கொடுக்கிறேன் என்று சொல்லுகிறபோது.

The moment a person is prepared to set up a menial job, where is the question of community, whether it is backward or forward.

அதில் அர்த்தமே இல்லை. ஆகவே, இந்த அடிப்படையில் பார்க்கும்போது

Backward Classes Department must take over some of the Social Welfare activities like training the people in different trades and different industries, so that all the people particularly women, who are economically backward are also included in that.

என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாண்புமிகு துணைத் தலைவர் சம்பந்தமாக ஒரு சப்ஜெக்ட் வந்திருக்கிறது. அதாவது,

"Government have decided to select 20 law graduates from among Backward Classes and Denotified Communities each year and place them under senior and famous Lawyers who are specialists in different fields for 3 years so that the candidates may secure sufficient experience."

நானும் பார்த்தேன், எனக்கு விளங்கவே மாட்டேன் என்கிறது

Who is senior? Who is famous?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேசில் சிக்கிக் கொண்டவர்களுக்குத்தான் யார் யார் சீனியர், யார் யார் ஃபேமஸ் என்று தெரியும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: அதற்காக நான் கேசில் சிக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறீர்களா? நான் ஒரு ஆர்பிட்டரியாக ஒரு 'வார்னிங்' மாதிரி சொல்கிறேன். ஃபேமஸ் அன்ட் சீனியர் என்று சொல்லும்போது எங்களைப் போன்றவர்களைப் போட்டுவிடக்கூடாது, வேண்டியவர்களைப் போடுகிறார்கள் என்ற தவறான எண்ணம் வரக்கூடாது என்பதற்காக முன் எச்சரிக்கையாக

'Lawyer who pays the maximum income tax'

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

என்றாவது வைத்துக்கொள்ளுங்கள். கேஸ் இல்லாத வக்கீல் டாக்ஸே கட்டுவதில்லை; இன்றைக்கு பாதி வக்கீல்கள் டாக்ஸ் எதுவும் கட்டுவதே கிடையாது. அடுத்தபடியாக சப்ளை ஆஃப் டூல்ஸ் என்பதை அழகாகப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சிதம்பரம் கூட சொன்னார், இது குறைந்து கொண்டு வருகிறது என்று. ஒரு பார்பருக்கு ஒரு கத்தி, அடப்பம் கொடுத்தால் அதை 10 வருஷத்துக்கு வைத்துக் கொள்வார். டோபிக்கு ஒரு இஸ்திரி பெட்டி கொடுத்தால் அதை 10, 15 ஆண்டு வைத்திருப்பார். அதனால், எண்ணிக்கை குறைந்திருக்கிறது. 8,000, 7,445, 6,250 என்ற அளவில் குறைந்து வந்திருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலே இப்படி சொல்லியிருந்தாலும், எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் வருஷாவருஷம் வாங்கியவர்கள்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது. அதை கண்காணிக்க வேண்டும். போன வருஷம் கத்தி, அடப்பம் வாங்கிச் சென்ற பார்பர்தான் இந்த வருஷமும் வாங்குகிறார். போன வருஷம் இஸ்திரி பெட்டி வாங்கிச் சென்ற டோபி தான் இந்த ஆண்டும் வாங்குகிறார். புதிதாக வருகிறவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. இதிலே முறைகேடு இருக்கிறது, டூப்ளிகேஷன் இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் அதைக் கொஞ்சம் கவனித்து, கண்காணிக்க வேண்டும்.

இறுதியாக, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று பேசுகின்ற நேரத்தில் இன்னும் அதிகமான தொகையை அடுத்த ஆண்டுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, கடைசியாக 'வைன்டிங் அப்' செய்து பேசக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்திருப்பதால், பல நண்பர்கள் பேச முடியாத காரணத்தால் இரண்டு தொகுதிகள் பற்றிய விவரத்தை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள், அதைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை. எல்லாம் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்த்து, மேலும் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும், ஆசிரியர்கள் மாணவர்கள் உட்கார தேவையான மர இருக்கைகளையும் செய்துதர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதியில் திருமங்கலத்திலுள்ள அரசினர் கள்ளர் மாணவியர் இல்லத்திற்கு புதிய விடுதி கட்டடம் 9 இலட்சம் ரூபாய்ச் செலவில் சென்ற ஆண்டு கட்டப்பட்டது. இந்த மாணவியர் இல்லத்தில் இன்னும் 200 பேர்கள் கூடுதலாகத் தங்க வசதி இருக்கிறது. எனவே அந்த இடத்தில் வரும் ஆண்

1984 மார்ச் 28] [டாக்டர் கே. சௌரிராஜன்]

டில் மேலும் 200 டிநோட்டிபைடு கள்ளர் சமுதாயத்தை சேர்ந்த மாணவியர்களைச் சேர்த்து, அவர்கள் தங்குவதற்கு உடனடியாக வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள் றேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்கிறேன். இந்தப் பள்ளிகளை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போது தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். பிராமணர் சமுதாயம் முன்னேறுவதற்குக் காரணம் என்னவென்றால், பிராமணர்கள் படித்தவர்கள், பிள்ளைகள் வீட்டுக்கு போனவுடன் அந்த குழந்தைகளை படி, படி என்று தாய்மார்கள் சொல்வார்கள்.

(பிற்பகல் 1-20)

அதேபோல் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், அந்த ஹாஸ்டலில் படிக்கிறார்கள். நலிவுற்ற நிலைமையில் உள்ள பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த பெண்கள் மிகத் தரமான, நல்ல முறையிலே, மிகக் கெட்டிக்காரர்களாக விளங்குகிறார்கள், கல்வியில், அந்த ஹாஸ்டலில் உள்ள வசதிகளைப் பார்த்தால், அதிகமாக கிட்டத்தட்ட 75 சதவீதம் பிற்பட்ட மாணவர்களுக்கு இருக்கிறதே தவிர, பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவிகளுக்கு இல்லை என்று தெரிகிறது. தந்தை பெரியார் அவர்களின் வாரிசாகத் திகழ்கின்ற நீங்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவியர்களுக்கு அதிகமான, தரமான கல்வியை அளித்தால் தான், நிச்சயமாக சமுதாயத்திலே ஒரு புரட்சிக்கு வகை செய்தவர்களாக ஆவீர்கள் என்று சொல்லிக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இன்று (28—3—1984) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்கப் பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

29—3—1984 (வியாழன்) முதல் 31—3—1984 (சனி) முடிய.	ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படி-மாற்றம் ஏதும் இல்லை.

பேரவைத் துணைத் தலைவர்

(பேரவைக் கூட்டம் 31—3—1984 அன்று ஒத்திவைக்கப் பட்டு மீண்டும் பேரவை 9-4-1984 அன்று காலை 10.00 மணிக்குக் கூட்டப்படும். அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. 9—4—1984 முதல் மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் எடுத்துக்கொள்ளப்பெறும்.)

9—4—1984 (திங்கள்) ..	எண். 5 — முத்திரைத் தாள்கள்— நிர்வாகம் எண். 6— பத்திரப் பதிவு. எண். 10— பால் வழங்கு திட்டங்கள்.
10—4—1984 (செவ்வாய்) ..	எண். 12— தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.
11—4—1984 (புதன்) ..	எண். 35— நுகர் பொருள் வழங்கல்.
12—4—1984 (வியாழன்) ..	எண். 21— மீனளம். எண். 27— கதர்த் தொழில்.
13—4—1984 (வெள்ளிக்கிழமை)	தமிழ் வருடப் பிறப்பு— விடுமுறை.
14—4—1984 (சனிக்கிழமை)	மகாவீர் ஜயந்தி— விடுமுறை.
15—4—1984 (ஞாயிற்றுக் கிழமை).	விடுமுறை.
16—4—1984 (திங்கட்கிழமை)	எண். 25— சின்கோனா. எண். 45— காட்டுவளத் துறை. எண். 47— செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல். எண். 55— காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.
17—4—1984 (செவ்வாய்) ..	எண். 18— மருத்துவம். எண்.19— பொது சுகாதாரம். பேரவை மாலையிலும் கூடும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(பேரவைத் துணைத் தலைவர்).

18—4—1984 (புதன்)	..	எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். எண். 39—சாலைகளும், பாலங்களும். எண். 53—சாலைகள் —பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
19—4—1984 (வியாழன்)	..	எண். 23—கூட்டுறவு. எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்.
20—4—1984 (வெள்ளி)	..	தூய வெள்ளிக்கிழமை விடுமுறை.
21—4—1984 (சனி)	..	பேரவைக் கூட்டம் இல்லை.
22—4—1984 (ஞாயிறு)	..	விடுமுறை.
23—4—1984 (திங்கள்)	..	எண். 33—வீட்டுவசதி. எண். 37—பொதுப் பணிகள் கட்டிடங்கள். எண். 38—பொதுப் பணிகள் —பணியாளரைப்பும், கருவிகளும், தளவாடமும். எண். 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.
24—4—1984 (செவ்வாய்)	..	எண். 36—பாசனம். எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.
25—4—1984 (புதன்)	..	எண். 48—கிராமத் தொழில்கள். எண். 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

(பேரவைத் துணைத் தலைவர்)

26—4—1984 (வியாழன்) ..	எண். 7—மாநிலச் சட்ட மன்மன்றம். எண். 8—தேர்தல்கள். எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். எண். 43—பல்வகை. எண். 57—பல்வகை மூலதனச் செலவு. எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு —அறிமுகம் செய்தல்
27—4—1984 (வெள்ளி)	நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.
28—4—1984 (சனிக்கிழமை)	மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
29—4—1984 (ஞாயிற்றுக் கிழமை)	விடுமுறை.
30—4—1984 (திங்கட்கிழமை)	மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம். சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து, நிறைவேற்றுவதற்கான நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

1984 மார்ச் 28

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம் மு. அப்பாத்துரை ஆகிய வர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,98,64,000 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 29-3-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண் 32—பிற்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

99. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1984-85 (ஆங்கிலம்.)

இணைப்பு.

(49-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பிற்பட்டோர் நலத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 32.

1984-85.

I. முன்னுரை.

மானியக் கோரிக்கை எண் 32 ''பிற்பட்ட வகுப்பினர் நலம்'' என்பதன் கீழ் ரூ. 10,98,64,000 வழங்குமாறு நான் முன்மொழிகிறேன்.

2. பிற்பட்டோர் நலத்துறை 1969 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதுவரை ஆதிதிராவிடர் நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ஆகியோர் தொடர்பான பணிகள் இப்புதிய துறைக்கு மாற்றப்பட்டன.

3. பிற்பட்டோர் நலத்துறை இந்திய ஆட்சிப் பணி தரத்தில் உள்ள ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்ட அளவிலான பணியை மாவட்ட பிற்பட்ட வகுப்பினர் நல அதிகாரிகளும், மதுரை மாவட்ட தனி துணை ஆட்சியரும் (கள்ளர் சீர்திருத்தம்) கவனிக்கின்றனர். இவர்களுக்குத் தனி அலுவலகங்கள் உள்ளன. அவர்கள், மாவட்ட ஆட்சியர்களின் நேரடி மேற்பார்வையில் பணிபுரிகின்றனர். அவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

4. பிற்பட்ட வகுப்பினரின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறுவதற்காக, பிற்பட்டோர் நலம் குறித்த தனி மானியக் கோரிக்கை ஒன்று 1971 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. 1967-68 ஆம் ஆண்டில் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1,61,40,000 சிறிது சிறிதாக அதிகரிக்கப்பட்டு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 10,98,64,000 ஆக உயர்ந்துள்ளது. பிற்பட்ட வகுப்பினரின் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள முன்னேற்றத்தை இது குறிப்பிடுகிறது.

1984 மார்ச் 28]

5. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

II. கல்வி.

(i) **பள்ளிகள்.**—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக தமிழ் நாட்டில் 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளின் மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் 50,453 மாணவ மாணவியர் படிக்கின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 8-ம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு ஆகியவற்றுக்கு நடைபெறும் ஆண்டுத் தேர்வில் மிக அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தபடி அதிக மதிப்பெண்களும் பெறும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் வழங்குவதாக ஒவ்வொராண்டும் ரூ.4,000 வழங்கப்படுகிறது. இது தவிர, மாநில அளவில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தை சேர்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள பரிசு வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு

எஸ்.எஸ்.எல்.சி.	முதல் பரிசு	..	ரூ. 100
	இரண்டாம் பரிசு	..	ரூ. 50
எட்டாம் வகுப்பு ..	முதல் பரிசு	..	ரூ. 50
	இரண்டாம் பரிசு	..	ரூ. 10

பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர்களிடையே மேல்நிலைப்பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள இரு முதல் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு 1983-84 ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வந்துள்ளது. இதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 7,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 28

முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம்

கிராமப் பகுதிகள் மற்றும் நகர்புற பகுதிகள் ஆகியவற்றில் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை நடத்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள் அனைத்திலும் 1—7—1982 லிருந்து முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம் செயல்பட்டுத்தப்பட்டு வருகிறது. 5 வயது முதல் 9 வயது வரையும் மற்றும் 10 வயது முதல் 14 வயது வரையும் உள்ள எல்லா மாணவ மாணவிகளும் முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டத்தின்கீழ் உணவு பெறுகிறார்கள். இத் திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டிற்காக ரூ. 23,82,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள்

மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு அரசு பாட நூல் நிறுவனத்தினால் வெளியிடப்படும் பாட புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

உடைகள் (பள்ளிகள்)

எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ மாணவிகளுக்கும் இரு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 25,46,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) அரசு மாணவர் இல்லங்கள்: கல்வித் துறையில் பின்தங்கிய வகுப்பையும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தையும் சேர்ந்த மாணவர்களின் முன்னேற்றத்திற்காக பிற்பட்டோர் நலத்துறை, மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாத பெற்றோர்கள் உள்ள மாணவ மாணவியர் இந்த இல்லங்களில் சேருவதற்குத் தகுதியுடையவராவர். பிற்பட்ட வகுப்பையும், மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தையும் சேர்ந்த மாணவ மாணவியரின் பயனுக்காக நடத்தப்பட்டு வரும் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 28]

1983-84 ஆம் ஆண்டு வரை பிற்பட்ட வகுப்பையும், மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தையும் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக பிற்பட்டோர் நலத்துறை *483* மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. இவற்றில் *62* இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியருக்கும், ஒன்று தொழில் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. *1984-85* ஆம் ஆண்டில் ரூ. *23,79,000* செலவில் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்காக மேலும் *40* மாணவர் இல்லங்களும் மற்றும் ரூ. *7,00,000* செலவில் வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக *2* இல்லங்களும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல்

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இம்மாநகரிலுள்ள புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மூலமாக முறையான பயிற்சி பெறும் பொருட்டு ரூ. *500*-க்கு மேற்படாத கல்விக் கட்டணத்தை அவர்களுக்கு வழங்குவதற்கும், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள மாணவர்கள் சென்னை மாநகரிலுள்ள பயிற்சி வசதி களைப் பெற இயலும் வகையில் சென்னை மாநகரில் (மேலே குறிப்பிட்டவாறு) *50* மாணவிகளுக்கு ஒன்றும், *50* மாணவர் களுக்கு ஒன்றுமாக இரு இல்லங்களை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர விடுதியில் தங்காது பயிலும் *50* மாணவ, மாணவிகள் உதவி அளிக்கப்படுவார்கள். உயரளவு ரூ. *500*-க்கு உட்பட்டு கல்விக் கட்டணம் முழுவதையும் அரசு ஏற்கும். மேலும் உணவு தங்குமிட செலவுகள் அது தொடர்பான செலவுகளையும் அரசு ஏற்கும். இத்திட்டத்தின் மூலம் பயனடை வோரின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு *600* ஆகும். ஒரு காலாண்டில் *150* பேர் பயனடைவர்.

மரச்சாமான்கள்

கர்ணம் மேசை போன்ற மரச் சாமான்கள் வழங்குவதற்காக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்களுக்கும், மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் இல்லங் களுக்கும் *1984-85* ஆம் ஆண்டில் முறையே ரூ. *4,00,000* மும் ரூ. *50,000* மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவுச் செலவுகள்

1981-82 ஆம் ஆண்டிலிருந்து மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ, மாணவியருக்கு பின்வரும் உணவுச் செலவுகள் அனு மதிக்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

[1984 மார்ச் 28

(1)	மாநகர். (2)	வெளியூர். (3)
	ரூ.	ரூ.
1. கல்லூரி மாணவர் இல்லங்கள்	95	80
2. தொழிற்கல்வி மாணவர் இல்லங்கள்	95	80
3. பள்ளி மாணவர் இல்லங்கள்.	60	60

மாணவர் இல்லங்களைக் கட்டுதல்

தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்களைப் படிப்படியான முறையில் 50 இடங்களில் கட்டும் வேலையை எடுத்துக்கொண்டுள்ளது. முடிக்கப்பெறாத 7 இல்லங்களைக் கட்டி முடிப்பதற்கும் மற்றும் அரியலூரில் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) புதிதாக கட்டிடத்தை கட்டுவதற்கும் அரசு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 70,40,000 அனுமதித்துள்ளது. இதுவரை 35 மாணவர் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன.

சீருடைகள் வழங்குதல் (மாணவ மாணவியர் இல்லங்கள்)

1971-72 ஆம் ஆண்டு முதல், அரசு நடத்தும் பிற்பட்ட வகுப்பினருக்கான மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கும், இரண்டு ஜோடி சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில், இதற்காக 10,02,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பகுதிநேர போதனை ஆசிரியர்களை நியமித்தல்

மாணவர் இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது, பத்து மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு கூடுதலாக போதிய பதற்கு ஏறக்குறைய எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவப் இல்லங்ளிகலும் பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர்.

உணவு மானியம் வழங்குதல்

தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 47 மாணவர் இல்லங்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து உணவு மானியத்தைப் பெற தகுதியுடையவையாகும். சென்னை நகரம் மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள, இல்லங்களில் மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதமும், மற்ற இடங்களிலுள்ள இல்லங்களில் ரூ. 40 வீதமும், உணவு

1984 மார்ச் 28]

செலவுக்காக பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப் படுகிறது. உணவு மானியம் பெறும் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படுகிறது. இம்மானியச் செலவை ஏற்பதற்காக 1984-85ஆம் ஆண்டிற்கு 10,07,000 ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

(iii) படிப்பு உதவித் தொகைகள் :

பிற்பட்ட வகுப்பினை சேர்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால்தான் பிற்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பிற்பட்ட மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகை அளிக்கப் படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றை இலவசமாக கல்வித் துறை அளிக்கிறது. இந்த இனங்களைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இருந்தால் பிற்பட்ட நலத்துறையினரால் வழங்கப்படும் படிப் உதவித்தொகையைப் பெறுவதற்கும் இம் மாணவர்கள் தகுதி உள்ளவர்களாவார்கள். பிற்பட்ட வகுப்பினரைப் பொறுத்த மட்டில், முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்ணிற்கு குறையாமல் பெற்றிருந்தால், அந்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஆனால், குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரிகள், தொழிற் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்பட்ட வகுப்பு, மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க அதிகார மளிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகையை விரைவில் அனுமதித்து வழங்கும் பொருட்டு முந்தைய ஆண்டு அனுமதித்த மொத்த உதவித் தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான தொகை கல்வி நிறுவனங்களின் முதல்வர்களிடம் உதவித் தொகை வழங்குவதற்காக கொடுக்கப் படுகிறது. இத்தொகை, உதவித் தொகை அனுமதிப்பதற்கான முறையான நடைமுறைகளின்படி சரிக்கட்டப்படுகிறது.

புதிதாக உதவித் தொகை கோரும் மாணவர்களுக்கு தகுதிக்கான அட்டைகள் பிற்பட்டோர் நலத்துறை அலுவலர்களின் மூலமாக கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன முந்தைய ஆண்டுகளில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை உதவித் தொகை வழங்குவதற்கு செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் கால்நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம், பட்டப்படிப்பு, சான்றிதழ் படிப்பு, பட்டயக் கணக்கர் படிப்பு, போன்ற மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய பாட வகுப்புகளுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த எவரும், மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எவரும் இந்தப் படிப்பு உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(iv) விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையில் அடங்கும் உணவு உறைவிட கட்டண வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் எண்.	பாடம்.	பின்தங்கிய வகுப்பினர்.	குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.
(1)	(2)	(3)	(4)
		(மாதம் ஒன்றுக்கு ரூபாய்)	
சென்னை மாநகரம் :			
1.	கலை, விஞ்ஞானம், சட்டம்	60	70
2.	மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள்.	60	75
3.	தொழில், தொழில் நுட்பக் கல்வி	50	60
வெளியூர் :			
1.	கலை, விஞ்ஞானம், சட்டம்	50	55
2.	மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மருத்துவம், இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள்.	55	70
3.	தொழில், தொழில் நுட்பக்கல்வி	45	50

1984 மார்ச் 28]

(v) படிப்புக் கட்டணச் சலுகைகள் :

மேல்நிலைப்பள்ளி வகுப்புக்கு மேல படிக்கும் மாணவர்களுக்கு கல்வித்துறையின் மூலமும், பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :—

வருமானம்.	மிகவும் பிற்பட்ட வகுப்பினர்.	குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.	பிற்பட்ட வகுப்பினர்.
(1)	(2)	(3)	(4)
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு	முழுக்கட்டணச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி.	முழுக்கட்டணச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி.	அரைச் சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி (பாதிப் படிப்புக் கட்டணம். உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.)
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு.	கல்வித்துறையிடமிருந்து சலுகை எதுவும் கிடையாது. மூன்று பிரிவினருக்கும் பாதிப்படிப்புக் கட்டணச் சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.		

(vi) கடன் உதவித் தொகை :

தொழிற்படிப்புகளை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர் — பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5001-லிருந்து ரூ. 10,000-க்கு உட்பட்டு இருந்தால் 1981—82 ஆம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு ரூ. 500 வீதம், கடன் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பை படிக்கும் காலம் முழுவதற்கும், ஐந்து ஆண்டிற்கு மிகாமல் உதவித்தொகை ரூ. 2,500ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய படிப்புகளைப் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு உணவு மானியம் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட சில குறிப்பிட்ட மாணவர் இல்லங்களில் தங்கி மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய படிப்புகளை படிப்பவர்களுக்கு, உறைவிட உதவித்தொகை வழங்கப்படுகிறது. இனம் II (iv)-ல் குறிப்பிட்டுள்ள விகிதங்களின்படி உணவு உறைவிட கட்டண வீதம் நிர்ணயிக்கப்படுகிறது.

[1984 மார்ச் 28

III. பயிற்சி வகுப்புகள்.

